**மாவீரர் நினைவாக...**

செந்தமிழ் மறவர்களின்
புதைகுழிகள்
செந்நிறப் பூக்களை
சிருஷ்டித்து விட்டன.
இனிமேலும்
கல்லறைகளில் மண்டியிட்டு
கண்ணீர் வடிக்காதீர்கள்.
சமாதிகளில் தொட்டு
சத்தியப்பிரமாணம்
செய்துகொள்ளுங்கள்
தேச வரலாற்றைத்
திருத்தி எழுதுவோம் என்று.

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 25 -11-1994

அன்பளிப்பு 40P




## லெப். சங்கர்

(செல்வச்சந்திரன் சத்தியநாதன்) தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த முதல் விடுதலைப்புலி போராளி.

தமிழீழ மண்ணில் முத்தாக 12-06-1961
தமிழீழ விடுதலையின் வித்தாக 27-11-1982



கார்த்திகை 27




1994

## 2 ஆம் லெப். மாலதி

(பேதுரு சகாயசீலி) தமிழீழப் போரில் வீரச்சாவடைந்த முதல் பெண் விடுதலைப்புலி போராளி.

தமிழீழ மண்ணில் மலராக 04-01-1967
தமிழீழ மண்ணின் வித்தாக 10-10-1987



### போற்றப்படவேண்டிய பண்பாடாகட்டும்

தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்வுக்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, தமிழீழ மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதும் நினைவு நாளே 'மாவீரர் நாள்' ஆகும். எம் மாவீரர்களின் ஈகம் (தியாகம்) அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகங்கள், கனவுகள் யாவும் மறக்கப்பட முடியாதவை, புனிதத்தன்மை வாய்ந்தவை. காலம் காலமாக நினைவு கூரத்தக்கவை. மாவீரர்களை நினைவுகூரல் என்பது, ஒரு சம்பவமாக மட்டும் இருந்துவிடாது தமிழீழ மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், போற்றப்பட வேண்டிய பண்பாடாகவும் வளரட்டும்.

- தமிழீழ மாவீரர் பணிமனை, தமிழீழம் -

# சந்திரிகாவின் அரசும் போர் நடவடிக்கைகளுக்கே ஊக்கம்!

## ✡ 538 கோடி 49 இலட்சம் ரூபா போருக்கு ஒதுக்கீடு!

சந்திரிகா பண்டாரநாயக்காவை ஜனாதிபதியாகக் கொண்டுள்ள சிறீலங்காவின் புதிய அரசும் போர் நடவடிக்கைகளுக்குத் தாராளமாக ஆதரவு வழங்கத் தொடங்கியுள்ளது. வடக்கு - கிழக்கில் நடைபெறும் போரை வேகப்படுத்துவதற்காக 538 கோடியே 49 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ள சிறீலங்கா அரசும், இதனிலும் அரைவாசிக்கும் குறைவான தொகையினையே - சுமார் 225 கோடி ரூபாவினையே இலங்கை முழுவதற்குமான இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வுக்கு ஒதுக்கியுள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், ஆயுதங்களையும், தளபாடங்களையும், தொழில்நுட்பங்களையும் வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்வதற்கென 43 கோடியே 76 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாவை புதிய அரசு வழங்கியுள்ளது.

அத்துடன் விமானப்படையின் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யவென, மேலதிகமாக 59 கோடி ரூபாவை வழங்க இணங்கியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, 1970 - 1977 இல் சிறீலங்கா சுதந்திரக்கட்சி பொலிசாருக்கு அதிக அதிகாரங்களை வழங்கி, பொலிசைக் கொண்டு இராணுவத்தின் செயற்பாடுகளை செய்வித்தமையை நினைவு கூறக் கூடிய முறையில் பொலிசாரின் தேவைகளுக்கு என நூறு கோடி ரூபா வழங்கப் படவுள்ளது. இதில் 26 கோடி 34 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா தமிழீழ எல்லைப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள "பிளட்டூன்ஸ்" எனும் போர் அணிகளைப் பலப்படுத்த செலவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# இலங்கைத்தீவிலுள்ள தமிழர்களையே உலகு, தமிழன் என அறிந்துள்ளது

## தமிழின்பக் கண்காட்சியில் தமிழ்ச்செல்வன் உரை

"இன்று உலகிலே தமிழன் என்றால், இலங்கைத்தீவிலே வாழும் தமிழர்களாகிய எம்மையே உலகம் அறிந்துநிற்கிறது. அதற்குக்காரணம் எமது தேசியத் தலைவரின் கீழ், எமது மக்களின் எழுச்சியும் எமது மாவீரர் ஈகமும் போராட்ட உறுதியும், இன்றைய வளர்ச்சியுமே ஆகும்". இவ்வாறு அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற 'தமிழின்பக் கண்காட்சி' இறுதிநாள் நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

"இந்தக் கண்காட்சியிலே பார்த்திருப்பீர்கள்; சோழ மன்னனுடைய ஆட்சிக் காலத்திலே எமது இனத்தின் எழுச்சியும் வீரமும் எமது இனத்தின் வளர்ச்சியைக் காட்டிநிற்கின்றது.

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இன்று தமிழன் எழுச்சி பெற்றுள்ளான். நாம் எமக்கு என்றொரு நாட்டை உருவாக்குவதற்காகப் போராடிக்கொண்டிருக்கின்றோம். இதனால் இன்று உலகிற்கு இங்கேயும் ஓர் இனம் - தமிழினம், ஒரு வீரம் செறிந்த - எழுச்சியுள்ள -ஆற்றல் உள்ள ஓர் இனம் இருக்கின்றது என்பதை எமது போராட்டம் பறைசாற்றி நிற்கிறது.

இனி உலகிலே தமிழன் என்றால், இந்தியத் தமிழரைச் சொல்லமாட்டார்கள். இலங்கைத்தீவிலே இருக்கின்ற தமிழர்களையே தமிழர் என்று சொல்வார்கள். இதற்குக் காரணம், எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலும், எமது மக்களின் எழுச்சியும், மாவீரர் ஈகமும், போராட்ட உறுதியும், இன்றைய வளர்ச்சியுமே ஆகும்.

நிச்சயமாகப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு எமது இனம் எழுச்சிபெற்றுள்ளது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு எமது இனத்துக்கென்று ஒரு தலைவர் கிடைத்திருக்கின்றார். இந்த எழுச்சியான காலகட்டத்திலேயே -இந்த எழுச்சியின் உச்சக்கட்டத்திலேயே, எமது இனம்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்ட பொருட்கள் சிறீலங்கா அரசால் ஏலம்

சிறீலங்காவின் புதிய அரசு தான் தமிழ்ப்பகுதிகளுக்கான பொருண்மியத் தடைகளைத் தளர்த்தி விட்டதாக அறிவித்து வருகிறது. அதேவேளை இவ் அரசின் உத்தரவின்கீழ், யாழ் பல்கலைக்கழகத்துக்கு என அனுப்பப்பட்டு, சிறீலங்காவின் கெடுபிடிகளால் கொழும்புத்துறைமுகத்தில் தேங்கிக்கிடந்த 184 பொதிகள், ஏலத்துக்கு விடப்படவுள்ளது. இப் பொதிகளில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கென வெளிநாடுகளில் இருந்து தமிழர்களும், நிறுவனங்களும் அனுப்பிவைத்த பல்வேறுவகையான கல்விச் சாதனங்கள் உள்ளன. இவற்றை யாழ் பல்கலைக்கழகத்திடம் கையளிக்காமல், துறைமுகத்தில் அகற்றப்படாமல் இருந்த பொருட்கள் என்ற பெயரில் இவற்றை ஏலத்துக்கு விடும் சீறிலங்கா அரசின் செயலானது, அதனுடைய சுயரூபத்தை வெளிக்காட்டுவதாக அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# அரசின் போர் நிறுத்த முயற்சியால் படையினர் தரப்பில் பெரும் நெருக்கடி

## 'சண்டே ஐலண்ட்' அரசியல் விமர்சகர்

விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்தம் ஒன்றைக்காண அரசு முயல்வது, அரச படைகளுக்கும் அவர்களோடு இணைந்துள்ள ஏனைய தமிழ்க் குழுக்களுக்கும் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாக 'சண்டே ஐலண்'டின் அரசியல் விமர்சகர் தாரகி எழுதியுள்ள 'யாருக்கு போர் நிறுத்தம் தேவை' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"போர் நிறுத்தம் ஏற்படின், வடக்கில் உள்ள படை முகாம்களுக்கு வெளி எல்லைகளில், புலிகள் தம்மைப் பலமாக்கிக்கொண்டு விடுவர் என வடபகுதி அதிகாரிகள் அஞ்சுகின்றனர். அத்துடன் படையினரின் கட்டுப்பாட்டினுள் உள்ள மன்னார் தீவு, வவுனியா நகர், கிழக்கு நகர்ப்புறங்கள் என்பனவற்றினுள்ளும் ஆயுதங்கள் ஏதுவுமின்றி புலிகள் நுழைந்துவிடலாம். மட்டக்களப்பு வாவியின் மேற்குப் பகுதி விவசாய நிலப்பகுதியில், படைகளும் புலிகளும் அதிகமான நடமாட்டம் இருக்கும் திட்டமிட்ட தாக்குதல் தவிர இருதரப்பும் இங்கு விலகியே நடக்கவேண்டிவரும்.

கிழக்கில் இப்போது, இராணுவத்துடன் இணைந்து செயற்படும் தமிழ் குழுக்களின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுவிடும். ஒரு இரவிற்குள்ளேயே இப்பகுதியின் நாயகர்களாக புலிகள் மாறிவிடுவர். போர்நிறுத்தம் ஒன்று ஏற்பட்டால், அதனால் வடபகுதியில் இராணுவமும் கிழக்கில் புலிகளும் நன்மை பெறுவர்.

எனவே போர் நிறுத்த விடயம் தொடர்பாக அரசியல் அதிகார வட்டாரங்களுடன் அரசு பேசி முடிவுகள் எடுப்பதை விடுத்து இராணுவ தொழில்சார் துறையினருடன் அரசு பேசி முடிவுகளை எடுக்கவேண்டும்" என்று தாரகி மேலும் குறிப்பிட்டுள்ளார். ■

# யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதாக ஆயுத பேரம் மூலம் தரகுப்பணம்

## - புதிய அரசு தடுத்ததாக சந்திரிகா தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக என்று கூறி, பெரும் ஆயுதப்பேரம் மூலம் பெருமளவு தரகுப்பணம் பெறமுயற்சி நடந்துள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக, திருமதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், சுமார் 3000 கோடி ரூபா பெறுமானமுள்ள இரகசிய ஆயுதபேரம் ஒன்றை புதிய அரசு தடுத்துள்ளது எனக்குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கத்திற்காக, இராணுவ உபகரணங்களைக் கொள்வனவு செய்கின்றோம் என்று காரணம் காட்டி பெருமளவு பணத்தை இவர்கள் கமிசனாகப் பெற இருந்தனர் என மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஐ. தே. க அரசு ரஸ்யாவுடன் மேற்கொண்ட ஆயுத கொள்வனவு ஒப்பந்தத்தை, புதிய அரசு பதவி ஏற்றதும் ரத்துச் செய்தது குறிப்பிடத்தக்கது. ■

# அரசு முன்பே போரை நிறுத்தியிருப்பின் கௌரவமாக இருந்திருக்கும்

"சிறிலங்கா அரசு முன்வந்து முதலிலேயே போர் நிறுத்தம் அறிவித்திருந்தால், அது அரசிற்கு கௌரவமாக இருந்திருக்கும்" என, அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிப்பதாக 'ராய்ட்டர்' செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்புலிகள் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நடத்திய தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மேலும், இப்போது விடுதலைப் புலிகள் பல தாக்குதல்கள் மூலம் தரும் அழுத்தத்தினால் அரசு, போர் நிறுத்தத்திற்கு இணங்குவது பின்னடைவையும், புலிகளின் அழுத்தத்திற்கு அரசு பணிவதையும் காட்டும் எனவும் 'ராய்ட்டர்' குறிப்பிட்டுள்ளது. ■

# போர் நிறுத்தம் இல்லாமையினாலேயே புலிகள் கப்பலை தகர்த்தனர்

## - முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

"மன்னார் தீவுப்பகுதியும் ஆனையிறவு இராணுவ முகாமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ கேந்திர நிலையங்கள். எனவே இம்முகாம்களுக்கான உணவு, மற்றும் பொருட்கள் வழங்குவதைத் தடுப்பதன் மூலம், இப்படையினரை பலவீனப்படுத்தும் நோக்குடன், விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் கப்பலை தகர்த்தனர்" என, முன்னாள் ஐ. தே. க பிரதமரும் தற்போதைய கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரசிங்கா தெரிவித்துள்ளார்.

"தற்போது போர்நிறுத்தம் இல்லாததனால் தொடர்ந்து போர் நடைபெறுகின்றது. எனவே தான் கப்பல்கூட தகர்க்கப்பட்டது. இக்கப்பல் ஆனையிறவு, மன்னார்தீவு இராணுவத்தினருக்குப் பொருட்களை விநியோகித்து வந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர், தமது நிலையைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். பலமான நிலையில்தான் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என பிரெஞ்சுவீரன் நெப்போலியன்கூட கூறியுள்ளார். உணவும் ஏனைய பொருட்களும் இன்றி இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லமுடியாது. எனவே விடுதலைப் புலிகளின் இலக்கு மன்னார், ஆனையிறவு முகாமிற்கு உணவும், ஏனைய பொருட்களும் வருவதைத் தடுப்பதேயாகும்.

இனப்பிரச்சினை எப்படியும் அரசியல் ரீதியில் தீர்க்கப்பட வேண்டியதுதான். போரினால் விடுதலைப் புலிகள் முற்றாக தோல்வி அடைந்தார்கள் என்றும், இராணுவம் பலமான நிலையில் வடக்கு -கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் நாம் கூறுகின்றோம். ஆனால் ஒன்று, இப்பிரச்சினைக்கு அடிப்படை விடயங்களை ஆராய்ந்து அதற்கு ஒரு தீர்வு காணப்படவேண்டும். அப்படியில்லாவிட்டால் இப்பிரச்சினை தொடர்ந்தும் நீடிக்கும்" எனத் தெரிவித்தார். ■

# முன்னாள் அமைச்சர் அபுசாலியைக் கைதுசெய்ய உத்தரவு

கடந்த பொதுத்தேர்தலன்று சட்டத்தரணி ரபீக் என்பவரைத் தாக்கி, அவரின் வாகனத்தைச் சேதப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜனாப் எம். எல். எம். அபுசாலியைக் கைதுசெய்ய, பலாங்கொட மாவட்ட நீதிபதி பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

அமைச்சர் அபுசாலியினதும் வேறு நால்வரினதும் கடவுச்சீட்டுக்களை இதுதொடர்பாகப் பறிமுதல் செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். ■

# கடற்படை பலத்தை அதிகரிக்க அரசுக்கு ஆலோசனை

"வடக்கில் மாரிகாலம் தொடங்கியுள்ள நிலையில், விடுதலைப் புலிகள் மாறி மாறி கடற்படையினரைத் தாக்குவது, தரையில் உள்ள படையினருக்கான விநியோகத்தை துண்டிக்கவே" என 'சண்டே ஒப்சேவர்' குறிப்பிட்டுள்ளது. 'படையினர் விநியோகம் மீது தாக்குதல்' என்ற தலைப்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடல் விநியோகத்தைத் துண்டித்து, ஆனையிறவு -வெற்றிலைக்கேணி, பலாலி, பூநகரி படைத்தளங்களை நெருக்கடிக்குள்ளாக்கி பேச்சுவார்த்தைகளின்போது பலமான நிலையில் இருந்து பேரம்பேச, விடுதலைப் புலிகள் எண்ணியுள்ளதாகவும் அச்செய்திதாள் சுட்டிக்காட்டியுள்ளது.

"குளத்தில் உள்ள மீனுக்கான ஓட்சிசன் விநியோகத்தை துண்டிப்பதுபோல் புலிகள் செயற்படுகின்றனர். சமாதானப் பேச்சுக்களை அரசு மேற்கொண்டாலும் கடல் பிரதேசம் கடற்புலிகளின் ஆதிக்கத்திற்குள் வீழ்ந்துவிடாது தடுக்க, அரசு கடற்படையைப் பலமாக்கவேண்டும். தீவாக இருக்கும் நாட்டிற்கு கடற்படையின் அவசியம் உணரப்படவேண்டும்" என்றும் அச்செய்தித்தாளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## அயல் நாட்டுச் செய்திகள்

# எம்பிலிப்பிட்டிய மாணவர் விவகாரம் வடபகுதி சிப்பாய் மீது பொலிசார் விசாரணை

எம்பிலிப்பிட்டிய மாணவர்கள் காணாமற்போன விவகாரம் தொடர்பாக, தற்சமயம் வடபகுதி முகாமில் உள்ள ஒரு இராணுச் சிப்பாய் விசாரிக்கப்படவுள்ளார். பொலிஸ் அதிகாரி சந்திரசேன தலைமையில் இயங்கும் சிறப்பு பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்

# புலிகளுடன் பேசுவதை உலகவங்கி வரவேற்கின்றது

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக்கொண்டுவருமுகமாக, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருப்பதை, உலகவங்கி வரவேற்கும் என உலகவங்கியின் தென்கிழக்காசிய உபதலைவர் தெரிவித்துள்ளார். தென்னாசியாவில் பொருண்மியச் சீர்திருத்தங்களை செய்வதற்கு இலங்கை பொருத்தமான நாடெனினும் சமாதானம் ஏற்படாவிடத்து, இது சாத்திய மில்லை" எனவும் தெரிவித்துள்ளார். ■

## சுவிசில்

# 2 ஆம் லெப். மாலதியின் நினைவு நாள்

**22. 10. 94** அன்று சுவிட்சலாந்தில் கன்ரோன் வலே (CANTON VALAI) மாநிலத்தில் உள்ள சியோன் (S-ION) என்னும் இடத்தில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் களப்பலியான 2 ஆம் லெப். மாலதியின் 7 ஆம் ஆண்டு ஞாபகார்த்த எழுச்சி விழா நடைபெற்றது. இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வாக தமிழீழத் தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் நடராஜா முரளிதரன் அவர்கள் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலியும், ஈகச்சுடர் ஏற்றலும், மலர் அஞ்சலியும் நடைபெற்றன.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் வழங்கிய 'போர்க் கால ராகங்கள்' என்னும் இசை நிகழ்ச்சி நடந்தது. இதனைத் தொடர்ந்து 'மாலதியின் நினைவுத்துளிகள்' என்னும் தலைப்பில் கவிதையும், 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மாதரின் பங்கு' என்ற தலைப்பில் பேச்சும் இடம்பெற்றன.



மேலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சித்தரிக்கும் பாடல்களுக்கு எழுச்சி நடனங்களும், 'காலத்தை வென்ற காவியச்சுடர்கள்' எனும் தலைப்பில் பேச்சும், 'பள்ளி எழுச்சி' என்ற நாடகமும் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் சிறப்புரை ஆற்றினார். அவர் தனதுரையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் ஆற்றிவரும் பங்களிப்புக்கள் பற்றியும், அளப்பரிய அதிசயத்தக்க தியாகங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். 'புதிய சிறகுகள் விரியட்டும்' என்ற தலைப்பில் கவியரங்கமொன்றும் நடத்தப்பட்டது. தமிழீழ செஞ்சோலை மழலைகள் காப்பக நிதிக்கான அதிஸ்டலாபச்சீட்டிழுப்பு ஒன்றும் அதிஸ்டம் பார்க்கப்பட்டது. இறுதி நிகழ்ச்சிகாக நன்றியுரையும் தேசியக் கொடி இறக்கலும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து 'புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்' என்ற பாடலை விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரும் சேர்ந்து பாடியது, விழாவைச் சிறப்பிப்பதாக அமைந்ததுடன் விழாவும் இனிதே நிறைவுபெற்றது. ■

# அணைக்கட்டு புனரமைப்பு

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள 4400 ஏக்கர் அடி நீரைத்தேக்கி வைக்கக்கூடிய, தென்னியன்குள அணைக்கட்டு தேசநிர்மாணிகளால் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் பெய்த கடும்மழை காரணமாக, சிதைவுற்றிருந்த இக்குள அணைக்கட்டானது, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கிவரும் துரிதநீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

இந்த அணைக்கட்டுப் புனரமைப்பால், இக்குளத்தின்கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் பெருமளவில் நன்மையடையவுள்ளனர். ■

## சங்கு ஊதுடா சரித்திரச் சோழனின் சாகசங்களைக் குறித்து நீ பாடடா



கார்த்திகை மாதத்துக் கவிதையை எழுத
வார்த்தைகள் தேடி வானத்தைப் பார்க்கிறேன்
போர்க்களம் கண்ட மறவர் தலைவனை
வாழ்த்திடச் சொல்வரம் வானிடம் கேட்கிறேன்

துவக்குத் தூக்கிய புனிதக் கரங்களால்
எமக்கும் ஒரு கொடி வானில் பறந்தது
சிங்களச் செருப்புகள் எங்கள் முதுகினில்
தங்களைப் பதித்த தழும்புகள் மறைந்தன.

நிமிர்ந்த நெஞ்சுடன் நிற்கும் தலைவனை
நேசித்திருக்குதோர் உலகத் தமிழினம்
திமிர்ந்த மானமும் தீர்க்கமும் கொண்டவன்
தேசம் என்றொரு தரிசனம் கண்டவன்
எரிந்த பூமியை எடுத்து அணைத்தவன்
எங்கள் தாய்நிலம் என்று துடித்தவன்
பிரிந்த வீரரின் பிரியா முகங்களை
பிணைத்துப் போர்முகம் பார்த்து நடப்பவன்

எங்கள் தலைவனை எப்படி வாழ்த்துவோம்,
எந்த வார்த்தையால் அவன் புகழ்ஏற்றுவோம்
இங்கு நாமொரு இனமென எழுதிய
இந்த மறவனை எது சொல்லிப் போற்றுவோம்

"சங்கு ஊதுடா சரித்திரச் சோழனின்
சாகசங்களைக் குறித்து நீ பாடடா"।
என்று கூவியே உலகத் தமிழனை
ஒன்று கூட்டி எம் உவகையைக் காட்டுவோம்

கார்த்திகை மாதத்துக் கவிதையை எழுத
வார்த்தைகள் தேடி வானத்தைப் பார்க்கிறேன்.

**- புலவர் சிவநாதன்**
**(இலண்டன்)**

## சிவப்பாய்த் தெரியும் எம் வானம் சில நாளில் வெளுக்கும்

தானைத் தலைவன் சரித்திரத்தில் வருகிறான்
சாணைக் கல்லெனத் தளபதிகள் வருகின்றனர்
சேனை வாள்களெல்லாம் ஒளி பட்டுக் கூசுகின்றன
சின்னத்தோள்கள் கூடச் சீற்றமுடன் மூசுகின்றன
வண்ணப்பெண்களெல்லாம் வரிப்புலியாய் வருகின்றனர்

எண்ணமென இதை எண்ணவேண்டாம்
உண்மையின் எழுத்துருவமிது।

கணைத் திருப்பிக் கடலலையைப் பார்க்கின்றேன்
சின்னக்"குருவி"யொன்று "சீக்காய்" அடித்த பின்பு
சின்னதாய் மறைகிறது! — ஆம்
சிவப்பாய்த் தெரியும் எம் வானம்
சிலநாளில் வெளுக்கும்।

- தமிழொளி, இலண்டன்

(கடற்புலிகளின் விரைவுப் படகை குருவி என்று ஈழத்தில் அழைப்பார்கள்)

# பாரிய மரநடுகைத் திட்டத்தில் மக்கள் ஒன்றிணைய வேண்டும்

## த. பொ. மே. நி. அறைகூவல்

"எமது தேசத்தின் சூழல் பாதுகாப்பிற்கான விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும்முகமாக, நடாத்தப் பட்ட கொடிவாரத்தில் பங்கு பற்றி, சூழலைப் பாதுகாக்க ஒரே கொடியின்கீழ் அணிதிரள்வோம்" என தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தினர் தமிழீழ மக்களுக்கு அறைகூவல் விடுத் திருந்தனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்திருந்த செய்திக்குறிப் பொன்றில், 'சூழல் மாசடைதல்', 'சூழல் பாதுகாப்பு' ஆகிய இரு வார்த்தைகளும் இன்று உலக நாடுகளில் மிகவும் பரபரப்பாகப் பேசப்படுகின்றன. அந்தளவுக்கு உலகநாடுகளினது வளங்களை உறிஞ்சி ஏப்பம்விடும் பூதாகர மான பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சூழல் சிக்கலானது, எமது தேசத்தில் இதுவரை பாரிய அளவான தாக்கங்கள் எதையும் ஏற்படுத்தவில்லை; எனினும் இன்று பல்வேறு நெருக்கடிகளி னாலும், தேவைகளாலும் அள வுக்கதிகமான மரங்கள் அழிக்கப் படுகின்றமையால், இது எதிர் காலச் சூழலைப் பாதிப்படையச் செய்யும்.

எனவே அழிக்கப்படும் மரங்க ளுக்குப் பதிலாக மீள்மரம் நடுகை செய்வதன்பொருட்டு, மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய மரநடுகைத் திட்டங்களில், மக் களை ஒன்றிணைக்கும் செயற் பாட்டை விரிவுபடுத்துவதற்காக வடதமிழீழம் தழுவிய ரீதியில் கொடிவாரம் அனுஸ்டிக்க ஏற் பாடாகியுள்ளது.

தமிழீழத்தில் இம்மரநடுகைக்கு ஏற்றகாலமான ஐப்பசி மாதத்தில் மரநடுகையினைத் தூண்டிவிடும் நோக்கில், இம்மாதத்தில் இச் செயற்பாட்டை மேற்கொள்வது சிறப்பாக அமையுமென்பதால், இவ்வாரத்தில் மூன்று இலட்சம் கொடிகளை விநியோகித்து, மக் கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படவுள்ளது.

எனவே மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் கொடிகளைப் பெற்று, ஆடைகளில் அணிந்து அவ்வாரத்தை அனுஸ்டிக்க ஒத் துழைப்பு நல்குவதுடன், ஒவ் வொருவரும் தலா ஒரு மரக்கன் றையாவது நடுகைசெய்து, எமது தேசத்தின் வளமான மண்ணைப் பாதுகாக்க முன்வர வேண்டும்" என குறிப்பிடப்பட்டிருந்தது. ■

# 3200 விவசாயிகளுக்கு நெற்செய்கைக் கடன்

வன்னி மாவட்டத்தின் எதிர் வரும் 1994 / 1995 காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள வுள்ள 3200 விவசாயிகளுக்கு, நெற்செய்கைக்கடன் வழங்குவதற் கான ஏற்பாடுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தினர் மேற்கொண்டுவரு கின்றனர்.

இதற்கென தற்போது, பயனாளி களைத் தெரிவுசெய்யும் நடவடிக் கைகள் கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கூடாக மேற்கொள் ளப்படுகின்றது.

அத்துடன் கடந்த 1993 / 1994 காலபோக நெற்செய்கைக்கான கடன்பெற்ற 604 விவசாயிகளிட மிருந்து, 'கடன்மீள் அறவீடு' மேற்கொள்ளப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான கடன்வழங்கும் முயற்சிகள் மூலம், வறியமக்க ளும் உற்பத்தியில் ஊக்கமுள் ளோரும் நெற்செய்கையில் ஈடு பட்டு, நெல் உற்பத்தியில் அதிக ரிப்பை ஏற்படுத்துவதுடன், வட தமிழீழம் விரைவில் தன்னிறைவு அடைய வழிகோலும். ■

# காலத்தின் கண்ணாடிகளாக கலைஞர்கள் விளங்குகின்றனர்

- தமிழீழ கலை பண்பாட்டுக் கழக உதவிப் பொறுப்பாளர்அன்பரசன்

"கலைஞர்கள் என்றும் காலத் தின் கண்ணாடியாக விளங்க வேண்டியவர்கள். போராட்ட நிகழ்வுகளை கலைவடிவத்தின் ஊடாக ஆவணப்படுத்தி அழிய விடாமல், அடுத்த சந்ததிகள் புரியும்வகையில் உணரவைப்பர் கள்.

முன்னைய காலத்து கலைஞர் கள் அன்று நடந்தவற்றை கலை வடிவமாக வைத்ததினால்தான், இன்று முன்பு நடந்தவற்றை அறிகின்றோம். இந்தவகையில் தான் கலைஞர்களை காலத்தின் கண்ணாடி என்கிறோம்" இவ் வாறு மீசாலை, விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தியாகி திலீபனின் நினைவாக நடந்த பன்னிரெண்டு நாட்கள் உண்ணா நோன்பின் போது, தொடராக கலை நிகழ்ச்சிகளை நடத்திய தென்மராட்சி அரசியல்துறையி னரால் நடாத்தப்பட்ட பாராட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய தமிழீழ கலை பண்பாட்டுக்கழக உதவிப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் தெரிவித்தார்.

தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் திரு. அன்பு தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகை யில்;

"எமது போராட்டம் துன்பங்கள் துயரங்கள் மத்தியிலே வெற்றி யின் பாதையிலே வேகநடை போட்டுக் கொண்டு இருக்கின் றது. முன்னர் கற்காலம், பொற் காலம் என்றிருந்தது. இது 'க ரும் புலிகளின் காலம்'. எமது தேசம் விடுதலையைப் பெறப் போகின்றது. இந்த நேரத்திலே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

எமது போராட்டமானது பல வடிவங்களிலே விரிவு படுத்தப் பட்டுள்ளது. ஒவ்வொரு போரா ளியும் இந்த மண்ணுக்காக, 'இந்த மண்ணில் வாழுகின்ற மக்களுக்காக தனது உயிரை ஆயுதமாகப் பயன்படுத்தி உயி ராயுதத்துடன் சென்று தனது உயிரையும், உடலையும் அர்ப்ப ணிக்கின்றான். ஆனால் இன்று, போராட்டத்தை உலகமே திரும் பிப் பார்க்கின்றது" என்றார். ■

# மீன்பிடி வலையில் மீண்டும் ஆயுதங்கள் சிக்கியது

### கோயிலாக்கண்டி கடலில் சம்பவம்

பூநகரி கோரதீவு கோயிலாக்க ண்டி கடலில், மீன் பிடிக்கச் சென்ற மீனவரின் வலையில் ஆயுதங்கள் சிக்கின.

அண்மையில் அதிகாலை மேற் படி கடலில் மீன் பிடிக்கச் சென் றிருந்த கைதடி நாவற்குழி தெற் கைச் சேர்ந்த சின்னராசா நல் லதம்பி என்பவரது மீன்பிடி வலையிலேயே ஆயுதங்கள் சிக் கியது.

ரி-56-2 ரக துப்பாக்கி ஒன்றும், நான்கு மகசீன்களும், ஜே. ஆர். கைக்குண்டுகள் இரண்டும், தொலைத்தொடர்பு சாதனம் ஒன் றும் மேற்படி வலையில் சிக்கி யது. இவற்றை அவர், தென்ம ராட்சி கிராமியப்பாசறைப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தார்.

அம் மீனவர் எமது செய்தியாள ரிடம் இது குறித்து கூறுகையில், நாம் மூவர் கடலில் கட்டுமரத் தில் மீன் பிடிக்கச் சென்றவே ளையில் நடுக்கடலில் வலையை வீசி இழுத்தபோது எமது வலையில் ஆயுதங்கள், கைக்கு ண்டு, தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பன சிக்கிய தையடுத்து அதிர்ச்சி அடைந் தோம் என்றார்.

பூநகரி இராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்திய போது, இராணுவத்தினரால் இவை கைவிடப்பட்டு இருக்க லாம் என நம்பப்படுகின்றது. இது போன்று முன்பும் பூநகரி மண்ணித்தலைக் கடலில், ஏ. கே-47 ரக ஆயுதம் வலையில் சிக்கி மீட்கப்பட்டிருந்தது குறிப் பிடத்தக்கது. ■

# கல்முனை கடலில் மூழ்கிய நிலையில் படகு

பூநகரி - கல்முனைப் பகுதிக் கடலில் சிறீலங்கா கடற்படை யைச் சேர்ந்த விசைப்பட கொன்று, மூழ்கடிக்கப்பட்டுக் கிடப்பதாக மீனவர்கள் தெரிவித் தனர்.

ஏறத்தாழ 47 அடி நீளம் கொண்ட பிளாஸ்டிக்படகு, மண் உள்ளிட்டு ஒன்றரைப்பாக நீருக் குக் கீழே கிடப்பதாகக் கட லட்டை பிடிக்க சுழியோடும் சுழியோடிகள் செய்தியாளருக்குத் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட வெற் றிகரத் தாக்குதலான தவளை நடவடிக்கையின் போது, கடற் புலிகளால் கடலில் வைத்து தாக்கப்பட்ட கடற்படையின் விசைப்படகுகளில் ஒன்றாக அது இருக்கலாமெனக் கருதப்படுகி றது. ■

# அரசியலமைப்பு

## ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

### நூல் அறிமுகம்

இலங்கை 1832 ஆம் ஆண்டிலிருந்து எழுதப்பட்ட அரசியலமைப்பைப் பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை எட்டு அரசியல் யாப்புக்களை கண்டுள்ளது. முதல் ஆறு யாப்புக்களும் பிரித்தானியரால் எழுதப்பட்டன. இறுதி இரண்டுமே சிங்கள ஆட்சியாளரால் எழுதப்பட்டன. இதில் முன்னையது 1972 இல் எழுதப்பட்ட 'சிறீலங்கா சோசலிசக் குடியரசு யாப்பு' என அழைக்கப்பட்டது. பின்னையது 1978 இல் ஜே. ஆர் ஜெயவர்த்தனாவால், ஐ. தே. க. அரசின் சார்பாக எழுதப்பட்டது. இது 'சனநாயக சோசலிசக் குடியரசு யாப்பு' என்ற நாமத்தைப் பெற்றது. ஜே. ஆர். தன்னை ஒரு சக்கரவர்த்தியாக்க எடுத்த அரசியல் நடவடிக்கையே இவ்யாப்பாகும் என்பதை, 'அரசியலமைப்பு: ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய' என்ற இந்நூல் தெளிவாக விளக்குகின்றது. தமிழீழத்தில் 10. 08. 1994 இல் வெளியிடப்பட்டது. அதாவது 'பொதுசன ஐக்கிய முன்னணி' சிறீலங்கா ஆட்சிபீடத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பு எழுதப்பட்டாலும், ஜே. ஆரின் யாப்பை மாற்றுவதற்கான தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டுவரும் இவ்வேளையில் இந்நூல் தாங்கிவரும் ஆக்கங்கள் பயனுடையதாக இருக்கும் என்பதனாலேயே அவற்றைத் தொடர்ந்து வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

### அத்தியாயம் - 1

## ஓர் இன, மத, மொழி நோக்கு

*"இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மைத் தானம் வழங்கப்படுதல் வேண்டும்... பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும்" என ஒன்பதாவது சரத்து விபரிப்பதன் மூலம் இலங்கை பௌத்த மதத்தை ஏறக்குறைய அரச மதமாகக் கொண்ட நாடு என்றாயிற்று.*

*இவ்வாறாகவே சிங்கள மொழிக்கும், சிங்கள மக்களுக்கும் இந்த யாப்பு எல்லா முதன்மைகளையும் அளித்துள்ளது. இதன் மூலம் இந்த யாப்பானது, இலங்கைவாழ் முழு மக்களையும் தழுவிய பல்லினத் தேசிய நோக்கில்லாது ஒரு மதம், ஒரு மொழி, ஓர் இனம் என்ற நோக்குநிலையில் நின்று எழுதப்பட்டுள்ளது.*

### அத்தியாயம் - 2

## கடினயாப்பு முறை

நெகிழாயாப்புக்குரிய வரையறைகளுடன், இரண்டாம் குடியரசு அரசியல்யாப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை இலங்கை கண்ட அரசியல் யாப்புக்களுள் அதிககூடிய நெகிழாத் தன்மைகொண்ட யாப்பு இதுவாகும். இந்த அரசியலமைப்புத் திட்டத்தை மாற்றவேண்டுமாயின், நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் தொகையில், குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப்பெறவேண்டும் என்பதுடன், மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பிலும் சம்மதத்தைப் பெறவேண்டும்.


நாடாளுமன்றத்தின் மொத்த ஆசனங்களில் குறைந்தது, மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறவேண்டுமெனச் சாதாரணமாகக் கூறினாலும், நடைமுறையில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனத்தை எந்தவொரு கட்சியும் தனித்துநின்று இலகுவில் பெறமுடியாதநிலை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையால் உருவாகியுள்ளது. எனவே எளிதாகவே நெகிழாத ஒரு யாப்பை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது, மேலும் நெகிழ்ச்சியற்றதாக்கிவிடுகின்றது. உலகிலுள்ள நெகிழாயாப்பிற்கு அதிகூடிய எடுத்துக்காட்டாய் அமெரிக்க யாப்பைக் கூறுவர். அங்கு மத்தியில் உள்ள காங்கிரசில், மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினரின் ஆதரவை அல்லது அதன் அரசியல் நிர்ணயசபையில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறவேண்டும் என்பதுடன், மாநில அரசுகளின் சட்டசபைகளில் அல்லது அவற்றின் அரசியல் நிர்ணய சபைகளில் நாலில் மூன்று பங்கிற்கு குறையாத சபைகளில் அனுமதியைப்பெற வேண்டும். இது ஒரு சமஸ்டி அரசின் அரசியலமைப்பாகும்.

சமஸ்டி அரசாகிய அமெரிக்காவில் யாப்பின் நெகிழாத்தன்மையை இரு அம்சங்கள் நிர்ணயித்துள்ளன. ஒற்றையாட்சி நாடாகிய இலங்கை யாப்பில் மூன்று அம்சங்கள் யாப்பின் நெகிழாத்தன்மையை நிர்ணயிக்கின்றன. அவுஸ்திரேலியா, அயர்லாந்து ஆகிய நாடுகளில் யாப்பை மாற்றுவதற்குரிய அம்சங்களில் ஒன்றாய் 'மக்கள்தீர்ப்பு வாக்கெடுப்பு' அவசியம் என்பதுபோல இலங்கையிலும் யாப்பை மாற்றுவதற்கு 'மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு' அவசியம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இலங்கையில் யாப்பை மாற்றுவதற்குரிய நிர்ணயங்களாக நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை, அதுவும் விகிதாசார அடிப்படையிலான பிரதிநிதித்துவத்துடன் கூடியமை, மக்கள் தீர்ப்பு வாக்களிப்பு என மூன்று அம்சங்கள் சம்பந்தப்படுகின்றன. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் நேரடியான ஒரு தனிக்காரணிபோல் தெரியாதுவிட்டாலும் உண்மையில் செயல்பூர்வமுறையில் யாப்பின் நெகிழ்ச்சியை இறுக்கும் ஒரு காரணியே.

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அற்றமுறையில் 1977 ஆம் ஆண்டுதெரிவான நாடாளுமன்றத்தில் ஐ. தே. கவுக்கே 5/6 பங்கு ஆசனங்கள் கிடைத்தன. 1977 ஆம் ஆண்டுமுதல் 1988 ஆம் ஆண்டுவரையிலான ஐ. தே. க. இப்பெரும்பான்மையைத் தொடர்ந்து வைத்திருந்தமையினால், பன்னிரண்டு ஆண்டு காலத்திற்குள் பதினாறு தடவைகள் அரசியல் யாப்புத் திருத்தங்கள் செய்யப்பட்டன. அமெரிக்காவில் இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதைக்கொண்ட அதன் யாப்பில் இருபத்தாறு தடவைகளே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனுடன் ஒப்பிடுகையில், பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் பதினாறு திருத்தங்கள் அதிகூடிய தொகைதான் என்றாலும், அதன் பின்னான கடந்த ஐந்தரை ஆண்டுகளுக்குள் ஒரு திருத்தமோ, மாற்றமோ மேற்கொள்ளப்படவில்லை. அதனால்

**தமிழீழத்திலிருந்து**
**மு.திருநாவுக்கரசு**

இங்கு ஒரு விடயத்தை ஆழமாக அவதானிக்கவேண்டியுள்ளது. அதாவது விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின்கீழ் அல்லாத தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையின் கீழ்தான், மூன்றிலிரண்டு பங்கிற்கு மேற்பட்ட பலத்தை நாடாளுமன்றத்தில் பெற்று, பன்னிரண்டு ஆண்டுகளாக அதனையே தக்கவைத்துக் கொண்டிருந்தமையால், அத்தகைய பதினாறு திருத்தங்களும் சாத்தியமாகின. ஆனால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் தெரிவான முதலாவது நாடாளுமன்றம் 1989 ஆம் ஆண்டிலிருந்தே உருவாகியது. எனவே விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஏற்பட்ட அதன் ஐந்தரை ஆண்டு காலத்தில், யாப்பில் ஒரு சிறிய திருத்தம்தானும் நிகழமுடியவில்லை. இவ்வாறு பார்க்குமிடத்து, யாப்பின் நெகிழ்ச்சியின்மையை நிர்ணயிப்பதில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்திற்கென ஒரு குறித்த பலமுண்டு.



ஜே. ஆர். யாப்பு இதுவரைபதினேழு ஆண்டுகள் இயங்கிவிட்டது என்று கூறினாலும், யாப்பின் புதிய அம்சமும் முக்கிய அம்சங்களுள் ஒன்றுமாகிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை, முதற் பன்னிரண்டு ஆண்டுகளும் நடைமுறையில் இல்லாதது மட்டுமன்றி, முன்னைய யாப்பின் ஓர் அம்சமாகிய தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் நடைமுறையில் இருந்தமையாற்தான் தேவைக்கேற்ப எளிதாகப் பதினாறு திருத்தங்களுக்கும் உள்ளாகி, யாப்பு செயலிழக்காது செயற்பட முடிந்தது. ஜே. ஆர். யாப்பின் அனைத்து அம்சங்களும் இணைந்து செயற்பட்ட காலமாகப் பின்னைய ஐந்தரை ஆண்டு காலமும் காணப்படுவதால், யாப்பின் நெகிழாத்தன்மையை இந்த ஐந்தரை ஆண்டுகால நடைமுறையில் வைத்துத்தான் பரிசீலிக்கலாம்.

ஒரு யாப்பில் குறிப்பிடக்கூடிய ளவு நெகிழ்வின்மை இருக்கவேண்டியது அவசியம். ஆனால் தீவிர நெகிழ்வின்மை இருப்பின், காலவேகத்திற்கேற்ப மாற்றங்களைச் செய்யமுடியாது சமூக முன்னேற்றம் தடைப்படும்.

அரசியற் கொந்தளிப்பு பெரிதும் எழநேரும். இதனால் யாப்பு முறிவடையக்கூடும்.

( தொடரும் )

# லெப். கேணல் விக்ரர் நினைவு

# மன்னாரில் அனுஸ்டிப்பு

*மன்னார் மாவட்டத் தளபதியும் மத்தியகுழு உறுப்பினருமாய் இருந்து, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே சிறீலங்கா இராணுவத்தை யுத்தக் கைதியாகப் பிடித்த பெரும் நேரடி மோதலிற்கு தலைமை தாங்கி, அம்மோதலின் போதே வீரச்சாவினை அடைந்த லெப். கேணல் விக்ரரினதும், 2 ஆம் லெப். றோமினதும், 8 ஆம் ஆண்டு நினைவு நாள் கடந்த மாதம் 12 ஆம் நாள் மன்னார் மாவட்டத்தில் எழுச்சியுடன் அனுஸ்டிக்கப்பட்டது. திருவுருவப்பட திரைநீக்கமும் அதனை தொடர்ந்து பெரு விளையாட்டுக்களின் இறுதி நிகழ்ச்சிகளும், இறுதிப் போட்டி நிகழ்ச்சிகளும், வீரவணக்கக் கூட்டமும், பரிசளிபு வைபவமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.*

*அன்று காலை, பெரிய பண்டிவிரிச்சானில் அமைக்கப்பட்டிருந்த லெப். கேணல் சுபனினது திருவுருவப்படத்தை அவரது பெற்றோரும், லெப். கேணல் ராதாவின் திருவுருவப்படத்தை அவரது தாயாரும் திரைநீக்கம் செய்து வைத்தனர். பின்னர் பரப்புக் கடந்தானில் அமைக்கப்பட்டிருந்த லெப். கேணல் விக்ரரினது திருவுருவப்படத்தை அவரது தந்தையாரும், லெப். கேணல் வேணுவினது திருவுருவப்படத்தை வன்னி -முல்லை -மன்னார் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் நாவண்ணன் அவர்களும், லெப். நிதியின் திருவுருவப்படத்தை மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் ஸ்ரனிஸ் லோஸ் அவர்களும் திரைநீக்கம் செய்து வைத்தனர். பின்னர் கருங்கண்டல் பாடசாலை மைதானத்தில் இறுதிப் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின் ஆண்டான் குளம் பாடசாலை மைதானத்திற்கு மாலை 6. 30 மணியளவில் லெப். கேணல் விக்ரரது தந்தையையும், 2 ஆம் லெப். றோமினது பெற்றோரையும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பாளரும், விடுதலைப் புலிகளின் பாண்ட் வாத்திய அணியினரும் அழைத்து வந்ததைத் தொடர்ந்து, மாவட்டத் தளபதி பிரதான ஈகச் சுடரை ஏற்றி வைக்க, இரு மாவீரரின் பெற்றோரும் தத்தமது பிள்ளைகளது திருவுருவப் படத்திற்கு ஈகச் சுடரை ஏற்றி வைத்தனர். பின் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் சங்கீதன் தலைமையில் ஆரம்பமான வீரவணக்கக் கூட்டத்தில், மாவட்ட துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அல்வின், மகளிர் அமைப்பைச் சேர்ந்த தமிழ்கவி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த குரு, பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. யேக்கப், மாவட்டத்தளபதி சீலன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். ■*

Network
November 1994 Published by the International Federation of Tamils

"We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."
- Velupillai Pirabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam

# Towards a Just Peace or just a Peace Offensive?

## THE FORMULA - as before?

"WE WILL ENSURE THAT OUR APPROACH TO PEACE WILL FULLY ADDRESS THE NECESSITY TO SAFEGUARD AND STRENGTHEN THE RIGHTS OF THE SINHALA PEOPLE, while recognising dignity, self respect and equality of treatment for all communities. This will form the essential basis of a negotiated solution to the ethnic problem."

*(President Chandrika Kumaratunga's Address on her election victory, Sri Lanka State Controlled Sunday Observer, 13 November 1994)*

## 'Tomorrow it may be time to turn over the hour glass'

"The Sri Lanka Navy...seems to have been ignored in the building up of the security machine... Should things not go the desired way, the Navy may be called upon to do their duty by their brother soldiers... Let them not allow red tape to tie their hands. As a senior security officer said, '.. let them not hesitate to use their funds in procuring materials for the defence of the country. Tomorrow it may be time to turn over the hour glass.'"
*- R.T.F Security Report, Sri Lanka State Controlled Sunday Observer, 16 October 1994*

".. if talks fail, we will have to pursue a military solution. " *- Anuruddha Ratwatte, Sri Lanka Deputy Defence Minister quoted in the Sinhala owned Sri Lanka Sunday Times, 16 October 1994*

Nadesan Satyendra

**Sri Lanka helicopters which rained down bombs on the Tamil people have now taken to dropping leaflets. It appears that some of President Chandrika Kumaratunga's ad visers believe that where bombs failed to quell Tamil resistance, leaflets may succeed in advancing the peace process.**

In the days before the Sri Lanka government delegation's visit to Jaffna for the first round of talks on October 14, tens of thousands of leaflets, in English and Tamil, were dropped by Sri Lanka army helicopters all over the peninsula. The leaflets proclaimed that **'sunshine had moved into the lives of the Tamil people''** in the form of 28 items that had been taken out of the banned list, including **foreign** soaps, audio cassettes and medicine. The leaflet ended by giving some **seemingly 'altruistic'** advice to the Tamil people: 'However dear brothers and sisters, we must not forget that if peace negotiations fail to take place or take place and then fails, it is **you** who would suffer most. So what you have to do is to **prevail upon the LTTE** to keep negotiating with the government, until peace is achieved soon.' *(please see back page for text of leaflet)*

The desire of some of President Chandrika Kumaratunga's advisers to tell the Tamil people that sunshine had moved into their lives in the form of foreign soaps, audio cassettes and medicine may be understandable. But many Tamils may well have wondered at the veiled threat that it was they who would **suffer most** if negotiations break down. After all it was not as if the war had not taken its toll of Sinhala lives and of the Sinhala economy. Prime Minister Chandrika Kumaratunga herself told the Sinhala people during her Presidential TV campaign speech in early November:

**''To continue the military effort much longer we require thousands of more soldiers. Would you agree to compulsory conscription of all youths - I repeat - of all youths irrespective of who their parents are over the age of 18 years as is the practise in all war torn countries? How do you propose to find sufficient funds for the crying developmental needs of the nation while the country's income is massively poured out incessantly into the war effort?''**

The veiled threat may have even led Tamils in the peninsula to reflect that though 'gift' horses should not be looked in the mouth, there may be a need to be wary of Greeks when they come bearing gifts. In October 1987, the IPKF too resorted to the tactic of dropping thousands of leaflets, telling the Tamil people about the goodwill mission on which they had come. Future events will reveal the extent of RAW's influence within President Chandrika Kumaratunga's circle of advisers.

Meanwhile, it seems that some, at least, of President Chandrika Kumaratunga's current advisers believe that the peace process will be advanced by efforts to separate the Tamil people from the

*continued on page 7*

# Those who do not learn from history are condemned to relive it....

## Sri Lanka 1972

In 1972 the Coalition Government (of the SLFP, the LSSP and Communist Party) led by Prime Minister Srimavo Bandaranaike renamed Ceylon, Sri Lanka, removed the constitutional protection afforded by section 29 of the earlier Soulbury Constitution and proclaimed a new republic with Buddhism as the state religion. All this was done through the instrumentality of a Constituent Assembly which had earlier rejected the proposals submitted by the Tamil United Front led by Mr.S.J.V.–Chelvanayagam for a federal constitution. Mr.Chelv–anayagam resigned his seat in Parliament and re-contested to seek a mandate for an independent Tamil state. On his re-election by an overwhelming majority he declared:

"Throughout the ages the Sinhalese and Tamils in the country lived as distinct sovereign people till they were brought under foreign domination. It should be remembered that the Tamils were in the vanguard of the struggle for independence in the full confidence that they also will regain their freedom. We have for the last 25 years made every effort to secure our political rights on the basis of equality with the Sinhalese in a united Ceylon. It is a regrettable fact that successive Sinhalese governments have used the power that flows from independence to deny us our fundamental rights and reduce us to the position of a subject people.

These governments have been able to do so only be using against the Tamils the sovereignty common to the Sinhalese and the Tamils. I wish to announce to my people and to the country that I consider the verdict at this election as a mandate that the Tamil Eelam nation should exercise the sovereignty already vested in the Tamil people and become free. On behalf of the Tamil United Front, I give you my solemn assurance that we will carry out this mandate."

In May 1976 the First National Convention of the Tamil United Liberation Front led by Mr.S.J.V.Chelvanayagam resolved:

"The National Convention of the Tamil United Liberation Front meeting at Pannakam (Vaddukoddai Constituency) on the 14th day of May 1976, hereby declares that the Tamils of Ceylon, by virtue of their great language, their religions, their separate culture and heritage, their history of independent existence as a separate state over a distinct territory for several centuries till they were conquered by the armed might of the European invaders, and above all by their will to exist as a separate entity ruling themselves in their own territory, are a nation distinct and apart from the Sinhalese and this Convention announced to the world that the Republican Constitution of 1972 has made the Tamils a slave nation ruled by the new colonial masters, the Sinhalese, who are using the power they have wrongly usurped to deprive the Tamil nation of its territory, language, citizenship, economic life, opportunities of employment and education, thereby destroying all attributes of nationhood of the Tamil people, and therefore... This convention resolves that the restoration and reconstitution of the Free, Sovereign, Secular Socialist State of Tamil Eelam based on the right of self determination inherent to every nation has become inevitable in order to safeguard the very existence of the Tamil nation in this country."

## Thimpu 1985

Joint Statement of Tamil delegation to the Thimpu Talks, 17 August 1985: "As early as 1928, the Donoughmore Commission recommended the establishment of Provincial Councils on the ground that it was desirable that a large part of the administrative work of the centre should come into the hands of persons resident in the districts and thus more directly in contact with the needs of the area. Twelve years later the Executive Committee of Local Administration chaired by the late S.W.R.D. Bandaranaike, considered the proposal of the Donoughmore Commission and in 1940, the State Council (the legislature approved the establishment of Provincial Councils. But nothing was in fact done, though in 1947, on the floor of the House of Representatives, the late S.W.R.D. Bandaranaike again declared his support for the establishment of Provincial Councils.

In 1955, the Choksy Commission recommended the establishment of Regional Councils to take over the functions that were exercised by the Kacheries and in May 1957, the government of the late S.W.R.D. Bandaranaike presented a draft of the proposed Bill for the establishment of Regional Councils.

Subsequently, in July 1957, the Bandaranaike-Chelvanayagam Pact made provision for direct election to Regional Councils and also provided that the subjects covered by Regional Councils shall include agriculture, cooperatives, lands and land development, colonisation and education. The Pact however did not survive the opposition of sections of the Sinhala people which included the United National Party.

In July 1963, the government of Mrs. Bandaranaike declared that early consideration' would be given to the question of the establishment of District Councils to replace the Kacheries and the government appointed a Committee on District Councils and the report of this Committee containing a draft of the proposed Bill to establish District Councils but again nothing was in fact done.

In 1965, the government of the late Dudley Senanayake declared that it would give 'earnest consideration' to the establishment of District Councils and in 1968 a draft Bill approved by the Dudley Senanayake Cabinet was presented as a White Paper and this Bill provided for the establishment of District Councils. This time round, the opposition to the Bill was spearheaded by the Sri Lanka Freedom Party which professed to follow the policies of the late S.W.R.D. Bandaranaike who himself had in 1940, 1947 and again in 1957, supported the establishment of Provincial/ Regional Councils. In view of the opposition the Dudley Senanayake government withdrew the Bill that it had presented.

More than 50 years have passed since 1928 and we have moved from Provincial Councils to Regional Councils and from Regional Councils to District Councils and now from District Councils back to District/Provincial Councils.

We have had the 'early consideration' of Mrs. Srimavo Bandaranaike and the 'earnest consideration' of the late Dudley Senanayake.

There has been no shortage of Committees and Commissions, of reports and recommendations but that which was lacking was the political will to recognise the existence of the Tamil nation.

And simultaneous with this process of broken pacts and dishonoured agreements, the Tamil people were subjected to an ever widening and deepening national oppression aimed at undermining the integrity of that Tamil nation.

The four basic principles that we have set out at the Thimpu talks as the necessary framework for any rational dialogue with the Sri Lankan Government are not some mere theoretical constructs.

They represent the hard existential reality of the struggle of the Tamil people for their fundamental and basic rights. It is a struggle which initially manifested itself in the demand for a federal constitution in the 1950s and later in the face of a continuing and increasing oppression and discrimination, found logical expression in the demand for the independent state of Tamil Eelam.

It is a struggle in which thousands of Tamils have died and many thousands more have lost their properties and their means of livelihood - they have died and they have suffered so that their brothers and sisters may live in equality and in freedom.

And so, we declare here at Thimpu, without rancour, and with patience, that we shall speak at Thimpu, or for that matter anywhere else, on behalf of the Tamil nation or not at all. And we call upon the Sri Lankan Government to state unequivocally, whether it is prepared to enter into a rational dialogue on the basis of the framework set out by the cardinal principles enunciated by us at these talks.''

## Network

The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.

On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.

To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.

The new balances that are being struck in the emerging multi–polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.

If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.

Network exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.

Correspondence Address:

The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL

# Chandrika and the Army

## Without Comment

## 17 OCTOBER

### "..most armies prefer war to peace... we will not permit (the army) to do what they think is right"

"**The Army had more than enough on its plate when Premier Chandrika Kumaratunga in an interview with the BBC (on Monday 17 October) accused the soldiers at the top in Colombo, not at the base, of preferring war to peace.** The Premier was answering the question 'One of the army's main concerns is that they don't want a repetition of what happened in the last round of talks, when they withdrew from territory which they later had to regain at heavy cost. Can you ensure that doesn't happen again?' The PM answered, 'Well, we will have to see practically that it doesn't happen again. **And I think one of the causes last time was that the previous government did not have sufficient control of its armies. And as you know, most armies are - well, they prefer war to peace. Not the soldiers at the base, but those who are in Colombo at the top. We hope and we believe that we have better control of our armies and we will not permit them to do what they think is right.**" ***(RTF Security Report, Sri Lanka State Controlled Sunday Observer, 23 October 1994)***

"Asked (at the 17 October Press Conference) why the LTTE was continuing with their attacks(the Premier) replied that the LTTE had told the Government peace mission that... **the attack on the 'Sagarawardene' was prompted by an Army attack in the East in which 10 to 12 of the best LTTE cadres were lost.** Asked by George Arney (the BBC correspondent) whether she did not think this LTTE propaganda, **she replied that there were always two sides to a story.** - *(Ajit Samaranayake writing in the Sri Lanka State Controlled Sunday Observer, 23 October 1994)*

## 19 OCTOBER

### "Senior army officers express disgust at P.M.'s statement..."

"Tension mounted between Sri Lanka's Prime Minister and armed forces commanders after she charged that they might try to sabotage her efforts to end decades of ethnic blood shed ...**Senior officers expressed disgust at Prime Minister Chandrika Kumaratunga's remarks** that the Sri Lanka military currently battling Tamil Tiger rebels was a 'government unto itself' and that she would not tolerate such an attitude.... a defence analyst said that the P.M. had spoken a 'load of rubbish'. **'If you don't find a solution (to the ethnic conflict) very soon, the (army) guns are going to turn 180 degrees. You can't be boxing your troops in camps and go on insulting them.**" *(AFP Report, 19 October 1994)*

## 28 OCTOBER

### "I have full confidence in the security forces... they have been supportive of the peace process"

"Prime Minister Chandrika Bandaranaike Kumaratunga told a special press conference on 28 October that her government has provided the security forces with the basic facilities which the previous regime failed to give. The Prime Minister said that the **first** thing this government did **before** starting the process of reducing the hardships of the people of Jaffna was to improve the conditions of the forces... **She added: 'I have full confidence in the security forces. They have been supportive of the peace process.'**" *(Sinhala controlled Newslanka published in London, 5 November 1994)*

"Some journalists at Lake House received a telephone call from the Prime Minister's office on Thursday evening (**28 October**) not to send out any newspapers without the story giving the Prime Minister's views on the Security Forces. By this time at least 50,000 copies of the Daily News, Dinamina and Thinakaran had been printed. **The order from the Prime Minister's office was to withhold all those copies and print the paper afresh with the Prime Ministers story...** " *(Political Correspondent, Sinhala owned Sri Lanka Sunday Times, 6 November 1994)*

## 1 NOVEMBER

### "Chandrika rudely awakened to the facts of life and political realities... (the) war has given the army a decision making role"

**"I HAVE FULL CONFIDENCE IN THE SECURITY FORCES:PM. The banner headline in the state run Daily News became in turn the lead item in the Friday morning bulletin of the state owned Sri Lanka Broadcasting Corporation (SLBC). Prime Minister Chandrika Kumaratunga of the newly elected Peoples Alliance (PA) had been rudely awakened, it would appear, to the facts of life and political realities in a war torn little island.**In little over a decade, the army had grown and grown; a ceremonial army has become a professional force, an institution. Quantity has led to qualitative change. For the Paris educated Chandrika and her high I.Q. counsellors, all members of Colombo's academic elite, two months have been an instant learning process...(the) **war has not only militarised southern (Sinhala) society but given the army a decision making role, a seat in the security council and a quasi veto on all matters of war and peace.**" *(Sinhala journalist Mervyn de Silva in Sinhala owned Lanka Guardian)*

## 6 NOVEMBER

### US$ 70 million Arms deal for purchase of aircraft, helicopters & armoured carriers to go ahead?

"**A top ranking Defence Ministry official told the Sunday Times this week that the purchase (from Russia) of three giant Antonov transport aircraft, eight transport helicopters, more than 200 armoured personnel carriers and two large ships was going ahead...** This deal (for US$70) was originally signed in July after Defence Secretary General Hamilton Wanasinghe personally led a team of officials to Russia.. **However when the People's Alliance government came into office, one of its first acts was to suspend payments on the deal charging that it had been fraudulent.** The PA had earlier criticised the deal when it was in the opposition... Prime Minister Chandrika Kumaratunga herself stopped the deal after consulting the new Deputy Defence Minister, Lt.Colonel Anuraddha Ratwatte...**The insinuation that the new government was making was that top Defence Ministry officials had played out the country...** (Also)... Air Force Chief, Air Marshall Oliver Ranasinghe has publicly gone on record as saying that he had enough transport aircraft... Why then are three Antonov aircraft and 8 helicopters being bought?" *(Sinhala owned Sri Lanka Sunday Times, 6 November 1994)*

### "Over the years, a particularly belligerent and blood thirsty element has grown within the officer corps of the Sinhalese army, navy and air force"

**"Over the years, a particularly belligerent and blood thirsty element has grown within the officer corps of the Sinhalese army, navy and air force.** The rank and file, often recruited from the poorer sections of Sinhalese society, are, by comparison, increasingly motivated to join by the carrot of economic incentives, rather than 'patriotism': this partly explains their poor performance against the Tigers. **But many officers have a vested interest in perpetuating the war, to which they owe every thing from public importance to economic affluence (the latter frequently through various forms of war related profiteering and corruption).**

**Many of these hardline elements were in the forefront of the campaign to exterminate the Sinhalese ultranationalist Janatha Vimukthi Peramuna (JVP) a few years back, and are greatly frustrated by lack of similar success against a demonised LTTE.** They will probably find allies among ultra chauvinist Buddhist clergymen, corrupt bureaucrats, and most dangerously, the Sinhalese political establishment, especially the UNP old guard.

**Recall that a year ago, septuagenarian UNP President Wijetunga proclaimed that no ethnic problem (just a 'terrorist' one) existed in Sri Lanka and ordered the armed forces command to retake Jaffna militarily.** The likes of Wijetunga and his adviser, the octogenarian J.R.Jayawardene, are understandably apprehensive that a just and peaceful resolution of the crisis will consign them, and the policies they pursued to the dust bin of history.

Though temporarily sulking and defensive, this cabal is far from spent, and their mischief making potential should not be underestimated. **Recent attacks (usually against civilian targets) by the armed forces in the north seem designed to provoke large scale LTTE retaliation, which would vitiate the climate for negotiations.**" *(Sumantra Bose, Sinhala owned Lanka Guardian, October 15, 1994)*

# Towards a Just Peace?

**"One can envision thinking about devolution as points along a continuum,** depending on how much power is actually transferred to a governmental unit at a level lower than the central government. At one end would be a unitary state with virtually no local autonomy, except perhaps for garbage collection and the like. At the other... end of the continuum would be a completely independent Tamil Eelam, .... In between range a virtual endless variety of options. **The key factors are 1) how much power is actually devolved, and 2) the size of the unit being given power.**

With regard to "how much power...", questions which have to be resolved include, for example: Is the unit going to have its own police force and/ or army? If yes, who will have control over hiring and firing of these people? In what language is the business of government and the courts to be conducted? Will the unit be allowed to have its own court system? If yes, who will appoint the judges? Who will decide questions of land and land settlement? How much power will the central government have over the operation of the government in the unit? If the centre doesn't like the government of the unit, can it remove that government? Under what conditions? Will there be conditions under which the centre will be allowed to rule the unit directly? What will be the language of instruction in the schools? Will the unit be allowed to have commercial representation abroad? Will it be allowed to have diplomatic representation? Will it have a separate currency? Will it be tied economically in some way to the central government? These and thousands of questions like these will have to be agreed upon before any settlement is reached...

**The LTTE ... want the Tamils to achieve a settlement as far to the (right) on the continuum as they can..."**
*(Prof. Marshall R. Singer of the University of Pittsburgh 'Alternative solutions to the Tamil, Sinhalese ethnic conflict in Sri Lanka' in 1991)*

## LTTE Leader, Velupillai Pirabakaran, BBC Interview, September 1994:

" In all talks, we have placed the interests of our people at the forefront. We have emphasised that our people seek to live in peace, with dignity and with due recognition of th-eir rights. It is because Sinhala Governments have refused to recognise our people's true, reasonable, basic and fundamental rights and dispense justice, that talks have failed. Time and again it is the Tamil people who have been deceived by Sinhala Governments. Time and again, it is Sinhala Governments who have broken agreeme-nts, dishonoured assurances and breached the trust placed on them by the Tamil people. Nobody can deny this historical truth. If the new Government has resolutely determined that it will accede to the reasonable demands of the Tamil people and that it will dispense justice, then the new Government need not be afraid (that the talks will break down)."

## Open Mind

"Mr.Karikalan, leader of the LTTE delegation to the Peace Talks, told a press briefing after the first round of talks (in Jaffna in October 1994) that the LTTE would participate in the talks with an 'open mind' - this was the message of Tamil Eelam leader, Velupillai Pirabakaran." - Sri Lanka State controlled Sunday Observer, 16 October 1994

## Unitary...

| Centralised | District Councils | Provincial Councils | 'Defacto' Federation |
|---|---|---|---|
| units: local authorities for towns and villages | units: districts with possible merger of districts into province | units: provinces with possible N-E merger | units: provinces with N-E boundaries re drawn or without N-E merger |
| power: control at centre | power: some decentralisation of administration with executive power & control in centre | power: devolution of very limited legislative power with executive power & contol in centre | power: 'extensive' devolution with centre not exercising control (which it has in law) 'in practise'. |
| Sri Lanka Constitutions 1948,1971, 1977 | Development Councils Act 1979, Sri Lanka Proposals at Thimpu 1985 | 13th Amendment to Sri Lanka Constitution 1987 | Moonesinghe Select Committee Proposals, 1993 |
| "Whilst the (Soulbury) Commission was in Ceylon (in 1944), the speeches of certain Sinhalese politicians calling for solidarity of the Sinhalese and threatening the suppression of the Tamils emphasised the need for constitutional safeguards on behalf of that and other minorities... **in the light of later happenings, I now think it is a pity that the Commission did not also recommend the entrenchment in the constitution of guarantees of fundamental rights...**" *(Lord Soulbury, Chairman of Soulbury Commission writing in 1963 - Preface to B.H.Farmer: Ceylon a Divided Nation)* **"The Bandaranaike government had directed that unless a Tamil public servant passed a proficiency test in Sinhala in stages over three years, his annual increment would be suspended and he would eventually be dismissed...** Mr.Kodiswaran, a Tamil in the executive clerical service.. sued the government on the ground that .. the Official Language Act of 1956 transgressed the prohibition against discrimination provided for in section 29 of the Constitution... **Mr.Kodiswaran appealed to the Privy Council in London... The Sri Lanka government thereupon abolished appeals to the Privy Council. And the Republican Constitution of 1972 did away with the safeguards for minorities enshrined in the original section 29."** *(Walter Schwarz: - Minority Rights Group 1983 Report)* | "The intent of the proposals that were presented (at Thimpu) was clear. Although it was stated that power would devolve on District Councils, in fact, the District Councils were without executive power. Again, even their limited legislative power to enact subsidiary legislation was made subject to the control and approval of the President. Finally the funds to be placed at the disposal of a District Council were to be determined at the discretion of a commission appointed by the President. The proposals submitted by the Sri Lanka Government did not devolve power from the centre: they reinforced the power of the centre to manage the districts. The proposals constituted evidence of the intention of Sri Lankan government to manage and control the Tamil people even in the relatively insignificant functional areas where the District Councils were given some jurisdict-ion." *(Statement made by Tamil delegation at the Thimpu Talks on 17 August 1985)* | "The 13th Amendment has created Provincial Ministers who will not exercise executive power and a Provincial Governor (appointed by the Sri Lanka President) who will exercise executive power in in the province. **It has created a Provincial Council without control of planning, without control of the provincial budget, without control of police and public order within the province, without control of disposition of state land within the province, without control of higher education and whose remaining meagre legislative powers are subject to the over riding will of the Central Parliament.** And the provisions of the Provincial Councils Act itself may be amended from time to time by a simple majority of members present and voting in Parliament!" *(Nadesan Satyendra: 13th Amendment to Sri Lanka Constitution, 1989)* | "The proposals deny the existence of the Tamil homeland in the NorthEast of the island... The Parliamentary Select Committee prevaricates when it pretends to offer 'federalism' (with a nod and a wink) without using the term 'federal' in 'any manifest sense'! The seven Sinhala dominant provinces in the South, whose people at no stage struggled for autonomy, leave alone self determination, are treated by the Select Committee proposals in the same way as the two Tamil provinces in the North-East. That in itself is proof enough of the meagre nature of the powers to be devolved on each province. Furthermore the dominant Sinhala majority will continue to rule at the centre and will have control even over these meagre powers." *(Network, August 1993)* |

## ..in the end, a question not on

"The whole world is providing arms and funds to our ene own legs, on our own soil, with our own people and fight with we stand upright without bowing to the pressures of others want a permanent, stable and honourable peace. One day w the hand of friendship." - *from the Address by Tamil Eelam leac*

# களத்தில்

மாவீரர் சிறப்பிதழ்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 25 -11-1994


# தேசம் விடியமுன் விழி மூடிய வேங்கைகள்


எமது தாயகத்தை நோக்கிய பாதையும், பயணமும் தமிழீழம் எமக்கிட்ட கட்டளையாகும். கால்நூற்றாண்டு காலமாக தமிழ் மக்களின் அறவழிசார்ந்த போக்கும், போராட்டமும் எதிரியின் உள்ளங்களை ஊடுருவிச்சென்று உறைக்கவில்லை. அவனால் தருமத்தின் குரலான எங்களின் குரல்களை உணரமுடியவில்லை. மாறிமாறி வந்த சிறீலங்கா அரசின், ஆட்சியாளர்களின் இனவாதப்போக்கினால் எமது அறவழிப் போராட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாகத் தமிழினத்தையும், தமிழர் தாயகத்தையும் முற்றாக அழித்துவிடுவதிலேயே அவர்கள் முனைப்புக்கொண்டிருந்தனர். இந்தவேளையில் 'ஆயுதமேந்திய போராட்டத்தைத் தவிர, வேறு மார்க்கம் கிடையாது' என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், எதிரி எந்த ஆயுதங்களை ஏதுமறியாத தமிழர்கள்மீது ஏவிவிட்டானோ, அதே ஆயுதங்களின் முனைகளை அவனுக்கு எதிராகத் திருப்பினர்.

அன்றிலிருந்து எமது மண் விடுதலைக்காக, குருதியால் குளிப்பாட்டப்படுகின்றது. சமரென்று வந்தாலே சாவு சரித்திரமாகின்றது. தீச்சுடரில் விட்டில் பூச்சிகள் தீய்ந்துபோவது போன்றதல்ல எமது போராட்டம். வெறும் காற்றிலே கைகள் வீசி நடப்பது போன்றதல்ல எங்கள் வழித்தடம். எமது இனத்தின் விடிவுக்காக, வெளிச்சத்துக்காக உயிரிலிருந்து எதையும் இழக்கும் உணர்வு இருக்கிறதே அந்தத் 'தற்கொடை'யே உலகத்தின் கண்களுக்கு, தமிழீழத்தை உற்றுப்பார்க்க வைத்தது.

எமது மாவீரர்களின் விதம் விதமான வீரச்சாவுகள் இருக்கிறதே, அது வரிகளால் எழுத முடியாத வரலாறு. உடனே உலர்ந்துபோகும் மையினால், உணரவைக்க முடியாத உணர்வுகள்.

விடுதலைக்காக விழி மூடிய எம் வீரர்களை நாம் 'மாவீரர்கள்' என்று அழைக்கின்றோம். இவர்கள், தேச விடுதலைக்காய் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்கள்; உயிரினை ஈய்ந்து, உடலை உரமிட்டு, செங்குருதியால் வீரவரலாறு படைத்து, தமிழீழ மண்ணிலும் தமிழ் மக்கள் மனங்களிலும் நினைவுச் சிலைகளாய் நிற்பவர்கள்; தமிழீழ மண்ணின் புதுவிதைகளாகி, விழுதுகளைப் பிறப்பித்து நிற்பவர்கள்; விடுதலையின் தீச்சுடராகி, தேசமெங்கும் சோதியாய் நிற்பவர்கள்; தேசம் தூங்கிய போது விழித்திருந்தவர்கள்; இளமை உணர்வுகளை, தம் பாசங்களைப் பொசுக்கியவர்கள்; பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்; தமது மக்களுக்காய் கால்களை, கைகளை இழந்து நின்றவர்கள்.

இத்தகைய ஈகங்களுக்குரியவர்கள் நித்திய உறக்கத்திலிருக்கும் இடங்களை 'மாவீரர் துயிலும் இல்லங்கள்' என்று புனிதப்படுத்துகின்றோம். இத்துயிலுமில்லங்களில், மாவீரர் நாளின் நள்ளிரவில் நாதமணி ஒலியெழுப்புவதும், நினைவுச் சுடர்களை ஏற்றுவதும், கல்லறைகளுக்கு முன்னால் நின்று கண்ணீர் சிந்துவதும், வணக்கத்திற்காகக் குனிந்துகொண்ட தலைகளை மீண்டும் நிமிர்த்திக்கொள்வதும் வெறும் சடங்காகவோ, சம்பிரதாயமாகவோ செய்வதல்ல; 'உங்கள் பாதையில் நாங்கள் தொடருகின்றோம்' என்ற உறுதியை எமக்குள்ளே எடுத்துக்கொள்வதற்கும், எங்கள் தலைவனின் கரங்களை இன்னும் இறுக்கமாகப் பற்றிக்கொண்டு, அந்தத் தலைவனுடன் எங்கள் பாதை பிசகாத பயணத்தில் தொடர்ந்தும் முன்னேறுவோம் என்று முரசறைவதற்குமாகவே.



ஒரு விதை, பத்தாவது போல, வீரச்சாவடைந்த ஒரு மாவீரனும் பத்துப் போராளிகளை உருவாக்குகின்றான் என்பதை உலகுக்கு உணர்த்துகின்றோம்.

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...

# காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்



எமது வீர சுதந்திர வரலாறு, எம் மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல; இந்த வீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டது. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள், சுதந்திரச்சிப்பிகள், எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு 'வித்திட்டுச்சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள், காலம் காலமாக எமது இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல; அவன் ஒரு இலட்சியவாதி. ஒரு உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமுள்ளது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதரணமான பிறவிகள்.

சிங்கள ஆயுதப்படைகளையும் உலகின் மிகப் பெரிய இந்தியப் படைகளையும் எதிர்த்து, தனித்து நின்று போராடி எமது மாவீரர்கள் படைத்த மகத்தான சாதனைகள் இன்று உலக வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. நீண்டதும், கடினமானதும், அபாயகரமானதுமான இந்த போர்களில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறு களை, துன்பங்களை எழுத்தில் விபரிக்க முடியாது. இரும்பையொத்த இலட்சிய உறுதியுடன், எதையும் தாங்கும் இதயத்துடன், சாவுக்கு அஞ்சா வீரத்துடன் எமது வீரர்கள் போராடினார்கள்; போர்க்களத்தில் வீரமரணத்தைத் தழுவினார்கள்.

நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டுகாலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்தபோதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் மேலும் உரமூட்டியிருக்கிறன. இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கின்றேன். அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும், வீரத்தையும், விடுதலைப்பற்றையும் எண்ணிப் பார்க்கும்போது எனது உள்ளம் பெருமை கொள்கிறது.

இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகிறேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக, தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ளவேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை; சரித்திரமாகிவிட்டார்கள்.

எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும். எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும். இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆக வேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும். மரணத்தின் நிழலில் வாழத்தான் வேண்டும்.

நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கிறோம்; அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சி வளர்க்கிறோம். அந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை ஒரு நாள் நனவாக்கும்.

**- தமிழீழத் தேசியத் தலைவர்**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# தேசியக் கடமை

எமது மண்ணிற்காகவும், இனத்திற்காகவும், மக்களுக்காகவும் தம் வாழ்வை, இன்னுயிரை ஈகம் (தியாகம்) செய்த மறவர்களை நினைவுகூர்ந்து, கௌரவிக்கும் நாளே மாவீரர் நாள். கார்த்திகை 21 ஆம் நாளிலிருந்து 27 ஆம் நாள் வரையுள்ள காலம் மாவீரர் வாரமாகும். இந்த ஏழு நாட்களும் தமிழீழமெங்கும் மாவீரர்களை தமிழீழ மக்கள் நினைவுகூர்ந்து, அவர்களின் ஈகத்தைக் கௌரவிக்கின்றார்கள்.

இந்நிகழ்வு, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மட்டுமல்ல, உலக விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதொன்று. ஏனெனில் தமிழீழத்தில் மட்டும்தான், விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்லும் சமகாலத்தில், விடுதலைக்கு வித்தான மாவீரர்கள் நினைவுகூரப்பட்டு, கௌரவிக்கப்படுகின்றார்கள். மாவீரர் மட்டுமல்ல, மாவீரர் குடும்பங்களும் கௌரவிக்கப்படுகின்றன.

இவ்வரலாற்று நிகழ்வு உலகில் நடைபெற்ற வேறெந்த விடுதலைப் போராட்டங்களிலும் இடம்பெறவில்லை. தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்லும் எமது தலைமையின் சிறந்த வழிகாட்டலுக்கு, மாவீரர்களைக் கௌரவிப்பதும் ஒரு சான்றாக உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினரான சங்கர் (சத்தியநாதன்) 1982 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் நாள் தமிழீழ விடுதலைக்காக முதல் களப்பலியானார். அன்றிலிருந்து இன்று வரை ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் சுதந்திரத்திற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ளனர். இந்த மாவீரர்வாரம் ஒரு களியாட்டத்திற்குரிய காலமல்ல; அதேவேளை சோகம் ததும்பிய நாட்களுமல்ல. இந்நாட்கள் எமது மண்ணிற்காகவும், சுதந்திரத்திற்காகவும் தமது உயிரை ஈகம்செய்த வீரவேங்கைகளை மக்கள் நினைவுகூருவதோடு -வணக்கம் செலுத்துவதோடு தமது சுதந்திர எழுச்சியை வெளிக்காட்டும் நாட்களும் ஆகும். இறுதி நாளாகிய 27 ஆம் நாளே தமிழீழத் தேசிய நாளுமாகும்.

"எங்களுக்காக மடிந்த உடன் பிறப்புக்களே! உங்களை நாங்கள் மறக்கவில்லை; உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களிலே நிழலாடும்; உங்களுக்கு நாங்கள் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்; உங்கள் நினைவுகளுடன், எங்கள் விடுதலைப் பணியைத் தொடர்வோம்" என்பதே மாவீரர் வாரங்களில் நாம் வெளிக்காட்டும் உணர்வுகளாகும்.

ஒரு போராளி அதிலும் விடுதலைப் புலியாக உள்ளவன், போராடப் புறப்படும்போதே தனது சாவையும் எதிர்பார்த்து -அனேகமாக நிச்சயப்படுத்திக்கொண்டே புறப்படுகின்றான். அவர்களின் கனவாக தமிழ் மண்மீட்பு, தமிழ்மக்களின் சுதந்திரம் என்பன மட்டுமே உள்ளன. அதாவது தனது மரணம் தமிழ்மக்களின் விடிவுக்காக என்பதை அவன் நிச்சயப்படுத்திக்கொண்டே களம் செல்கின்றான்; போராடுகின்றான்; வீரச்சாவு எய்துகின்றான்.

சகல போராளிகளும் உலகில் உள்ள சாதாரண மனிதர்களின் அபிலாசைகளை உடையவர்களாகவே உலகில் பிறந்து வளர்கின்றார்கள். ஆனால் இடையில், தனது இனம்படும் அல்லல்களைக் கண்டே அவன் போராளி ஆகின்றான். அவனுக்கும் தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர் என்ற பாசப்பிணைப்புக்கள், இளமை உணர்வுகள் வேறு அபிலாசைகளும் உண்டு. ஆனால் இவை யாவற்றிற்கும் மேலாக, தமது இனத்தின் விடுதலையே முதன்மையானது என்று கருதுகின்றார்கள். அதனாலேயே அவன் போராளியாகின்றான்; களம் செல்கின்றான். பெரும்பாலும் தான் அனுபவிக்க முடியாத ஒன்றிற்காக தனது சொந்த வாழ்க்கையை -யாவற்றிலும் மேலான உயிரைத், தமது இனத்தின் நலனுக்காகவும் விடிவிற்காகவும் அர்ப்பணிக்கின்றான்.

விடுதலைப் போராளிகளின் ஈகத்தில் இருந்துதான் ஒரு இனத்தின், நாட்டின் சுதந்திரம் பிறக்கின்றது. இது தமிழினத்திற்கு உரியது மட்டுமல்ல; அடக்குமுறையிலிருந்து விடுதலைபெற்ற, பெறப்போராடும் அனைவருக்கும் பொருந்தும். அதாவது ஒரு இனமக்கள் அல்லது நாடு சுதந்திரமாகவும் இறைமையுடையதாகவும் இருக்க வேண்டுமானால், துன்பமும் ஈகமும் செய்துதான் ஆகவேண்டும்.

இவர்கள் அடையும் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும், ஈகங்களுக்கும் தம்மினத்திடம் இருந்தோ அன்றி தன் தேசத்திடம் இருந்தோ எதையும் எதிர்பார்ப்பதில்லை. தமது ஈகத்தால் தமது இனம் விடுதலை அடையும்; எதிர்காலச் சந்ததி சுதந்திரமாக வாழும் என்றே நம்புகின்றனர். அதேவேளை தமது உயிரை ஈகம் செய்தவர்களுக்கு ஈடாக, நாம் பெரும் கைமாறு எதையும் செய்துவிடவும் முடியாது.

ஆனால் அவர்களை நினைவுகூர்ந்து கௌரவிக்கவும், அவர்களின் அர்ப்பணிப்புக்காக வணக்கம் செலுத்தவும், அவர்களின் இலட்சியங்களைப் பின்பற்றிச் செல்லவும் முடியும். இது தமிழினத்தின் ஒவ்வொருவரதும் தேசியக் கடமையும்கூட. தமிழினம் எங்கு வாழ்ந்தாலும் இத்தேசியக் கடமையை மறக்கக்கூடாது. அதனால் தான் மாவீரர்களைப் போற்றிக் கௌரவிக்கும் நிகழ்வு தமிழீழத்தில் மட்டுமல்ல, தமிழீழத்தவர் புகலிடம் தேடியுள்ள -புலம்பெயர்ந்துள்ள நாடுகளிலும் இடம்பெறுகின்றது. இந்நிகழ்வில் நாமும் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டு, மாவீரர்களைக் கௌரவிப்போம். எமது தேசியநாளை எழுச்சியுடன் நினைவுகூர்வோம். அவர்களின் இலட்சியங்களை நோக்கி நாமும் முன்னேறுவோம். ■

# ஒரு வேங்கையின் வீரமரணம்

## லெப். சங்கர்...

### ஆயுதப்படைகள் வலைவிரித்துத் தேடும் செ. சத்தியநாதன்...




இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லா வீரன்; தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன்.

கண் திறக்காத பூனைக்குட்டியாக -நெஞ்சில் கனலும் புரட்சிகர உணர்வோடு சின்ன வயதிலேயே இயக்கத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கக் காத்திருந்த வீர மறவன். அரசபடைகளின் திடீர் முற்றுகையிலிருந்து தப்பிச்செல்லுகையில் -சுற்றி நின்று, கமாண்டோக்கள் சரமாரியாக குண்டுகளைத் தீர்த்தபோது காயமுற்று, எங்கள் இயக்கத்தின் முதலாவது களப்பலியாகும் பெருமையை அணைத்துக்கொண்டவன்.

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு. ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து, ஆளையே முடித்துவிடக்கூடிய வெடிகுண்டுகள் தயாரிப்புக்களிலும் அச்சமில்லாது ஈடுபடுவான். அரசபடைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி அவன் கிராமங்களில், வீதிகளில் சாதாரணமாக உலவிவருவான்.

படுகாயமுற்ற நிலையிலும்கூட -மதில்தாண்டிப் பாய்ந்து, தங்கள் கெரில்லாப் பிரிவின் மற்றொரு மறைவிடத்தை நோக்கித் தப்பிச் சென்றவன், பாதுகாப்பான இடம் வந்து சேர்ந்துவிட்டோம் என்று தெரிந்தபின்தான், இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுத்துக் கீழே வைக்கிறான். உயிரோடும் ஆயுதத்தோடும் எதிரியின் கைகளில் பிடிபடாத ஒரு வீரனின் சாவு அவனுடையது.

இனிமேல் "சாரணர்களை அனுப்பி, வடக்கில் புலிப்படையை அடக்கிவிடமுடியும்" என்று பாசிச சர்வாதிகாரி ஜே. ஆர். ஜெயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்தபோது, நெல்லியடியில் அரசபடைகள்மீது சங்கர் நடாத்திய கெரில்லாத் தாக்குதல், "தமிழீழம் காணும்வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஒழியாது" என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின்மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்குச் சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசால் பொலிஸ் நிலையங்கள் உசார்ப

## லெப். சங்கர்



தமிழீழ விடுதலையின் வித்தாக
27 - 11 - 1982

அதேநேரத்தில் சுழன்றுகொண்டிருக்கும் விழிகள், சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறும்கூட ஒரு கெரில்லா வீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரசபடைகளின் கையில் சிக்க நேருமானால், எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்திவிட்டுத் தானும் சாவது என்பதில், அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப் போராளிகள் எனப்படுபவர்கள் ஆயுதங்களோடு பிடிபடும் செய்திகளை செய்தித்தாள்களில் வாசிக்கையில் குமுறுவான். அமைதியான தன்மையும், அதிகம் பேசாத சுபாவமும்கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு, அரசபடைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப் போராளி சரணடைவது கோழைத்தனமானது என்பது, சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது.

டுத்தப்பட்ட நிலையில், மாடிக் கட்டடத்தோடு, பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின்மீது முன்பக்க வாயிலுக்கூடாகத் தாக்குதல் நடத்துவது என்பது விசப்பரீட்சைதான். ஜி 3 துப்பாக்கி சகிதம் படுத்துக்கிடந்த சங்கர், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல், அப்பகுதி அரச படைகளை ஸ்தம்பிக்கச்செய்தது.

எந்தவிதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கெரில்லாத் தாக்குதலையடுத்து ஏற்படுகின்ற பரபரப்பு, எதிரிப் படைகள் ஸ்தலத்திற்கு வருமுன்னர் வெளியேறவேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும்போது, மிகுந்த கவனம் செலுத்துவான்; தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விசயங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதில் ஆர்வம்கொண்டவன். அன்போடும் பண்போடும் பழகுவதால், சக போராளிகள் மத்தியில் தனிமதிப்பு வகித்தவன்.

தமிழீழ விடுதலையை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் -இராணுவத் தலைமையிலேயே வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கைகொண்டிருந்த சங்கர், இயக்கத்தில் தன்னையே கரைத்துக்கொண்டவன். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூகவிரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்பவாதிகளையும் அவன் அறவே வெறுத்தான். அவன் மனசு மிகவும் சுத்தமானது. இத்தகைய இதயசுத்தி நிறைந்த போராளிகளே, ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

தலைவர் பிரபாகரனின் அரசியல் வழிகாட்டலிலும், இராணுவக் கட்டுக்கோப்பிலும் சங்கர் ஊறிவளர்ந்தவன். தலைவரின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற -தூய்மைமிக்க விடுதலைப் போராளிகளினால் தான் தலைமையேற்று நடாத்தப்படவேண்டும் என்று விரும்பியவன்.

சாகும் தறுவாயிற்கூட அவன் தன் உற்றார், பெற்றோரை நினைக்கவில்லை. "தம்பி! தம்பி! என்றுதான் அந்த வீரனின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும் மற்ற இயக்கப் போராளிகளும் கண்கலங்கிநிற்க, அந்த வீரமகன் தன் தலைவனின் மடியிலேயே விடுதலைக்கு வித்தாகி, வீரகாவியமாகிவிட்டான். ■

எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக,
இன்னுயிர்களை அர்ப்பணித்த தியாகிகளை இன்று
நாம் நமது இதயத்தின் ஆலயங்களில் நினைவு கூர்ந்து
கௌரவிக்கின்றோம். ஒரு புனித இலட்சியத்துக்காக
வாழ்ந்து, அந்த இலட்சியத்துக்காகப் போராடி, அந்த
இலட்சியத்தை அடைவதற்காக தமது வாழ்வைத்
தியாகம் செய்த மாவீரர்கள் மகத்துவமானவர்கள்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

# களப்பலியான முதல் பெண் போராளி நினைவு நாள் எழுச்சிகர அனுஸ்டிப்பு

## அணிநடை, ஊர்திகள் பவனி, பேரணி - ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கேற்பு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் களப் பலியான பெண் புலி 2 ம் லெப். மாலதியின் 7 ஆம் ஆண்டு நினைவு 10. 10. 94 இல் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. மாலை 5 மணியளவில் திருநெல்வேலி சந்தியில் ஆரம்பித்த எழுச்சி ஊர்வலத்திலும், அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். ஊர்வலம் நடைபெற்ற பாதையின் இரு மருங்கிலும் பெருமளவு மக்கள் குழுமியிருந்தனர்.

மகளிர் படையணி, கடற்புலிகள் அணி, மாணவர் அமைப்பினரின் அணி மற்றும் பாடசாலை மாணவர்களின் அணி ஆகியவற்றின் பாண்ட் இசையுடன் காவல் துறையினரும் இணைந்து, திருநெல்வேலிச் சந்தியில் இருந்து அணிவகுப்பு ஆரம்பமாகியது.

அணிவகுப்பைத் தொடர்ந்து மாலதியின் திருவுருவப்படத்தை தாங்கிய ஊர்தியும்; மேலும் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய கோட்டகளைச் சேர்ந்த மாணவர்களினதும் பொதுமக்களினதும், கோட்டங்களினதும் ஊர்தியும் அணிவகுத்து, பரமேஸ்வரா சந்தி ஊடாக யாழ். பல்கலைக் கழக மைதானத்தை சென்றடைந்தது.

மைதானத்தில் முதலில் அணி வகுப்பு மரியாதை இடம் பெற்றது. அடுத்து விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தணிகைச் செல்வி தலைமையில் விழா ஆரம்பமானது. மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஈகச் சுடரை ஏற்றினார். தேசியக் கொடியை கடற்புலிகளின் மகளிர் படையணி சிறப்புத் தளபதி மாதவி ஏற்றி வைத்தார். அடுத்து மாலதியின் திருவுருவப்படத்திற்கு அவரது தந்தையார் மலர்மாலை அணிவித்து ஈகச்சுடரையும் ஏற்றினார். தொடர்ந்து போராளிகள், பொதுமக்கள் மாலதியின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர். அடுத்து அமைதிவணக்கம் செலுத்தப்பட்டது.

விழாவிற்குத் தலைமை தாங்கிய தணிகைச் செல்வியின் தலைமை உரையைத் தொடர்ந்து நினைவுரைகள் ஆற்றப்பட்டன.

நினைவுரைகளைத் தொடர்ந்து, 2 ஆம் லெப் மாலதியின் 7 ஆம் ஆண்டு நிறைவு கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. இவர்களுக்கான பரிசில்களை மகளிர் படைத்தளபதி விதுசா அவர்கள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளுடன் விழா நிறைவுற்றது.

## தமிழீழப் பெண் புலிகளின் விதையாக 2 ஆம் லெப். மாலதி நிற்கின்றாள்

### - மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் ரதி

"2 ஆம் லெப். மாலதியின் வீர சாதனை ஒரு அளப்பரிய சாதனை -தமிழீழத்திலே பெண் புலிகளின் விதையாக இங்கே நிமிர்ந்து நிற்கின்றாள். நாங்கள் இந்த மண்ணை, மக்களை பாதுகாக்க வேண்டிய தேவை எங்களுக்கும் உண்டு என்பதை மாலதி எங்களுக்கு உணர்த்தி வைத்துள்ளார்" இவ்வாறு மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "நாங்கள் ஒவ்வொருவரும் உணர்வு பூர்வமாக மாலதியை எண்ணிப்பார்க்க வேண்டும். மாலதி தன்னை அர்ப்பணித்தது எங்களுக்காகத்தான். மாலதி முதலாவதாக தன்னை அர்ப்பணித்ததைத் தொடர்ந்து, 518 பெண் மாவீரர்கள் இந்த மண்ணிலே வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்கள்" என்றார்.

இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தணிகைச்செல்வி உரையாற்றுகையில்; "இன்றைய நிகழ்வானது எங்களுடைய போராட்டத்தின் தமிழீழ பெண் சமூகம் ஒன்றின் மிகப் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்திய ஒரு நிகழ்வாகும்.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலிலே 2 ஆம் லெப் மாலதி அவர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருடைய வீரச்சாவிற்கு நான்கு ஆண்டுகள் முன் நோக்கிப் பார்க்கின்ற போது, எங்களுடைய சமூகத்திலே பெண்கள் காலம் காலமாக ஒரு சமூக அடக்குமுறைக்கு உட்பட்டு பெண் என்று சொன்னால் இப்படித்தான் வாழ வேண்டும் என்று அந்த சமூகக் கட்டுபாட்டுக்குள்ளே வளர்த்தெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தக் காலகட்டத்திலே தான் எங்களுடைய தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே 2 ஆம் லெப். மால்தி அவர்கள் இணைந்து கொண்டார்" என்றார்.

## மக்கள் சுதந்திரமாய் வாழ்வதற்காக தன்னுயிரைத் தியாகம் செய்தவள்

### - கடற்புலிகள் மகளிர் படையினைச் சேர்ந்த பூரணி

"எமது தமிழீழ மக்கள் என்றுமே சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகவே தனது இன்னுயிரை தியாகம் செய்துள்ளார் 2 ஆம் லெப். மாலதி" இவ்வாறு கடற் புலிகள் மகளிர் படையணியைச் சேர்ந்த செல்வி பூரணி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

"வல்லமை பொருந்திய இந்திய இராணுவத்துடன் மோதுவது என்றால் எவ்வளவு கடினமானது; அப்படியான ஒரு பெரும் படையுடன் மோதியபோது தான் எமது முதலாவது பெண் போராளி 2 ஆம் லெப். மாலதி வீரச்சாவடைந்தார்" என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி கூறுகையில்; "இந்திய இராணுவம் இங்கு வந்து எமது தளபதிகளான திலீபன், குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் சாவுக்குக் காரணமாகிய பின்னர் ஆரம்பமான இந்திய இராணுவத்துடனான போரில் கோப்பாய் வெளியில் 2 ஆம் லெப். மாலதி வீரச்சாவடைந்தார். 1987 பத்தாம் மாதம் பத்தாம் நாள் அன்று சரியாக நள்ளிரவு நேரத்தில் இச் சம்பவம் நிகழ்ந்தது. நாவற்குழி பாதை மூடியிருந்த காலம். கோப்பாய் பாதையையே பொதுமக்கள் பாவித்து வந்தனர். அப்போது இராணுவத்தினர் தமது வாகனத்தின் ஒளியை அணைத்துவிட்டு வந்து கொண்டிருந்தார்கள். மிகவும் கிட்ட வந்தபோதே, வருவது இராணுவ வாகனம் என அறிந்ததும் தாக்குதல் ஆரம்பமானது. இத் தாக்குதலின்போது மாலதியின் இரண்டு கால்களிலும் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்துவிட்டன. அப்போது மாலதி தனக்கு அருகில் நின்ற தோழியிடம் தனது துப்பாக்கியைக் கொடுத்து என்னை விட்டு விட்டுப் போங்கள் எனது ஆயுதம் பத்திரம் நீங்கள் தப்புங்கள் என்றார்.

எமது போராளிகளின் இரத்தத்தாலும், தசையாலும் பெறப்பட்டவை தான் அந்த ஆயுதம் என்பதால், அவள் இராணுவம் சூழ்ந்திருந்த வேளையிலும் தன்னுயிரை விட அந்த ஆயுதத்தைப் பற்றி நினைத்தாள்.

ஆனால், கூட இருந்த தோழி கூறினால், நீ வராவிட்டால் நாங்கள் போகமாட்டோம். உன்னுடனேயே நாங்களும் சாவோம் என்று. தன்னைவிட தன்னுடன் அருகில் நிற்கும் போராளிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய வற்புறுத்தலுக்கு இணங்கினாள். அப்போது இராணுவம் கூச்சலிட்டவாறு வாகனத்தில் இருந்து இருபது இருபத்தைந்து யார் தூரத்தில் இருந்து பாய்ந்து வந்து கொண்டிருந்தது. அந்த இராணுவத்தை எதிர்த்து ஒரு போராளி தாக்குதலை நடாத்திக் கொண்டு, ஏனையவர்கள் மாலதியைத் தூக்கி வரும்போது இடைவெளியில் மாலதியின் உயிர் பிரிந்தது" என்றார்.

**2 ஆம் லெப். மாலதி**



தமிழீழ மண்ணின் வித்தாக
10 - 10 - 1987

## இரு சக்திகளுக்கு எதிரான போரில் தமிழீழ தாய்க்குலம் ஈடுபட்டுள்ளது

### - தமிழீழ காவற்றுறைப் பொறுப்பாளர் நடேசன்

"தமிழீழ தாய்க்குலமானது அந்நிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தினை மட்டுமல்ல, எமது சமுதாயத்தில் நிலவும் சமூக ஒடுக்குறைக்கு எதிரான ஒரு போராட்டத்தினையும் நடத்தவேண்டிய நிர்ப்பந்தமான ஒரு சூழ்நிலையில் உள்ளது" என யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற 2 ஆம் லெப் மாலதியின் 7 ஆம் ஆண்டு நினைவுக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தெரிவித்தார். அவர் அங்கு உரை நிகழ்த்துகையில்;

"தமிழீழ மக்களாகிய நாம் கடந்த நான்கு தசாப்தங்களாக அந்நிய ஆக்கிரமிப்புக்களுக்கும், ஆக்கிரமிப்பு சக்திகளின் அடாவடித்தனங்களுக்கும், அட்டூழியங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றோம்.

எமது பிரதேசத்தை ஆக்கிரமித்திருந்த, ஆக்கிரமிப்பதற்காக செயற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த அந்நிய சக்திகள், எமது மக்கள் மீதும் எமது மண்ணின் மீதும் இன அழிப்பு அட்டூழியங்களைப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், எமது மக்கள் மீது புரியப்படும் இந்த அட்டூழியங்களும், அடாவடித்தனங்களும் எமது மக்கள் சமுதாயத்தின் சரி அரைவாசியாக இருக்கும் தமிழீழ தாய்க்குலம், அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகளின் அடாவடித்தனங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் மட்டுமல்ல எமது சமுதாயத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளுக்கும், பெண் ஒடுக்குமுறைக்கும், ஆண் ஆதிக்கத்திற்கும் எதிரான ஒரு சமூகவிடுதலைப் போராட்டத்தினையும்

மாவீரர் சிறப்பிதழ் மாவீரர் நாள் 27 11 94

கொண்டு நடாத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தக் காலகட்டத்தில் தான், தீர்க்கதரிசனம் மிக்க எமது தேசியத் தலைமையின் கீழ் தோற்றம் கொண்ட எமது தேசிய போராட்டத்துடன், தமிழீழ தாய்க்குலம் தன்னையும் இணைத்துக் கொண்டது.

அதன் முதலாவது சாதனையாகத்தான் இந்த ஒடுக்கு முறைகளுக்கு அடக்குமுறைகளுக்கு எதிராக, அதுவும் ஒரு வல்லாதிக்கத்தின் இராணுவ அடக்குமுறைக்கு எதிராக, தமிழ்த்தாய்க் குலத்தின் முதலாவது அர்ப்பணிப்பாக 2 ஆம் லெப். மாலதி ஒரு திருப்பு முனையை உருவாக்கினார்" என்றார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றுகையில், "இந்திய இராணுவம் நகரத் தொடங்கியதும் அதனை முதல் முதல் சந்திக்கிறது மகளிர்படை அணி. மகளிர்படைதான் இந்திய இராணுவத்தை முதலில் எதிர்த்தது. ஆக்கிரமிப்பு வரலாற்றிலும் எங்களுடைய போராட்ட வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் ஒரு முக்கியமான சம்பவம் இது" என்றார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "தலைவர் ஒரு விடயத்தைச் சரியாகப் புரிந்து கொண்டுதான் இந்தப் போராட்ட நகர்வுகளை ஆரம்பித்தார். எங்கள் மண்ணிலே சரி அரைவாசிக்கு மேலாக உள்ள பெண்கள், எதுவும் முடியாது என்ற நிலையிலே வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியான சமுதாய ஒடுக்கு முறை ஒன்று இருக்கிறது. எனவே தமிழீழத்தில் இருக்கின்ற பெண்களை, எதுவும் தங்களால் முடியும் என்ற நிலைக்கு மாற்ற வேண்டும் என நினைத்தார்.

அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, தமிழீழ மகளிர் படையணியிலே மாலதி அவர்கள், ஒரு தூணாகவும் உறுதியின் உறைவிடமாகவும் நிற்கின்றார்" என்றார். ■

**"நீண்ட விடுதலைப் பயணத்தில், சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம். போராட்ட வாழ்வின் பெரும்சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம். மேலும் பளுக்கள் எம்மீது சுமத்தப்படலாம். ஆனால் நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு, உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்த ஒரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது. வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம். இன்று எமது மாவீரர்களின் கல்லறையிலிருந்து ஒலிக்கும் சுதந்திர கீதமும் உறுதியின் உன்னதத்தைத்தான் பாடுகின்றது.**

**- தமிழீழத் தேசியத் தலைவர் -**

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா
குழியினுள் வாழ்பவரே!










உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.




உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது உரைத்தது தமிழீழம் - அதை

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.








நள்ளிரா வேளையில் நெய் விளக்கேற்றியே
நாமுமை வணங்குகின்றோம் — உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்.



**நிரை நிரையாகவே நின்றினி விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்**

மாவீரர் 27 . 11 . 94 நாள்
சிறப்பிதழ்

# தீபம்

சிறு கதை

யேர்மனியிலிருந்து
புதியவன்

பனைமரச் சோலையிலிருந்து மெதுவாக வீசிவரும் தென்றல் காற்றின் தாலாட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் மாவீரர் துயிலும் இல்லம். மனத்தை ஒருநிலைப்படுத்தி, மனதில் மாவீரர்களின் நினைவை நிறைத்து, கையிரண்டிலும் தீபம் ஏந்தி நடந்துசெல்லும் தமிழீழ மக்கள் கூட்டம். அதில் ஒருத்தியாகத்தான் வசந்தி கையில் ஒளிவிளக்குடன் நடந்துகொண்டிருக்கின்றாள்.

அமைதியும், நிசப்தமும் நிறைந்தவேளை. கார்த்திகை மாதத்தின் முன்னிருட்டு கலைந்து, சில மணிகளாகிவிட்டது. நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மாவீரர்களுக்குத் தீபமேற்றுவதற்காக நீள்வரிசையில் நிற்கும் மக்கள்கூட்டம். அந்த மக்களை ஆவலுடன் படம் பிடித்துக்கொண்டிருந்த வெளிநாட்டுச் செய்தியாளர் வோல்வ்கங் வசந்தியை இரண்டாவது தடவையாக இங்கு காணுகிறார்.

சீ! எப்படியும் இம்முறை வசந்தியுடன் கதைத்துவிடவேண்டும் என்ற ஆவல் வோல்வ்கங்கை தூண்டுகிறது. சென்றவாரம் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் நிறுவனத்தின் சார்பில் தமிழீழம் வந்த அவருக்கு கிடைத்த முதலாவது செய்தி, மணலாறு முகாம் தகர்க்கப்பட்டமையாகும். அந்தத் தாக்குதலுக்குத் தலைமைதாங்கிச் சென்றவேளை அவளது அண்ணனும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான். அந்த இறுதி ஊர்வலத்தின் போதுதான் வசந்தியை அவர் முதலாவதாகக் கண்டார். அன்று வசந்தி கதறி அழுத காட்சி இன்னமும் வோல்வ்கங்கின் கண்களில் நிழலாடுகிறது. வசந்தியின் கையிடுக்கிற்குள் இருக்கும் ஊன்றுகோல் மூலம் அவளுக்கு ஒருகால் வழங்கமாட்டாது என்பதை வோல்வ்கங் உணர்ந்திருந்தார்.

இன்று எப்படியும் வசந்தியுடன் கதைக்கவேண்டும்; இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் எதையெதையோ எல்லாம் இழந்திருக்கின்றனர். ஆனாலும் வசந்தியின் தோற்றத்தில் அவளது முகத்தில் ஏற்படும் சோகத்தின் களை, அவளுக்குப் பின்னால்

**"வசந்தி...! நான் உன்னை விரும்பியது உன் அழகுக்காக அல்ல நீ உனது மண்மீது வைத்திருந்த பற்றுக்காக - உனது குடும்பத்தின் தியாகத்திற்காக... நீ எனது கருத்துடன் ஒத்த மனைவியாக இருப்பாய் என்றுதான் உன்னைக் கல்யாணம் செய்தேன்".**

ஒரு வரலாறு இருப்பதை வெளிப்படுத்துகின்றது. அவளுடன் கதைகொடுத்துப் பார்க்கத் துணிந்த அவருக்கு, அவளுடன் எந்தப் பாசையில் கதைப்பது என்ற சங்கடம். யேர்மன்பாசை அவளுக்குத் தெரியாது; தமிழ் எனக்குத் தெரியாது. எதற்கும் ஆங்கிலத்திலேயே பேசிப்பார்ப்போம் என்ற முடிவுடன் அவளை அணுகினார்.

"வணக்கம் வசந்தி...
ஐ ஆம் வோல்வ்கங்.
- நான் வோல்வ்கங் -
போறின் றிப்போட்டர்.
- வெளிநாட்டுச் செய்தியாளர் -

வெல்கம் - வணக்கம் -

என்னை உங்களுக்குத் தெரிகிறதா...? எளிமையான ஆங்கிலத்தில் சற்று அமைதியாக வந்த கேள்விதான் அது. சோகத்தில் நனைந்துவிட்ட அவளின் முகம் ஓம் என்பதற்கு ஏதுவாக லேசாக அசைகிறது. பிரிக்கமுடியாது இறுகிப்போன அவளது இதழ்கள் சற்றுவிலக வார்த்தை தொடர்ந்தது.

"சென்றவாரம்... தம்பியின் இறுதி அஞ்சலியில் உங்களைக் கண்டேன். அது எனது இரண்டாவது தம்பி" -அந்த சற்றுக்கேறிய குரலில் வந்த வார்த்தைகள் தான் அவை -ஆனாலும் அழுத்தமாக, தெளிவாக வந்த வார்த்தைகளிலிருந்து -வசந்திக்கு ஆங்கிலப் பாசையிலிருந்த பாண்டித்தியம் புரிந்தது.

"அப்படியானால் உங்களது முதலாவது தம்பி...?"

"வடமராட்சித் தாக்குதலில்... வெடிமருந்து நிரப்பிய வாகனத்தில் சென்று, எதிரியின் முகாமைத் தாக்கியதில்... அவன் அக்கினிப்பிழம்பாகக் கலந்துவிட்டான்".

"எதிரியை அழிப்பதற்குத் தன்னுயிரைக் கொடுத்தவரா...?"

"என்ன செய்வது, நாம் எமது உயிரை ஆயுதமாகப் பாவித்தால் தான் அது முடியும்.

வெளிநாட்டவர்கள் நீங்கள் கொடுக்கும் பண உதவியால், எதிரி நவீன ஆயுதங்களைப் பெற்று, தன்னைப் பலப்படுத்துகிறான். தமிழின மக்களின் உணர்வை உங்களால் பேப்பரில் மட்டும்தான் எழுதமுடிகிறது. எமக்கு என்று எந்த நாடும் உதவ முன்வருவதில்லை. எமது மக்களையும் ஏனைய போராளிகளையும் பாதுகாத்துப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமானால், நாம் எமது உயிரை ஆயுதமாக, ஏவுகணையாகப் பாவித்தே ஆகவேண்டும். அந்த உயிர் ஆயுதங்களில் எனது முதலாவது தம்பி... விம்மலுடன் வந்த வசந்தியின் அந்த வார்த்தைகள் வோல்வ்கங்கின் மனத்தைத் தொட்டுவிட்டது.

"வசந்தி...!"

"இது உங்கள் தேசம்... இது உங்கள் மண்... இதை நீங்கள் தான் மீட்டெடுக்கவேண்டும். நாங்கள் வெளிநாட்டவர்கள் இதில் என்ன செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?"

"ஐயா இது எங்கள் தேசம். எங்கள் மண். இதனை நாங்கள் தான் மீட்டெடுக்க வேண்டும் என்கிறீர்களே. இது தமிழீழ மக்களுக்குரிய மண்தான் என்பதை நீங்கள் ஏன் உங்கள் பேப்பரில் எழுதக்கூடாது... நாங்கள் உங்களிடமிருந்து ஆயுதத்தையோ, ஆள்பலத்தையோ எதிர்பார்க்கவில்லை. நாங்கள் தேசிய இனம். இது எங்களது மண் என்பதை அங்கீகரியுங்கள் அதுபோதும். இங்குவரும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் எல்லாம் தமிழீழ மக்களைப் பார்த்து, அவர்களது போக்குவரத்து, பொருளாதாரம், இவற்றைப் பற்றியே பரிதாபப்பட்டு எழுதுகிறார்களே தவிர, அதற்குப் பரிகாரம் செய்ய முற்படவில்லை. எமக்குத் தேசிய விடுதலை வேண்டும் என்ற காரணத்தை எழுதுகிறீர்களா? ஆக்கிரமிப்பாளர்களின் அதிகாரத்திற்குப் பயந்து, பயந்து பரிதாபப்பட்டு எழுதும் ஆயிரம் பத்திரிகையாளர்களை விட, எமது இனத்தின் விடுதலைக்காக எமது போராட்டத்தின் முன்னெடுப்பை, துணிந்து எழுதும் ஒரு பத்திரிகையாளர் இருந்தால் அதுவே போதும் ஐயா."

கார்த்திகை இருபத்தியாறின் நள்ளிரவு! கடிகாரத்தின் இரு முள்ளும் பன்னிரண்டு மணியில் சங்கமிக்க இன்னும் இரண்டு நிமிடங்கள்தான். வசந்தி தனது பேச்சை நிறுத்தினாள். தமிழீழத் தேசிய யாகத்தில் பங்கெடுத்த மாவீரர்களை மனத்தில் நிறுத்தி, மௌனத்தால் பிரார்த்திக்க தயாரானாள்... "வோல்வ்கங் நான் தீபம் ஏற்றவேண்டும்".

"வசந்தி நான் உங்களை மீண்டும் சந்தித்துக் கதைக்க வேண்டுமே".

ஆனைக்கோட்டைச் சந்தியில் வந்து, மாவீரர் தூயவனின் அக்கா இங்கிலிஸ் ரீச்சர் வசந்தி என்று கேட்டால், யாரும் காட்டுவார்கள்...".

தெளிவான கருத்தும் கடினமான ஆங்கில உரைநடையும் கண்டு, இவளின் தரத்தை அறியமுயன்ற வோல்வ்கங்கிற்கு அவளது முகவரி மட்டுமல்ல, அவள் ஆங்கில ஆசிரியை என்பதும் புரிந்துவிட்டது.

கார்த்திகை இருபத்தியாறு இரவு பன்னிரண்டு மணி. தமிழீழம் எங்கும் கணீரிடும் மணியோசை. அனைத்து மதங்களும் ஒருமித்து எழுப்பும் நாதம். தமிழர்கள் எந்தவிடயத்தில் நேரத்தைக் கடைப்பிடிக்கத் தவறினாலும், மாவீரர்களை அஞ்சலிப்பதில் எப்பவுமே தவறுவிட்டதில்லை... வோல்வ்கங் அவரும் இவர்களில் ஒருவரானார்.

காலை விடிந்து எட்டுமணிக்கு சற்றுமுதலே, வோல்வ்கங் ஆனைக்கோட்டையில் ஆங்கில ஆசிரியை வசந்தியின் வீட்டைத் தேடலானார். அவளின் வீடு... அவள் வசிக்கும் அந்த வீடு மாட்டுத்தொழுவத்துடன் போட்டி

**"நான் ஒரு யேர்மனியன். எனது நாட்டின் தேசிய நாளை மதிக்கிறேன். நாட்டுக்காக உழைத்த தேசிய வீரர்களை வணங்குகிறேன். தமிழீழ மக்கள், மண்ணை மீட்க போராடிக்கொண்டிருக்கும்போதே, அந்த மண்ணிற்காக தம்முயிரைத் தியாகம்செய்த மாவீரர்களுக்கும் விழா எடுக்கிறார்கள். இந்த அற்புதமான நிகழ்வு உலகில் எங்கும் இடம்பெறவில்லை".**

போட்டு வெற்றிகொள்ளும் குடில் தான்; அது என்னமோ பனையோலையால் மேய்ந்து, சாக்கால் கதவிடப்பட்டதாக இருந்தாலும் இரண்டு மாவீரர்கள் தவழ்ந்து விளையாடிய இல்லம் என்பதில் அதற்குப் பெருமை. வீட்டிற்குள் நுழைந்த வோல்வ்கங்கை அங்கிருந்த மாவீரர் படங்கள் வரவேற்றன. எந்தப் பெரிய மனிதனும் அவளது இல்லத்து தலைவாசலில் நுழையும் போது தலைவணங்கித்தான் ஆகவேண்டும். அந்தளவிற்குச் சிறியவாசல். ஆனாலும் அது தான் தலைவாசல்.

அந்த இரண்டு மாவீரர்களின் படத்தோடு சேர்ந்திருந்த அந்த வயோதிபர்...

அது அவள் தகப்பனா...? அப்படியானால்... வசந்தியின்... கையிடையில் இருக்கும் தாங்குகோல்...
வோல்வ்கங்கின் மனதில் ஏகப்பட்ட நுண்ணிய வினாக்கள்...

அவள் ஒரு ஆசிரியைதானே. அவரது சந்தேகத்தைப் புரிந்து கொண்டவளாக, "இது எங்கள் அப்பா..." என்றவள்...

இந்திய வல்லரசின் கைகளைக் கட்டி காந்தீயத்தின் வேசத்தைக் கலைத்த, திலீபனின் உண்ணா விரதத்திற்கு உடந்தையாக இருந்தவர் என்பதற்காக... என் அப்பாவின் உயிரைக் குடித்த இந்திய வெறியர்களுக்கு தமிழீழப் பெண்ணின் பெண்மை விருந்து தேவைப்பட்டது. அந்தச் சித்திரவதையில், எனது வலதுகால்..." அவளால் பேச



முடியவில்லை -அவளது கண்கள்... அந்தத் தடாகம் தேம்பி வழிந்தது. அவளது குரல் கேரியது... இன்று அவள்... தனிக் கட்டை. அந்தக்காலை... அவளை மீண்டும் நடக்க வைத்து... அவளுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். அவள் நடக்கவேண்டும். எப்படியும் அவளை யேர்மனிக்கு அழைத்துச்செல்வதன் மூலம்தான் அது முடியும். அவன் அவளைத் தனக்கே சொந்தமாக்கினான்.

வோல்வ்கங் தனக்காக, தானே தமிழீழத்தில் தேடிக்கொண்ட... வாழ்க்கைத்துணைதான் வசந்தி...
அந்த அவளில் இரண்டுவருடம் கழித்து இப்போ திடீர் மாற்றம்.

வோல்வ்கங்கால் இன்றைய அவளது அந்த மாற்றத்தை ஜீரணிக்க முடியவில்லை. அவளில்... அந்த மாற்றம் வாக்கிங் ஓய்வுக்காக அவள் அடிக்கடி அந்தப் பார்க் போய்வந்த போதுதான், அந்தச் சந்திப்பு அவளை மாற்றியமைத்தது. அந்தப் பார்க்கில்தான் அவளை அந்தக் கறுப்புக் கோட்டும் பைபிளுமாகத் திரியும் அந்த தேவனின் புதிய சித்தாந்தவாதிகள் சந்தித்தனர். அவர்களது போதனையில் ஈர்ந்துபோன வசந்திக்கு அவர்களின் வாக்கு தேவனின்வாக்கு. அவளது வாழ்க்கையில் கண்ட ஒவ்வொரு துன்பத்திற்கும் அவள்... இன்று ஆண்டவனிடம் மண்டாடுகிறாள். செயற்கைக்கால் வைத்துப் பூட்டி, அவள் இவ்வளவு சீக்கிரம் குணமடைவதற்கு யேர்மனியின் மருத்துவ வசதியும் ஒரு காரணம். சிலவேளை அவள் குணமடையாது வீட்டிற்குள் இருந்திருந்தால் இந்த மனமாற்றம் ஏற்பட்டிருக்க முடியாது.

வோல்வ்கங்கிற்கு அவள் இப்போ மனைவி மட்டும்தான். அவளது இலட்சியம் எல்லாமே ஆண்டவனிடம். அவள் சிவா அண்ணையுடன் ரெலிபோனில் கதைத்தபோதுதான் அவளது மதமாற்றத்தின் வேகத்தை வோல்வ்கங்கால் உணரமுடிந்தது. என் மனைவி வசந்திக்கு இங்கு கிடைத்த சுகம், யேர்மனிய வாழ்க்கை, அதன் வசதி இவையெல்லாமே அவளை மாற்றிவிட்டதா? அல்லது போராட்டத்தின் சுமையிலிருந்து அவளது மனம் ஓய்ந்துவிட்டதா? அவனால் அவளது இந்த மாற்றத்தை நம்பமுடியவில்லை.

அடுத்தவாரம் மாவீரர் விழா...

அதற்காக கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் சிவா... வசந்தியை ரெலிபோனில் மாவீரர் தீபம் ஏற்றவருமாறு அழைத்தபோது... அவள் அவரைத் தூக்கி எறிந்து பேசியிருந்திருக்கக்கூடாது. காலத்தின் வேகம், யேர்மனிய வாழ்க்கை அவளை அப்படி மாற்றியது... ஆனாலும் அந்த மனுசன் இன்று இரவு எட்டு மணிக்கு... வசந்தியிடம் நேரில்வந்து கதைப்பதாகச் சொன்னாரே! எவ்வளவு பொறுமைசாலி. ஏன் வசந்தி தீபம்

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...

மாவீரர் நாள் 27 11 94 சிறப்பிதழ்

# தீபம்...

ஏற்ற மறுக்கிறாள்; அவளும் மாவீரர் குடும்பம்தானே... இப்போ அவள் எவ்வளவோ மாறிவிட்டாள்தான்; ஆனாலும் மாவீரர் தீபம் ஏற்றமறுக்கும் அளவிற்கு மாறிவிட்டாளே! அவர் தனது மனக்குழப்பத்திற்கு விடைதேடினார். 'இது அவளது பிரச்சினை -அவளது நாட்டுப் பிரச்சினை -அவளின் இனப்பிரச்சினை... அதில் ஏன் நான் தலையிடுவான்... அவர் தன்னைத்தானே ஆயிரம் கேள்விகள் கேட்டார். அவளை அவள் பாட்டிற்கே விட்டிட எண்ணினார். அவள் யோமனிய கலாச்சாரத்தில் வாழட்டும் என நினைத்தார். ஆனாலும்... அவரின் கருத்து -அவளை அவர் விரும்பி மணம் முடித்ததன் அர்த்தம்... அந்தக் குடும்பத்தின் தியாகம்... இவை அதில் கலந்திருந்தது. எப்படியும் அவளுடன் கதைப்பதென முடிவெடுத்து, அவளின் வரவை எதிர்பார்த்திருந்தார்.

மாலை ஆறுமணிக்கு...! அவள் வருகிறாள் -அந்த தேவதூதனின் புதிய சித்தாந்தவாதிகளின் பிரசங்கம் முடிந்து, அந்தக் கறுப்புக் கோட்காரர்கள் அவளை வீட்டு வாசலில் இறக்கிவிட்டனர்.

வசந்தி வந்து கதவைத்திறந்து வோல்வ்கங்கிற்கு கூட்டன் ஆபன் -மாலை வணக்கம் கூறியவாறே அவள் தனது ஜக்கற்றை கழட்டிக் கொழுக்கியில் மாட்டினாள்.

"வசந்தி... இன்று உன்னைச் சந்திக்க சிவா வாறாரா...?"

- வோல்வ்கங் தனது மனதில் உள்ளவற்றை அவளுடன் நேரில் கதைக்கத் தயாரானான் -

"ஓம் அந்த மனுசனுக்குச் சொன்னாலும் விளங்கிறதில்லை. நேரிலை கதைக்கவேணுமாம்... இண்டைக்கு எட்டு மணிக்கு வாறார்".

"அப்போ நீ... என்னதான் முடிவு சொல்லப்போறாய்".

"நான் என்ன சொல்லுறது. இரத்தம் சிந்துவதை எனது மதம் ஏற்றுக்கொள்ளாது. ஆண்டவனின் அந்தப் போதனையில் எனக்கு நிம்மதி கிடைக்கிறது. எல்லாம் இழந்த எனக்கு -என்மனதுக்கு அங்கு அமைதி கிடைக்கிறது. ஆண்டவனின் அனுக்கிரணையில் ஈடுபாடுடைய என்னால், அவர்களின் அழைப்பை ஏற்று அந்த விழாவிற்குப் போகமுடியாது..."

"ஆகா... ஆகா..."

வோல்வ்கங் வாய்விட்டுச் சிரித்தான்.

வசந்தி... இரத்தம் சிந்துவதை எந்த மதமும் விரும்பவில்லை... உனது தமிழ் இனமும் விரும்பவில்லை... ஏன் மாவீரர்களான உனது உடன்பிறப்புக்களும் விரும்பவில்லை; அது உண்மை. "ஒரு தார்மீக அரசில் அதனை நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் ஒரு அதர்ம அரசு, தொடர்ச்சியாக தமிழ் இனத்தை இரத்தப் பலி எடுப்பதை எந்த மதமும் ஏற்காது. ஒரு இனம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காகவே ஒரு தற்பாப்பு போரை மேற்கொள்கிறார்கள்". இந்தக் கருத்து, இந்த வார்த்தைகள் இரண்டு வருடத்திற்கு முன்னால் தமிழீழத்தில் உனது வாயிலாக வந்தகருத்து. கரும்புலியான உனது தம்பியைப் பற்றிக் கூறும்போது சொன்னியே ஒரு வசனம்; கரும்புலிகள் உயிரை ஆயுதமாகப் பாவிப்பதன் மூலம் எமது ஏனைய போராளிகளையும் மக்களின் இழப்பையும் தவிர்ப்பதுடன், தமிழீழ மண்ணை மீட்க எதிரியிடமிருந்து நவீன ஆயுதங்களையும் களைய முடிகிறது என்று -ஒரு தேசிய இனம் அழிவதை, அழிக்கப்படுவதை உலகில் எந்தமதமும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு காலத்தில் யேர்மனியில் யூதர் இனம் அழிக்கப்பட்டது. அதற்காக இன்னும் யேர்மனியர்கள் வெட்கப்படுகிறார்கள். அத்தகைய ஒரு சம்பவம் உலகில் எந்த இனத்திற்கும் வரக்கூடாது. ஒவ்வொரு தேசிய இனமும் தம்மைத்தாமேதான் பாதுகாக்கவேண்டும். தமது உரிமையைத் தாமேதான் மீட்டு எடுக்கவேண்டும்".

வசந்தி... இடைமறித்து தொடர்ந்தாள்.

- நிறுத்துங்கோ..."

"எனக்கு... இன்று தேவை அமைதி... சாந்தம்... அது எனக்கு தேவனின் போதனையில் கிடைக்கிறது. அதிலிருந்து என்னால் விலகமுடியாது.

> "வசந்தி...! இரத்தம் சிந்துவதை எந்த மதமும் விரும்பவில்லை... உனது தமிழ் இனமும் விரும்பவில்லை... ஏன் மாவீரர்களான உனது உடன்பிறப்புக்களும் விரும்பவில்லை. அது உண்மை. ஒரு தார்மீக அரசில் அதனை நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் ஒரு அதர்ம அரசு, தொடர்ச்சியாக தமிழ் இனத்தை இரத்தப்பலி எடுப்பதை எந்தமதமும் ஏற்காது".

அவளது அழுத்தமான வார்த்தைகள் முடிந்த சில நிமிட அமைதியின்பின் -

"வசந்தி..."

- மிகவும் தாழ்ந்த அமைதியான குரலில் அவர் அவளை அரவணைத்தார் -

"நீ போராட்டத்தால் நன்கு பாதிக்கப்பட்டவள் -நீ பாதிக்கப்பட்டதற்கான அர்த்தம் அன்று நீ தமிழீழத்தில் இருந்ததால் புரிந்தது. அதனால் அதன் சுமை உனக்குப் பாரமாகத் தெரியவில்லை. நீ இன்றும் அங்கிருந்தால், உன்னையே அந்தப் போராட்டத்திற்கு அர்ப்பணித்திருப்பாய். நீ வாழும் இந்த யேர்மன் நாட்டுச் சூழலில் -போராட்டத்தின் சுமையை நீ மற்றவர் தலையில் சுமத்திவிட்டு, ஓய்ந்துவிடப் பார்க்கிறாய் இது தவறு. மாவீரர்களான உனது தம்பியின் தியாகங்களுக்கு நீ மாசு விளைவிக்காதே. வெளிநாட்டில் வாழும் நீங்கள்... உனது தமிழீழத்தவர்கள் போராட்டத்தை பொழுதுபோக்காய் பார்த்தால், உங்கள் இனத்தின் அழிவைத் தடுக்கமுடியாது; விடுதலையை முன்னெடுக்க முடியாது".

- அவனது பேச்சுக்களின் நிதானத்தில் அவள் கண்கலங்கி,

> "வசந்தி...! இது உங்கள் தேசம்... இது உங்கள் மண்... இதை நீங்கள்தான் மீட்டெடுக்கவேண்டும்".

வோல்வ்கங்கின் தோள்மீது சாய்ந்தாள்".

வசந்தியை அணைத்து, அவள் தலையைத் தடவியவாறே வோல்வ்கங் மனம் திறந்து வார்த்தைகளைக் கொட்டினார்.

"வசந்தி! நான் உன்னை விரும்பியது உன் அழகுக்காக அல்ல; நீ உனது மண்மீது வைத்திருந்த பற்றுக்காக... உனது குடும்பத்தின் தியாகத்திற்காக... நீ எனது கருத்துடன் ஒத்த மனைவியாக இருப்பாய் என்றுதான் உன்னை கல்யாணம் செய்தேன். நான் ஒரு யேர்மனியன். எனது நாட்டின் தேசியநாளை மதிக்கிறேன். நாட்டுக்காக உழைத்த தேசிய வீரர்களை வணங்குகிறேன். தமிழீழ மக்கள், மண்ணை மீட்கப் போராடிக்கொண்டிருக்கும்போதே அந்த மண்ணிற்காக தம்முயிரைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கும் விழா எடுக்கிறார்கள். இந்த அற்புதமான நிகழ்வு உலகில் எங்கும் இடம்பெறவில்லை. புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழ்ந்தாலும், தமிழீழச் சிந்தனையில் வாழ்ந்து, போராட்டத்தில் பங்கெடுக்கவேண்டும் என்பதற்காகவே இங்கும் இந்த விழாவைக் கொண்டாடுகிறார்கள். அந்த மாவீரர் விழாவில் நீதான் தீபம் ஏற்றவேண்டும் என்பதல்ல; நீயும் ஏற்றவேண்டும் என்பதையே அவர்கள் விரும்புகிறார்கள். இது மாவீரர் குடும்பத்திற்கு அவர்கள் கொடுக்கும் கௌரவம்.

- அழைப்புமணி ஒலித்தது -

வோல்வ்கங் தனது கைத்தோள்களில் இருந்து மனைவியிடத்து கையை விடுவித்துக்கொண்டு, போய் வாசற்கதவைத் திறந்தார்.

அங்கு சிவா அண்ணை...

நன்கு மெலிந்து, சற்று உயரமான அந்த உருவம். காதோரமாக கன்னமயிர்களில் ஓடிஒளித்துக்கொள்ளும் சில வெள்ளை மயிர்கள் -நாற்பது வயதைத்தாண்டியிருக்கும் ஆனாலும் அவரது அந்தச் சிரிப்பில் குழந்தையின் சாயல்.

"வணக்கம் ஐயா".

"வணக்கம் வசந்தியம்மா..."

- என்றவாறே கதவைத்திறந்து உள்ளே வந்தார் -

"வசந்தியம்மா...!

நீங்கள் மாவீரர் குடும்பம்; தமிழீழ விடுதலைப் போரின் சுமையைத் தாங்கியவர்கள். மாவீரர் விழாவில் தீபம் ஏற்றும் தகுதியும் அங்கு சிறப்புரையாற்றும் தன்மையும் உங்களுக்கு உண்டு. அதனால் நாம் வீடுதேடி வந்து, உங்களை அந்த விழாவிற்கு மீண்டும் அழைக்கின்றோம். தயவுசெய்து மறுக்காமல் வரவேண்டும்".

வீடுதேடி வந்த அந்த மரியாதை, உடன் பிறந்தவர்களின் தியாகம், கணவன் வெளிநாட்டவர், மொழியால் -நிறத்தால் வேறு இனத்தவனாக இருந்தும் எமது இனத்தின் விடுதலையில் வைத்திருக்கும் பற்று, இவை அனைத்தும் அவள் மனதில் மீண்டும் நிலைகொண்டது. சிவா அண்ணையைக் கண்ட சில நொடிக்குள் அவளது நரம்புகள் சுறுசுறுப்பாயின. "சிவா அண்ணை! உங்களை சிரமப்படுத்தியதற்கு மன்னிக்கவும். உங்கள் அழைப்பை ஏற்று நான் நாளைக்கு வருகிறேன்".

கரம்கூப்பி நன்றிகூறி, சிவாண்ணை விடைபெற,

வோல்வ்கங்கின் கைகள் சிவா அண்ணையைத் தடுக்கிறது. "சிவா ஒரு விடயம். நீங்கள் ரெலிபோனில் கேட்டபொழுதே வசந்தி மாவீரர் தீபம் ஏற்றவருவதற்கு மறுத்துவிட்டா. அப்படி இருந்தும், நீங்கள் வீடுதேடி வந்து மீண்டும் அழைத்ததன் அர்த்தம்... எனக்கு விளங்கவில்லை".

சிவாண்ணையின் அந்தக் குழந்தைச்சிரிப்பு முகத்தில் தவழ,

"ஐயா! வசந்தி எம்மை வெறுத்தா என்றதற்காக நாம் அவவை வெறுத்துவிட முடியாது. எம்மை புரிந்துகொள்ள அவவிற்கு இன்னொரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். மாவீரர்களின் தியாகத்தில் வளர்ந்தது எமது போராட்டம். இந்த விழாவில் எமக்கு மாவீரர்களைத் தந்த குடும்பத்தைக் கௌரவிப்பதில், நாம் பெருமை அடைகிறோம்". அடக்கமான அவரின் வார்த்தைகள் வோல்வ்கங்கின் மனதில் பதிகின்றன...

நேரம் சரியாக நான்குமணி...! தமிழீழ விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் பிரதிநிதிகள் பின்தொடர, வசந்தி மாவீரர் தீபத்தை கையில் ஏந்தியபடி, மாவீரர் மேடையை நோக்கி நடக்கிறாள். அந்த அவளது பாதங்களில் ஒரு பதட்டம்; தான் திசைமாறி சிலகாலம் வாழ்ந்துவிட்ட அந்த வெட்கம்; அவளது கையில் ஒருவித நடுக்கம். ஐயாயிரம் மக்கள் குழுமியிருக்க, மாவீரர் தீபம் ஏற்றிய அவளது கண்களில் இருந்து, நீர் ஆறாக ஓடுகிறது. தீபத்தை ஏற்றி முடிந்ததும், மூன்றுநிமிட மௌன அஞ்சலி... மௌனத்தின் மத்தியிலும் அவள் இதயம் அழுகிறது. இத்தனை ஆயிரம் மக்களுக்கும் முன்னால் எனக்கு இந்த மரியாதையா...! அவளுக்கு... அவள் எதிர்பார்க்காத சந்தர்ப்பம் இது... மாவீரர்களான அவளது உடன்பிறப்புக்கள்... அவளுக்குத் தேடிக்கொடுத்த பெருமை...! வசந்தி தனது சிறப்புரையை குரல் தழும்ப பேச ஆரம்பித்தாள்.

அன்பான தமிழீழ மக்களே...!

நாம் எமது தாய்மண்மீட்பில் பங்கெடுக்காது இருந்தாலும், எமது உடன்பிறப்புக்கள் தாய்மண்ணில் செய்யும் தியாகங்கள் எமக்கு இங்கு பெருமையைத் தேடித்தருகின்றன. மாவீரர் குடும்பம் என்ற மதிப்பைத் தருகிறது. புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களாகிய நாம், எமது விடுதலைக்காக இங்கு என்ன செய்கிறோம் என்பதையே வெளிநாட்டுச் சமூகங்கள் கூர்மையாயக் கவனிக்கின்றன. நாம் தஞ்சம் புகுந்த நாட்டினர், தமது நாட்டில் வாழும் அகதிகளான நாம் எமது தாய்மண் மீட்புப் போரில் பங்குகொள்ளாது, இங்கு சொகுசான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டும், கேளிக்கைக் கொண்டாட்டங்களில் பங்குகொள்ளும் எம்மைப்பார்க்கும் பொழுது, நாம் தஞ்சம் புகுந்த இந்நாட்டிலேயே நிலைகொண்டுவிடுவோமா என்ற அச்சம் அவர்களுக்குத் தோன்றுகிறது. எமது தாய்மண்மீட்புக்கு நாம் இங்கு என்ன செய்கிறோம் என்பதிலும் விடுதலையை நோக்கிய எமது ஒருமித்த பங்களிப்பும், ஒன்றுதிரண்ட தமிழீழக் கோசத்தையும் காண்பதன் மூலம்தான், அவர்கள் எமது விடுதலை உணர்வைப் புரிந்து கொள்வார்கள். எமது தேசிய விடுதலையின்பின் நாங்கள் எமது சுதந்திர தமிழீழத்திற்குத் திரும்புவோம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வருகிறது. அப்போதுதான் வெளிநாட்டு சமூகங்கள் எமது விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கும். என்றோ ஒருநாள் தமிழீழத் தேசிய இனமான நாங்கள் எம்மை ஆழவேண்டும் என்ற கருத்தை ஏற்பார்கள். தமிழர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்று எம்மை அங்கீகரிப்பார்கள். அன்னியநாட்டில் அகதிகளாக வந்த பெண்களாகிய நாம் எமது பெண் உரிமையை நாமே அடக்கி அடுக்களைக்குள் வைத்திருப்பதை விடுத்து, நாமும் எமது மண்மீட்புப் போரில் பங்கெடுக்க, இன்றே திடசங்கற்பம் பூணுவோம். வாழ்க தமிழீழம்!

அவள் மீண்டும் புத்துயிர் பெற்றவளாக விடுதலையை முன்னெடுத்தாள்... ■

- யாவும் கற்பனை -

# தேசம் விடியமுன்...

அதனால்தான் மாவீரர்கள் புதைக்கப்படுவதாக நாம் புலம்புவதில்லை; அவர்கள் விதைக்கப்படுகின்றார்கள் என்று வீரம் கொள்கின்றோம்.

அன்புக்குரிய தமிழீழ மக்களே!

எமது புனித இலட்சியமான சுதந்திர, சமதர்ம தமிழீழம் மீட்க வித்தாகிப்போன எங்கள் வரலாற்று நாயகர்களை நினைவுகூர, பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தமிழீழத் தேசிய நாளான, மாவீரர் நாளில்...

எல்லோரும் அணியணியாய் வாருங்கள்!

மக்களிலிருந்து பிறந்து, மக்களிற்குள்லிருந்து வளர்ந்து, மக்களுக்காகவே வாழ்ந்து, மக்களுக்காகவே மடிந்த மண்ணின் மைந்தர்களை நினைவுகூருவோம்.

தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட உறுதியான அடிக்கற்களாக, தங்களையே புதைத்தவர்களை நினைவுகூருவோம்.

தமிழீழ மண்ணின் மலர்வுக்காக, தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காக, தமிழீழக் குழந்தைகளின் சுபீட்சத்திற்காக கல்லறைகளாகிப்போனவர்களை நினைவுகூருவோம்.

எமது இனத்தின் இனிவரும் சந்ததிக்கு, எங்கள் சுதந்திர வீரர்களின் வரலாற்றைக் கூறுவோம்; மலரப்போகின்ற தமிழீழத்தைத் தாங்கிநிற்க உறுதியான தூண்களை உருவாக்குவோம்.

என்றென்றும் அணையாமல், எங்கள் ஆன்மாவில் எரிந்துகொண்டிருக்கும் அந்தத் தியாக தீபங்களுக்கு, உளமார்ந்த நினைவுகளுடன் வீரவணக்கம் செலுத்துவோம். ■

> எமது போராட்டத்திற்கு எதிராக பல்வேறு வீரோத சக்திகளும் இணைந்து செயற்பட்டன. எமது வரலாற்று எதிரியுடன் வலிமைமிகுந்த வல்லரசுகளும் எமக்கு எதிராக அணி சேர்ந்து கொண்டன. சதிகளாக, நாசச் செயல்களாக, நம்பிக்கைத் துரோகங்களாக, ஏமாற்றும் படலங்களாக எமதியக்கம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டது. அலை அலையாக எழுந்த எதிரியின் படையெடுப்புகளை ஒரு புறமும், அன்னிய இராணுவ ஆக்கிரமிப்பை மறுபுறமாகவும் நாம் தனித்து நின்று எதிர்கொண்டோம். பல கட்டங்களில் எமது இயக்கம் அழிவின் விழிம்புக்குத் தள்ளப்பட்டது. புயலாக எழுந்த இந்தப் பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள இரும்பை ஒத்த மனஉறுதி தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக, மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்கமுடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது – சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.
>
> - தமிழீழத் தேசியத் தலைவர் -

## கவிதைக் களம்

# புதிதாய் விழுதுகள்

அதோ! - அந்த
ஆலமரத்தடி தான்...

வேலாயுதக் கிழவரின்
வெற்றிலைத் துப்பலை விலத்தி
கழரும் காற்சட்டையை
கையொன்று பற்ற
மறுகை மணலை சீராக்கி
இருக்க இடமமைத்து,
கதை கேட்க - அவர்முன்
காத்திருக்கும் இளசுகள்...

வெள்ளைக் குதிரை ராஜகுமாரனின்
வீரசாகசங்களும்,
பாரதக் கதையின்
பதினெட்டு நாட்போரும்,
வாலி வதமும்,
சீதை சிறைமீட்பும்
தெவிட்டி விட்டது.

இருள் கவியும் முன்பாய்
பஜிரோவின் இரைச்சல் கேட்கும்.
ஆயுதங்களோடு
அக்காமார் வருவினம்
கற்பனைகளையல்ல!
கண்முன்னே களத்தில் - நிஜ
விதைப்பையும் அறுவடையையும்
கதை கதையாய்ச் சொல்லுவர் - அதில்
வார்த்தைகளுனுள் வீழாத - தோழரின்
வீரமும், வேகமும்
தற்கொடையும், தியாகமும்
சேர்ந்தே இருக்கும்.
எங்களோடு கதை கேட்க
விழியிமைக்க மறந்து
வேலாயுதக் கிழவருமிருப்பார்.

வழமை போல்
வாகனம் வந்தது...
வழக்கமாய் கதை சொல்லும்
வளர்ந்த அக்கா இல்லை!
நேற்றைய போரில் - அவள்
நிமிர்ந்து வீழ்ந்ததை சொல்லும்
புதிதாய் ஒருத்தி!

கண்கள் கனக்க
கிழவர்
ஆலமரத்தை
அண்ணாந்து பார்த்தார்...
பூமியை நோக்கி
புதிதாய் விழுதுகள்!

- சோதியா -
(நோர்வே)

## மாவீரர் சிறப்பிதழ்

மாவீரர் நாள் 27 11 94

# அம்மா அழாதே!

அம்மா...!
நான் இருந்தால்,
உனைத் தேடி
நாளை வருவேன்.
நான் இறந்தால்,
உனை நாடி
என் கடைசிக்
கவிதை வரும்.

இதோ!
இன்று உன் கையில்
என் கவிதை
புரிகிறா...?

அம்மா அழாதே!
நான் எங்கும்
போய் விடவில்லை
நான் என்றும்
இறப்பதும் இல்லை.

மானிடம் மரணித்த
மனிதரின் முன்,
மரணத்தை வென்ற
மாவீரர் நாம்.
சாவுக்கு முன்னரே
செத்தவர் முன்,
சாவையே சாகடித்த
சந்ததிகள் நாம்.

நாங்கள்,
கானல் நீரில்
கப்பல் ஓட்டும்
கபோதிகள் அல்லர்.
மாயமான் வேட்டையில்
மயங்கித் திரியும்
மடையர்களும் அல்லர்.

நீங்கள்,
தமிழீழத்தின் ராஜபாட்டையில்
ஆனந்தமாக
தேரோட்டுவதற்காக,
எங்களையே கற்களாக்கிப்
பாதை இடுபவர்கள்.

நீங்கள்,
நாளை சிறப்பாக
பெருவிழா நடாத்துவதற்காக,
எங்களையே வாணமாக்கி
வெடித்துச் சிதறுபவர்கள்.

நீங்கள்,
என்றும் சுதந்திரமாக
சிறகடித்துப் பறப்பதற்காக,
எங்கள் சிறகொடித்து
தீக்குள் இடுபவர்கள்.

உங்கள்,
இருண்ட பாதைக்கு
ஒளி கொடுக்க
எங்கள் துப்பாக்கி
நெருப்பில் தீபமேற்றி
பாதை காட்டுபவர்கள்.

அம்மா அழாதே!
எனக்கும் கனவிருந்தது,
கற்பனை இருந்தது,
அன்னையின் அணைப்பில்
சுகம் காணும்
ஆசை இருந்தது,
தந்தையுடன் அமர்ந்து
பழங்கதை கேட்கும்
ஆவல் இருந்தது.

ஆனால்...!
சுதந்திரமாய் சுற்றிவர
எமக்கென நாடில்லை,
நிரந்தரமாய் வாழ்வதற்கு
எமக்கொரு வீடில்லையென
தலைவன் சொன்னான்
புரிந்தது எனக்கு.

அன்று முதல்...!
தோட்டாக்கள் என்
தோளில் மாலையாகின,
துப்பாக்கி எந்தன்
கரம் பற்றின.
கனவுகள் கலைத்து
கரும்புலி ஆனேன்.
எதிரிகள் மடிய
மனித வெடிகுண்டானேன்.

நிஜக் குண்டு
போதும் என்றால்,
மனித வெடிகுண்டு
ஏன் எமக்கு?
பங்களிப்பு
போதும் என்றால்,
சுய அழிப்பு
ஏன் எமக்கு?

தாயே!
அவர்களிடம் சொல்
எமது மக்களிடம் சொல்,
எமக்குத் தேவை
பலிகளல்ல, பங்களிப்பு.
அதுவரை நாம்,
சிரித்துக் கொண்டே
வெடித்துச் சிதறுவோம்.
காற்றில் கலந்து
கானம் இசைப்போம்.
கல்லறையில் இருந்து
கவிதை பாடுவோம்.

தாயே!
என்னை நினைத்துக்
கலங்காதே!
என்னைத் தேடிக்
கதறாதே!
நானே கவிதையாய்,
உன் கைகளில்
தவழ்வது தெரியவில்லையா,
அதன் ஒவ்வொரு
எழுத்திலும், நான்
வாழ்வது புரியவில்லையா?

கண்களில் வழியும்
கண்ணீரைக் கொஞ்சம்
கைகளால் துடைத்து,
தலைதூக்கி முன்னேபார்.
கனத்த மனத்துடன்
கவிதையை ஒப்படைத்து,
நிமிர்ந்து நிற்கும்
புலி வீரனைப் பார்.
நேற்று,
இவன் தோளில் நான்.
நாளை,
யார் தோளில் இவனோ?
இது தெரிந்தும்,
கலங்காமல் நிற்கும்
காளையைப் பார்.
அவனில் என்னைத்
தெரியவில்லையா,
எம்மில் ஒருவன் விழ,
இவன் போல்
பலர் எழுவார்கள்.

தாயே!
இறுதியாக உனக்கென்று.
நாளை ஒருவேளை,
நான் தேவையென
நீ நினைத்தால்,
மாவீரர் ஏட்டை
கைகளால் தட்டிப்பார்.
அங்கே...
நான் சரித்திரமாய்
சயனித்திருப்பேன்...

- இரா சிவலிங்கம்
(யேர்மனி)

# மாவீரர் நாளாச்சு

பொழி நிலவின் பொன்கடலே!
எறி கணைப் படகுடைத்து
உன் பசியடக்கிய எங்கள்
வெடிப்பொறி தட்டிய வேங்கையர்
வீதி வலம் வருவதற்கோ
வான விளக்கேற்றி வீழ்த்துள்ளாய்...?

ஆவிபிரியும் அணுப் பொழுதினில்
அவர் கூவியழைத்த சுதந்திரத்தை
சுமந்திட்ட நெடுநெல் வாடையே!
மூச்செறியும் உன் அகத்தோடா
எங்கள் வைரித்த வீரர்
பேச்சொலிகள் கரைவந்து சேரும்...?

விழி மூடித் தவசியான
ஒரு கால் நாரைகளே!
அழியாத புகழ் ஏற்று,
வெளியான எங்கள் வேங்கைகளுக்கோ
கடல் நோக்கி தலைகுனிந்த
உங்கள் மௌனித்த அஞ்சலிகள்...?

கடற்காகமும் கானாங் கோழியும்
கெந்தகக்காற்றினில் கண்டன சுதந்திரம்
தொடுவானில் சந்தனம் குழைத்து
பன்னீர் தெளித்தன முகிலினம்!
மணி அடிக்கும் ஒலியோடு
மாவீரர் நாளாச்சு தமிழீழம்.

- கே. எஸ். துரை

# பெயரற்ற கல்லறைக்குள் துயிலும் சகோதரனுக்கு

தேகத்துகள்களை
தேசத்துக்கென
நாட்குறித்து...
தாயகக் கரைகளை
முத்தமிட்டு
புழுதிபடிந்த
உதட்டோரத்தால்
உன் கூட வந்தவர்க்கு
உறுதி விடைகொடுத்து
எம்மண்ணின்
ஆத்மராகமாய்...
எம்மைக் கொன்றவனை
அழித்துக் கலந்தாய்
எமக்குள் நீயாக.

அன்னை மண்ணை
அழிக்க எண்ணும்
அனைவர்க்கும்
அகராதி நீதான்.

உன்நேசிப்பில்
அதிகமாய் ஊறியது
தாயகப்பற்றானதால்
புகழ் எனும்
புத்தகப் பக்கங்கள்
உன்னை இனங்காட்ட
விரும்பாது
இருக்கின்றன
மௌனமாய்.

இன்று நாம்
நிமிர்வதற்கு
நீதான் வேர் - என்பதை
நீதிமன்றங்கள்
கூறாமலேயே
நீ வாழ்கிறாய்
எமதீழம் முழுவதிலும்.

ஆ. சாந்தினி
(டென்மார்க்)

# மணிமகுடம்

பெண்ணுக்காய்! பொண்ணுக்காய்!
பேதலிக்கும்! இளவயதில்...!
மண்ணுக்காய்! உயிர்கொடுத்து!
மாவீரர் ஆகிவிட்ட...!
மைந்தர்களே! உங்களுக்கு...!
மணிமகுடம் இக்கவிதை...!

கையேந்தி! வாழ்வதுவும்...! மாற்றான்
கால்பிடித்து! வாழ்வதுவும்...!
பொய்யுரைத்து! புகழ்பாடி...!
புகழ்பெற்று! வாழ்வதும்...!
எம்! இனத்துக்கு! இழிவென்று...!
எண்ணித்! தலைநிமிர்ந்து! களமாடி...!

மண்மீட்கும்! உரிமைப்! போரினிலே...!
மகிழ்வோடு! உம்முயிர்! கொடுத்து...!
எம்மினத்தின்! விடிவுக்காய்...!
ஏற்றதொரு! வழி! சமைத்த...!
மைந்தர்களே! மாவீரர்களே! உங்களுக்கு
மணிமகுடம்! இக்கவிதை...!

சாகவில்லை! நீங்கள்! என்றும்!
வாழுகின்றீர்! தமிழர்! நெஞ்சில்! என்றும்!
உணர்வுகொண்ட! தமிழர்! நெஞ்சில்
ஓடுகின்ற! குருதி! ஆனீர்...!
பாட்டெழுதும் கவிஞர்களின்...!
பேனாவின்! மையுமானீர்...! - அதனால்
மைந்தர்களே! மாவீரர்களே! உங்களுக்கு
மணிமகுடம்! இக்கவிதை...!

உம்மை! எண்ணா! தமிழர்...!
உண்மையிலே! தமிழர்! இல்லை!
உம்வீரம்! போற்றாதார்... உண்மையில்
உருக்கிடும்! பொருளாவார்...! இவர்
நறுமலரின்! மணம்! நுகரா...!
நானிலத்து! அஃறிணையே... அதனால்
மைந்தர்களே! மாவீரர்களே! உங்களுக்கு
மணிமகுடம்! இக்கவிதை...!

வாழ்வுண்டு! உங்களுக்கு...!
வையகத்தில்! தமிழர்! வாழும்வரை!
புகழுண்டு! உங்களுக்கு...!
பூவுலகில் தமிழுணர்வு! உள்ளவரை...!
என்றும்! தமிழர்! நெஞ்சங்களில்!
எழுந்து! நிற்பீர்! தமிழ் வீரர்களால்!
ஆலயத்தின்! உள்ளிருக்கும்
ஆண்டவனாய்! மாறிநிற்பீர்...! இதனால்
மைந்தர்களே! மாவீரர்களே! உங்களுக்கு
மணிமகுடம்! இக்கவிதை...!

வேலணையூர் பொன்னண்ணா
(டென்மார்க்)

**'It is the Sri Lanka government that has failed to learn the lessons from the emergence of the struggles for self determination in several parts of the globe and the innovative structural changes that have taken place.'** *(Velupillai Pirabakaran, Tamil Eelam leader quoted at the International Federation of Tamils Seminar, Towards a Just Peace, 15 February 1992, University of London)*

**"Asked whether Sri Lanka would continue to be a unitary state Prime Minister Chandrika Kumaratunga emphasised 'unified'."** *(Sri Lanka State Controlled Sunday Observer, 23 October 1994)*

**" There is a need to recognise that the deep divisions between the Sri Lanka government and the Tamil people cannot be resolved by the use of force against Tamil resistance.** The Tamil population in the North and East of the island, who have lived from ancient times within relatively well defined geographical boundaries in the north and east of the island, share an ancient heritage, a vibrant culture, and a living language which traces its origins to more than 2500 years ago. ...Before the advent of the British ..., separate kingdoms existed for the Tamil areas and for the Sinhala areas in the island. The Tamil people and the Sinhala people were brought within the confines of one state for the first time by the British in 1833. After the departure of the British in 1948, an alien Sinhala people speaking a language different to that of the Tamils and claiming a separate and distinct heritage has persistently denied the rights and fundamental freedoms of the Tamil people. .. It is ...our view that the Secretary General should consider invoking his good offices with the aim of contributing to the establishment of peace in the island of Sri Lanka through respect for the existence of the Tamil homeland in the NorthEast of the island of Sri Lanka and recognition for the right of the Tamil people to freely determine their political status." **- Joint Statement of 17 Non Governmental Organisations at the 50th Sessions of UN Commission on Human Rights, February 1994**

## Unified...

| Centralised Federation | Loose Federation | Confederal | Economic Union | Free Association |
|---|---|---|---|---|
| units: Tamil Eelam & Sri Lanka | units: Tamil Eelam & Sri Lanka | units: Tamil Eelam & Sri Lanka | units: Tamil Eelam & Sri Lanka | units: Tamil Eelam & Sri Lanka |
| power: shared but with over riding control in centre | power: shared but with limited control at centre | power: shared equally at centre and exercised directly within confederating units | power: political independence but economic union -like European Union | power: political and economic independence, but free association for common objectives |
| - like India | -like Canada | Sinhala chauvinism, masquerading as 'Sri Lanka nationalism' has rejected confederalism, economic union or any free association as a way of resolving the conflict in the island - in short it has refused to surrender Sinhala domination and central control | | |

**"Next on the continuum, there are various forms of de jure federalism. One of the more limited forms is that which prevails in India. There the individual states do have significant power, but the central government does have the right to suspend the state government and to rule from the centre. In the event of a conflict between the centre and the states, it is the centre that prevails. This is the most devolution of power the Indian government wants to see the Tamils get in Sri Lanka..."***(Prof. Marshall R. Singer of the Graduate School of Public and International Affairs, University of Pittsburgh writing about 'Alternative solutions to the Tamil, Sinhalese ethnic conflict in Sri Lanka' in 1991)*

"Piecemeal 'concessions', and the like, can never address this problem...

What might yet convince the alienated Tamil population that they have a future within an united Sri Lanka is the reconstitution of Sri Lanka as a highly decentralised multi national state... . At the broadest level it would mean the federalisation or perhaps even the confederalisation of Sri Lanka. More specifically, it would necessitate the permanent administrative unification of the northern and eastern provinces under the title 'Tamil Autonomous Region, Democratic Socialist Republic of Sri Lanka' or some roughly similar designation... ." *(Sumantra Bose, in Sinhala owned Sri Lanka Guardian, 15 October 1994)*

"Sri Lankans ought to take comfort from the way the new world is turning. Everywhere, people are accepting novel solutions to old problems...There are 1990s-style alternatives from "one country two systems" to the Confederal Union of Sovereign Soviet Republics. Autonomy now comes in many shades. The old world confederation has been dusted off and applied liberally in Canada, Czechoslovakia and the Central Asian republics...

Centralised unitary states work well only in homogenous societies: ... Sri Lankan leaders privately acknowledge this. Strong central governments with delegated provincial authority are not much better as models: ...

In a confederal system, Sinhalese and Tamil parts would have democratically elected parliaments, but there would be no elected national government. ...In Sri Lanka a committee of the two legislatures could control the rupee, capital markets, interest rates, internal trade, external tariffs. Another could look after foreign affairs, membership of international organisations, telecommunications and overseas transport and aviation. Coordinating bodies would harmonise the two states' social and administrative responsibilities - including taxation, police forces, railways, energy, industry, irrigation and agriculture. ..

..The army thinks, as good soldiers should, of defeat of the enemy... .. To be sure, taking a detached view is very hard ... But thoughtful Sri Lankans should try... Colombo has to make up its mind, not so much about the methods of secessionists, but the will to secede. If it is to be war, they should prepare for a long one...

No one can ever go wrong by asking the people. The value of plebiscites is never appreciated enough - and not just in Sri Lanka. ..Perhaps the Sinhalese are more willing to try the federal or confederal solution than the army and the politicians imagine... In the end it is Sinhalese, not Tamils, who must answer the question: Is Tamil Eelam worth dying for?*(Asiaweek Editorial Comment, 30 September 1991)*

"It is time to acknowledge that the right of ethnic self rule is as inalienable as it is just; if there is to be a halt to the current and all too prevalent phase of jackboot denial of this right a new international code of respect for ethnic identity and self government needs to be formulated.. Why should we fear the break up of large countries into small, ethnic-based nations? Where such a process has been achieved such as in Scandinavia - the result has been affluence, stability and peace. When is the world going to wake up to the fact that it has revolution on it's hands? ..It is a ferment which assuredly is going to dominate 21st century politics as much as any other single factor. It is..an ethnic revolt of people who share a common ancestry, a common culture and a common identity... Where nationalist aspirations have been recognized and have won legitimate form in the shape of independent nationhood the result has been not only peace but pronounced emphasis on successful economic performance. *(John Papworth, Birthpangs of a new World Order, Arab News, June 1991)*

## of principle but also of power..

Ve are not begging from the world. We stand firm on our wn hands. Since we are firmly rooted in our own strength are not war mongers. We are not lovers of violence. We our enemy knocks at our doors for peace, we will extend

*lupillai Pirabakaran on Maha Veerar Thinam, November 1992*

## Savitri comments on the capers of the Sri Lanka Sunday Island

**"The Tamil people know only too well that it is the determined resistance led by Velupillai Pirabakaran and the LTTE that has moved Sri Lanka to the negotiating table. The presence of the LTTE flag at the negotiating table was no childish prank. It was an open assertion of the equality of status of the two parties to the talks. Again, the arrangement of the tables for the negotiations made clear that LTTE did not come as supplicants for favours and concessions at the Sinhala master's table, but as representatives of a free people seeking to negotiate a just peace... After all, as always, form and content go together"**

# SINHALA CHAUVINISM BEARS ITS FANGS

The Sinhala owned Sri Lanka Sunday Island has bared its Sinhala chauvinist fangs at the prospect of meaningful peace talks between the LTTE and the Sri Lanka Government.

**That Sinhala chauvinism which masquerades as 'Sri Lanka nationalism' was angered by the presence of the LTTE flag at the negotiating table at the Peace talks in Jaffna on 13 October 1994 was ofcourse understandable. But that anger appears also to have confused. The Sri Lanka Sunday Island, once owned by the late Upali Wijewardene and now run by Mrs.Bandaranaike's brother, (and for which ex PLOTE ideologue TARAKI is a regular paid columnist) appears unable to decide whether the LTTE flag in the conference room was an 'ominous sign' or whether the whole episode was a 'childish prank' by the LTTE and its leader.**

**On 16 October 1994, the Sunday Island declared editorially:**

"The front page picture of the Sunday Island is one of negotiators of the Sri Lanka Government and those of the LTTE in a conference room with the flag of the LTTE in the centre... **We take this as an ominous sign...** The government negotiators most of whom are neophytes in dealing with the LTTE perhaps did not know that the LTTE flag had been declared by the LTTE as the flag of (Tamil) Eelam in 1991. It is elementary knowledge that at international conferences where nation states participate the national flags of participating nations are displayed and given equal prominence. Since the LTTE at best could only be recognised as a militant group, there was no need to have any flag in the conference room. **But the LTTE apparently has got away with it and could show the world the flag of (Tamil) Eelam has been recognised by the Sri Lanka Government negotiators...** The Government owes an explanation to all Sri Lankans for this stupid act of our negotiators. Some may argue that we are making a big issue over a minor matter of the display of a flag and what matters most is the fundamental objective of bringing peace....(But) **recognition of the flag of a group whose objective is the creation of a separate state is tantamount to recognition of a new state...** What went wrong here is perhaps the composition of the delegation itself. They are indeed all honourable gentlemen having distinguished themselves in their professions. But apart from Mr.Lionel Fernando, the rest have no experience in negotiations of this kind quite apart from negotiating with the wily Tigers. Ms.Kumaratunga by selecting her own confidantes was perhaps sending a direct message to the LTTE. She did not want to traverse the beaten track by sending diplomats or soldiers who will be guided by their professional instincts. **All that can be appreciated but the interests off the nation should never be at risk...**"

One week later the Sunday Island continued to vent its spleen - but this time, not on the Sri Lanka delegation but on Velupillai Pirabakaran and the LTTE. It fumed editorially on 23 October 1994: "...the LTTE staged juvenile pranks such as presenting an Eelam Guard of Honour and placinga so called Eelam flag in between the negotiating tables. While such childish pranks may boost the juvenile ego of Mr.Vel–upillai Pirabakaran and even some of the so called sophisticated party theoreticians, they do embarrass the Government and impede negotiations. The government must be firm and indicate that they would not succumb to such nonsense." **The 'ominous sign' that had put the interests of the nation at risk on 16 October had become a mere 'childish prank' by 23 October! Again if it was all a 'childish prank' why did the Sunday Island pontificate on 16 October: 'Some may argue that we are making a big issue over a minor matter of the display of a flag... (but) recognition of the flag of a group whose objective is the creation of a separate state is tantamount to recognition of a new state...''**

The abusive tone of the Sinhala owned Sri Lanka Sunday Island's diatribe reflects the unbridled chauvinism that runs deep in sections of the Sinhala body politic. It is a Sinhala chauvinism which is running scared at the prospect of a peaceful resolution of the conflict on terms which recognise the inherent equality, of the Tamil people, as a people, with the Sinhala people, as a people.

**But in the same way as President D.B.Wijetunga's denial of the 'ethnic conflict' served only to unite the Tamil people behind the LTTE, the Sunday Island's intemperate attack on Tamil Eelam leader Velupillai Pirabakaran will serve only to increase Tamil support for the Liberation Tigers. The Tamil people know only too well that it is the determined resistance led by Velupillai Pirabakaran and the LTTE that has moved Sri Lanka to the negotiating table. The presence of the LTTE flag at the negotiating table was no childish prank. It was an open assertion of the equality of status of the two parties to the talks. Again, the arrangement of the tables for the negotiations made clear that LTTE did not come as supplicants for favours or concessions at the Sinhala master's table, but as representatives of a free people seeking to negotiate a just and lasting peace. The arrangement of the tables also marked an end to the long running round table farce.**

**At the Paris talks for peace in Viet Nam there were several months of discussions about the shape of the table- round, square or rectangle. Nobody suggested then that either the United States or Viet Nam was being childish. After all, as always, form and content go together. The vituperative attack launched by the Sinhala owned Sri Lanka Sunday Island serves as a timely reminder to the Tamil people, of the political reality that the late Sathasivam Krishnakumar spoke about, some three years ago:'.. Sinhala chauvinism which was nurtured by Sinhala politicians for their electoral advantage has grown into a Frankenstein monster which now has the power to destroy and make politicians. This we understand very well."** ***(The late Sathasivam Krishnakumar in an interview with Melbourne 3CR in 1991)***

"Sinhala thesam should understand that a solution to the Tamil question cannot be found by resort to war and by military suppression of the Tamil people. ... We extend our hand of friendship to the Sinhala people. The Sinhala people are not our opponents. Chauvinist forces have been responsible for the conflicts and the enemity that have arisen between the Tamil people and the Sinhala people. The Sinhala people should identify, isolate and reject these chauvinist forces in their midst. It is then that a permanent peace will prevail in this island."- *Tamil Eelam Leader, Velupillai Pirabakaran BBC interview, September 1994*

# Cutting Edge

## A rose by another name may smell as sweet - but why not call a spade, a spade?

"General Secretary of the People's Alliance and Minister of Agriculture, Lands and Forests, D.M.Jayaratne... said his government was not concerned about various terminolgies being used to describe the form of devolution that should be granted to the Tamil people in the North-East. 'It is our intention to re-demarcate the boundaries of the North-East...' **Mr.Jayaratne said that terminologies such as Federalism etc were of no relevance to Sri Lanka.** 'We do not need to adopt any particular form of devolution adopted by any particular country. **It would be nice if we devolve power the Sri Lanka way....**'" *(Sinhala owned Sri Lanka Sunday Island, 23 October 1994)*

## 'Appropriate technology'

**"The Jaffna genius can be seen in the brilliance of the LTTE....; they have established weapons factories, boatyards and even eratz cement plant and are even said to be developing light aircraft; they have waged war with due planning, taking into account political factors as well as the capabilities of their fighters. The LTTE might be said to represent the acme of 'appropriate warfare', on analogy with 'appropriate technology'."** *(Vinod Moonesinghe, Sinhala Member of Kotte Urban Council writing in the Sri Lanka State Controlled Sunday Observer, 23 October 1994)*

## Sinhala Chauvinism & being 'sensible'

**"Today no sensible government will agree to a ceasefire with the LTTE. No sensible individual, military, political, academic or otherwise should advocate a ceasefire with the LTTE."** *(Defence Correspondent, Sinhala owned Sri Lanka Sunday Times16 October 1994)*

# Towards a Just Peace or just a Peace Offensive?

*continued from front page*

Liberation Tigers. Deputy Defence Minister Anuraddha Ratwatte speaking to the Sinhala Sri Lanka Army at Palaly camp in Jaffna during the week ending 9 September declared:

*" There are many (Tamils) who do not want this war. Such people must be encouraged. That's why we decided to partially lift the embargo. "* *(Report in Sinhala owned Sri Lanka Sunday Island, 11 September 1994)*

> "It appears that to some of President Chandrika Kumaratunga's advisers, the peace process is simply a continuation of war by other means, with the objective remaining the same - the annihilation of the LTTE. Their blinkered vision prevents them from seeing that the Liberation Tigers are not separate from the Tamil people. They refuse to understand that, in fact, the Liberation Tigers simply embody the determined spirit of Tamil resistance to decades of oppressive Sinhala rule."

**Two weeks later, Deputy Defence Minister, Anuraddha Ratwatte, added, with unconscious humour:**

*"We have **much esteem** for those (Quisling) Tamil militants who have joined the **mainstream**. We must encourage the LTTE also to do the same." (Sinhala owned Sri Lanka Sunday Island, 18 September 1994)*

The Defence Correspondent of the Sinhala owned Sri Lanka Sunday Times writing on 13 November 1994, after Chandrika Kumaratunga's victory in the Presidential polls, was somewhat more explicit:

*"What are the options Ms.Kumaratunga has of dealing with the LTTE insurgency? **Essentially, she will be forced to negotiate with the LTTE as that is the only way she could govern Sri Lanka.** She should adopt a multipronged approach. **As proposed by security specialists, she should continue to negotiate but keep the pressure on the LTTE by pressurizing the army to walk into Jaffna. She should restructure the armed forces with more innovative and daring men replacing those who stick to the conventional rules of fighting an unconventional enemy.** She should empower the north-eastern Tamils through a series of constitutional reforms **that will weaken popular Tamil support for the LTTE. The strongest card the leader can use is the India factor - the fact that India will bring Pirabakaran to trial for the assassination of Rajiv Gandhi.**''*

Further, RTF writing his Security Report in the Sri Lanka State Controlled Sunday Observer on 13 November 1993 was at pains to emphasise the 'consultative' role of the armed services and the importance of the new President maintaining close links with them:

*"Analysts feel that the ascent to the Presidency by Mrs.Chandrika Kumaratunga, who consulted the security forces personnel before lifting the embargo on some of the items not being sent to the North, would create a better working atmosphere for the forces **if she was to maintain a close link with them.**"*

**It appears therefore that to some of President Chandrika Kumaratunga's advisers, the peace process is simply a continuation of war by other means, with the objective remaining the same - the annihilation of the LTTE. Their blinkered vision prevents them from seeing that the Liberation Tigers are not separate from the Tamil people. They refuse to understand that, in fact, the Liberation Tigers simply embody the determined spirit of Tamil resistance to decades of oppressive Sinhala rule.** They refuse to understand the political reality that Sunmantra Bose spelt out in the Lanka Guardian of 15 October 1994:

"The Tigers have proved to be an extraordinarily formidable and resilient organisation over the past decade. Today they control some 85% of the north .... where they have established a de facto state with its own police force, judiciary, taxation structure, education department, transportation system and information and broadcasting networks. They have also consolidated significant popular legitimacy by aggressively opposing various social ills and inequities, such as caste oppression and the subordination of women... effective Tamil opposition to the LTTE remains almost non existent... also, because a sorry record of criminality, 'collaboration' and opportunism has debased the anti LTTE groups in the eyes of the Tamil population. **As an Indian Peace Keeping General found in Jaffna 'Eelam has taken firm root as an idea and the LTTE was firmly established in the consciousness of the Tamils.. (as their) sole saviour, fighter, hero and representative."**

Peace, like everything else, comes in different sizes and shapes. There is the peace of the graveyard and the peace of servile surrender. There is the peace of appeasement and peace with honour. There is also lasting peace - lasting because it is just. **But what does justice mean? An empty platitude devoid of meaning? A meaningless cliche meaning anything and everything? A useful weapon in the politician's armoury of rhetoric? High sounding morality which serves to cloak the pursuit of mean political advantage?**

What does justice mean ? Was it just that in 1956 the S.W.R.D. Bandaranaike government passed the Sinhala only law? Was it just that the then Sinhala leader of the Opposition, J.R.Jayawardene should have campaigned against the 1957 Bandaranaike-Chelvanayagam Pact which had made provision for one regional council for the north-east? Was it just that he should have declared that 'the time had come for the whole Sinhala race to fight without giving any quarter to save their birthright'? Was it just that Prime Minister S.W.R.D. Bandaranaike subsequently abrogated an agreement that he had solemnly entered into with the Tamil leader, Mr.S.J.V.– Chelvanayagam? Was it just that in 1958, peaceful Tamil protest at these actions of a Sinhala dominated government was met with physical assault, rape and killings of hundreds of Tamils by Sinhala goondas often led by Sinhala politicians, so much so that Tarzie Vittachi was impelled to write: 'What are we left with.. a nation in ruins and a momentous question: Have the Sinhalese and Tamils reached the parting of ways'? Was it just that in 1961, the government of Mrs.Srimavo

> "Peace, like everything else, comes in different sizes and shapes. There is the peace of the graveyard and the peace of servile surrender. There is the peace of appeasement and peace with honour. There is also lasting peace - lasting because it is just.
>
> But what does justice mean? An empty platitude devoid of meaning? A meaningless cliche meaning anything and everything? A useful weapon in the politician's armoury of rhetoric? High sounding morality which serves to cloak the pursuit of mean political advantage?"

Bandarainaike crushed a peaceful Satyagraha campaign by sending the Sinhala army to Jaffna? Was it just that the then Sinhala leader of the Opposition, Mrs.Srimavo Bandaranaike campaigned against the Dudley Senanayake-Chelvanayagam Agreement of 1965 which provided that land grants in the north-east should be made firstly to the local landless? Was it just that the Dudley Senanayake government reneged on the Dudley Senanayake-Chelvanayagam Agreement of 1965 and scuttled the District Councils Bill which sought to devolve some minimal powers to district authorities?

Was it just that the coalition government led by Mrs.Srimavo Bandaranaike rejected the proposals for federalism submitted by the Ilankai Thamil Arasu Katchi leader, Mr.S.J.V.Chevanayagam to the Constituent Assembly in 1971? Was it just that the new 1972 Republican Constitution should change the name of the country to (Sinhala) Sri Lanka, declare Buddhism as the state religion, and do away with the safeguards for minorities enshrined in section 29 of the Soulbury Constitution? Was it just for the Srimavo Bandaranaike government to introduce 'standardisation' of admissions to Universities in 1972? Was it just that the armed resistance of the Tamil people against decades of oppressive rule was met with the 1979 Prevention of Terrorism Act - an Act which was described by the International Commission of Jurists (British Section) as an 'ugly blot on the statute book' of any civilised country? **Was it just that a genocidal attack was launched on the Tamil people in 1983? Was it just that no impartial inquiry was ever held to identify and punish those who were responsible for the careful planning and implementation of this genocide?**

> "But justice is not an empty platitude. It is the cry for justice that led thousands of young Tamils to give their lives in a struggle for freedom from oppression. .. It is this determination and this cry which has found an answering response in the hearts and minds of the Tamil people living in Tamil Eelam. It is this determination and this cry which has also found an answering response in the hearts and minds of thousands upon thousands of Tamils living as refugees and wandering nomads without a land, in many lands across the globe."

Was it just to impose on the Tamil people the 1987 Indo Sri Lanka Accord, entered into behind their backs? Was it just to impose on the Tamil people in 1989 Provincial Councils with **a Sinhala Governor and without control of planning, without control of the provincial budget, without control of police and public order within the province, without control of disposition of state land**

*continued on page 8*

# Towards a Just Peace or just a Peace Offensive?

**"A meaningful peace process cannot begin without understanding not only the Tamil mind but also the Tamil heart. It will be futile for any of President Chandrika Kumaratunga's advisers to believe that the peace process will be advanced by demonising the LTTE or by trying to isolate the LTTE from the Tamil people."**

*continued from page 7*

**within the province, without control of higher education and whose remaining meagre legislative powers are subject to the over riding will of the Central Parliament?** Was it just for the Moonesinghe Select Committee in 1993 to offer 'federalism' with 'a nod and a wink', within the confines of an unitary state and to devolve on the North-East the same powers as the seven Sinhala dominated provinces in the rest of the island - provinces that had at no time struggled for autonomy leave alone self determination? Was it just for the Moonesinghe Select Committee in 1993 to deny the existence of the Tamil homeland in the North-East ?

If all this was just, then justice would be an empty platitude devoid of meaning. So much so that it would be pointless entertaining hopes of securing a just peace by talking with those who continue to insist that all this was just - because to them, justice means everything and nothing.

**But justice is not an empty platitude. It is the cry for justice that led thousands of young Tamils to give their lives, and continue to give their lives, in a struggle for freedom from oppression.**

It will be idle and wrong to dismiss the cyanide capsule in the hands of the Liberation Tigers as a simple minded willingness of a suicide to die. **As the late Sathasivam Krishnakumar once remarked, a liberation fighter values his life even more than an ordinary civilian - certainly not less. But his willingness to give up that which he values so highly is but a measure of a fierce determination that cries out: 'I will not lose my freedom except with my life.'**

**It is this determination and this cry which has found an answering response in the hearts and minds of the Tamil people living in Tamil Eelam. It is this determination and this cry which has found an answering response in the hearts and minds of thousands upon thousands of Tamils living as refugees and wandering nomads without a land, in many lands across the globe. It is this thyagam, it is this willingness to suffer to bring about change which has made Velupillai Pirabakaran and the Liberation Tigers of Tamil Eelam not simply the leaders of the Tamil people but also the undying symbols of the Tamil struggle for justice.**

**A meaningful peace process cannot begin without understanding not only the Tamil mind but also the Tamil heart. It will be futile for any of President Chandrika Kumaratunga's advisers to believe that the peace process will be advanced by demonising the LTTE or by trying to isolate the LTTE from the Tamil people.**

And here, let it be said that it is not enough to simply tell the Sinhala people that the war in the North-East cannot be continued without conscription. It is not enough to tell them that the war in the North-East is draining economic resources and hampering development. **It is not enough to tell them that the war is unwinnable. It is necessary to tell them that the war against the Tamil people is not only unwinnable but also that it is unjust - and that it is unwinnable, BECAUSE it is unjust. That it is unwinnable not because the Sinhala security forces lack the requisite resources or for that matter the necessary skills but because the spirit of a people resisting alien rule of their homeland cannot be suppressed.**

**In the words of Tamil Eelam Leader, Velupillai Pirabakaran, 'Sinhala thesam should understand that a solution to the Tamil question cannot be found by resort to war and by military suppression of the Tamil people.'** *(BBC interview, September 1994)* **That, then is the bottom line.** So long as the Sinhala people believe that a military solution remains an option should talks fail, so long as they believe that they can conquer the Tamil homeland and rule a people against their will (perhaps through quislings and collaborators), so long will they fail to see the need to talk to the Tamil people on **equal terms.** So long also will they fail to see the need to recognise the existence of the Tamil people, as a people, with a homeland and with the right to freely choose their political status. So long also will they fail to see the need to structure a polity where two peoples may associate with each other in freedom. So long also will they fail to see the force of reason in that which 17 non governmental organisations told the UN Commission on Human Rights at its 50th Sessions in February this year:

*" **There is a need to recognise that the deep divisions between the Sri Lanka government and the Tamil people cannot be resolved by the use of force against Tamil resistance.** The Tamil population in the North and East of the island, who have lived from ancient times within relatively well defined geographical boundaries in the north and east of the island, share an ancient heritage, a vibrant culture, and a living language which traces its origins to more than 2500 years ago. ...Before the advent of the British ..., separate kingdoms existed for the Tamil areas and for the Sinhala areas in the island. The Tamil people and the Sinhala people were brought within the confines of one state for the first time by the British in 1833. After the departure of the British in 1948, an alien Sinhala people speaking a language different to that of the Tamils and claiming a separate and distinct heritage has persistently denied the rights and fundamental freedoms of the Tamil people. .. It is ...our view that **the Secretary General should consider invoking his good offices with the aim of contributing to the establishment of peace in the island of Sri Lanka through respect for the existence of the Tamil homeland in the NorthEast of the island of Sri Lanka and recognition for the right of the Tamil people to freely determine their political status."***

**It is said that those who do not learn from history are condemned to relive it. The peace process in the island of Sri Lanka will be furthered only by learning the lessons of the past. Justice is not an empty platitude devoid of meaning.**

**"It is not enough to tell the Sinhala people that the war in the North-East cannot be continued without conscription... It is not enough to tell them it is unwinnable. It is necessary to tell them that the war against the Tamil people is not only unwinnable but also that it is unjust - and that it is unwinnable, BECAUSE it is unjust. That it is unwinnable not because the Sinhala security forces lack the requisite resources or for that matter the necesary skills but because the spirit of a people resisting alien rule of their homeland cannot be suppressed."**

### TEXT OF LEAFLET

Dear Brothers and Sisters in the North,

**Sunshine has begun to move into your lives to light up the gloom of misery that you have suffered all these years.** As a start, a few rays of sunshine have already moved into the north in the form of twenty-eight commodities which have been liberated from the list of banned items to the north.

Referring to the lifting of the ban, Prime Minister told a Press Conference, 'we are doing this to rebuild the trust and confidence between the government and the people in the north'. Among the 28 items that have been taken out of the banned list, and which would be so welcomed by you dear sisters who are housewives, are local and foreign soaps, tinned foods, coconut and vegetable oils, chocolates of all types and varieties, medicines, candles, school bags. plastic cans, kerosene, polythene and polythene bags, radios, and spare parts, bicycles and tyres and tubes including boys' and girls' bicycles.

For your society and businesses in the north, there would now be available different kind of timber. Solar panels, audio cassettes, all types of paints rice-mill spares, generators, engine oil, water pumps and spares, cement, motor vehicles, tyres and tubes, printing paper, typing and duplicating paper, roneo and photo-copying machines, surgical equipment, all available for your people in the north.

**You dear sisters and brothers will no doubt be so happy at having those commodities sent for you. It is however only a beginning. The ultimate aim is to bring total peace and development to your areas. The government has stated that, 'this is a preliminary to a series of steps the government intends to take with the objective of bringing about a solution to the north-east problem'.**

Dear brothers and sisters, you will see that the government has now shown a sincere intention to work towards a lasting peace for you. But of course they cannot do it alone. What is important is the co-operation of the LTTE without which the government's efforts will remain futile. The LTTE has already responded by liberating ten policemen that they held as prisoners. They have also announced their willingness to begin peace negotiations.

However dear brothers and sisters, we must not forget that if peace negotiations fail to take place or take place and then fails, it is you who would suffer most. **So what you have to do is to prevail upon the LTTE to keep negotiating with the government, until peace is achieved soon.**

Your Hopeful Brothers and Sisters in the South

### THE POT & THE KETTLE?

**"During the 1970-77 SLFP era the then Prime Minister Mrs.Srimavo Bandaranaike arrested and kept in custody about 40 hardcore militants from Jaffna and everything was under control.** But it was the (UNP) regime that came into power in 1977 which released these hardcore militants who in turn increased their cadre and went on rampage." *(SLFP Vice President Alavi Moulana reported the Sri Lanka state controlled Sunday Observer, 30 October 1994)*

# இந்திய - சீன உறவில் புதிய நெருக்கடி

## வங்காள விரிகுடாவில் சீனாவின் ஊடுருவல்

**இந்தியாவின் அந்தமான் தீவுகளைச் சுற்றியுள்ள கடற்பகுதியில், சீனா கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுவருவதாகவும் இதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டு இந்தியா கவலை தெரிவித்துள்ளது. சென்ற ஆவணி மாதத்தில் அந்தமான் தீவுகளுக்கு அப்பால், இந்தியக் கடலோரக் காவற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று சீன மீன்பிடிப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக இந்திய புலனாய்வுத்துறை வெளியிட்டிருக்கும் அறிக்கையில், சீனாவின் கண்காணிப்பு நடவடிக்கை தொடர்பாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை புதுடில்லியிலுள்ள பி. பி. சி. முகவரின் பார்வைக்கும் கிடைத்துள்ளது. 'சீனா - இந்தியா உறவுகளில் அந்தமான் தீவுப் புதிர்' என்ற தலைப்பில் பி. பி. சியின் புதுடில்லி முகவர் எழுதிய ஆய்வுரைக் கண்ணோட்டமே இது.**

சில ஆண்டுகளாக நிலவிய பகைமை உணர்வுகளுக்குப் பின், இப்போது இந்திய - சீன உறவு ஓரளவுக்கு முன்னேற்றம் அடைந்து வருகின்றது. இரு மாதங்களுக்கு முன்பு சீனப் பாதுகாப்பு அமைச்சர் தமது குழுவுடன் புதுடில்லிக்கு வருகை தந்திருந்தார். இதைக் தொடர்ந்து இந்திய இராணுவத் தளபதி ஜோசி பீகிங்கிற்கு விஜயம் செய்தார். எனினும் இரு நாடுகளுக்கும் இடையே இறுக்கம் ஏற்படும் வகையில் செயற்படும் உளவாளிகள் இருக்கத்தான் செய்கின்றனர்.

இஸ்லாமாபாத்திற்கு சீனா காட்டும் ஆதரவு, அந்தமான் நிக்கோபார்தீவுக் கடற்பகுதிகளில் சீனா காட்டும் கவனம் என்பன இந்திய அரசுக்கு கவலை தரும் விடயங்களாகவே இருக்கின்றன.

அந்தமான் - நிக்கோபார் தீவுகள் மொத்தத்தில் சிறு நிலப்பரப்பு




தான் -வங்கக்கடலில் சென்னைக்கு கிழக்கே 1200 கிலோ மீற்றர் தொலைவில், பர்மாவுக்கும், தாய்லாந்துக்கும் மிக அருகாமையில் இருக்கின்றது. பொருளாதார முக்கியத்துவம் இத்தீவுகளுக்கு அதிகம் இல்லாதபோதும், இராணுவ முக்கியத்துவம் அதிகமாக இருக்கிறது. இந்தியாவிற்கு வங்கக்கடலை கட்டுப்படுத்துவதில் பெரிதும் உதவுகின்றது. இந்தச் சூழ்நிலையில், இந்தியாவின் கடற்படைத் தளமொன்றும் அங்கு உண்டு.

இந்தியாவின் கடற்பரப்புக்குள் வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்காக அவ்வப்போது ஊடுருவி வருவது உண்டு. ஆனால் சென்ற ஆவணி 18 ஆம் திகதி நடந்த நிகழ்ச்சிபோல இதுவரை நடந்தது இல்லை. முதல் முறையாக சீனாவிற்கு சொந்தமான மூன்று கலங்கள் சுற்றி வளைக்கப்பட்டு -வழி மறிக்கப்பட்டு இந்திய கடலோர காவற்படையால் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் முக்கிய துறைமுகமான போ்ட் பிளேயருக்கு கொண்டு வரப்பட்டது. இந்தப் படகுகளும், இவற்றில் இருந்த 57 பணியாளர்களும் இன்னமும் இந்திய ஆட்சியாளர்களால் விடுவிக்கப்படவில்லை.

இது குறித்து இந்திய உளவுப் பிரிவு தயாரித்துள்ள ஒரு அறிக்கையானது, அந்தமான் தீவுகளைச் சுற்றி சீனாவின் அக்கறையையும் அது குறித்த இந்தியாவின் கவலையையும் வெளிப்படுத்துவதாகவே உள்ளது. சீனாவின் நோக்கங்கள் குறித்து, இந்தியா எத்தகைய சந்தேகங்களைக் கொண்டிருக்கிறது என்பதையும் அது புலப்படுத்துகின்றது.

இந்தக் கலங்களில் இருந்து கைது செய்யப்பட்ட 57 பேரிடமும் இந்திய பொலிஸ், இராணுவம், கடற்படை மற்றும் கரைக் காவற்படை ஆகியோரடங்கிய குழுவொன்று விசாரணை செய்து வருகிறது. இக் குழு கொடுத்த அறிக்கையில் சீனர்கள் கொடுத்த விளக்கம், நம்பத்தகுந்ததாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீன அரசுக்குச் சொந்தமான நிறுவனமொன்றின் மீன் பிடிப்படகுகளே இவை எனவும், சீனர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் இப் படகுகளில் நவீனமான எலக்ட்ரோனிக் தொடர்பு சாதனங்கள், சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் உளவுப் பிரிவு பயன்படுத்தும் ஆவணங்கள் படங்கள் மற்றும் அந்தமான் தீவுகளைச் சூழவுள்ள கடல் பற்றிய விபரங்கள், கடற்கண்ணிகள் மற்றும் ஆயுதங்களும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் இக் கப்பல்களின் கப்டன்களிடம் இருந்த வழிகாட்டும் குறிப்பு ஒன்றில் பென்சிலால், 'போர்ட் ஒப் பிளேயர்' துறைமுகம் வழிகாட்டப் பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

அந்தமான் தீவுத் தொடரின் வடமுனைக்கு அப்பால் இருக்கும் ஒரு தீவு போகோத் தீவு. இது பர்மாவிற்கு சொந்தமானது. பர்மாவின் ஆட்சிக்கு உட்பட்டது. ஆனால் இந்தத் தீவை இராணுவ தளமாகப் பயன்படுத்துவதற்காக, சீனாவிற்கு குத்தகைக்கு பர்மா கொடுத்துள்ளது என இந்தியர்கள் நம்புகின்றனர். இந்தியாவை வேவு பார்ப்பதற்காக இந்தத் தீவுகளை சீனா பயன்படுத்தி வருகிறது என்று நம்புவதற்கு, போதுமான சான்றுகள் இருப்பதாக இந்தியா கூறுகிறது. சீனாவிற்கு பர்மிய கடற்படையில் இருக்கும் அக்கறை, யோகோத் தீவுகளில் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டுள்ளமை, கடலாதிக்கத்தைப் பெற சீனா செய்து வரும் முயற்சிகள் என்பன ஒன்றோடொன்று தொடர்பில்லாத தற்செயல் விடயங்கள் என்று ஒதுக்கி விடமுடியாது என்பது இந்தியாவின் நிலை. இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது, சீனா வங்கக்கடலில் வேவுபார்ப்பது குறித்து சந்தேகம் எழுப்ப வேண்டும் என்று, இந்திய புலனாய்வு பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில், இதுவிடயத்தில் என்ன செய்வது என்பதே புரியாத நிலை. சீனாவுடன் மீண்டும் கசப்புணர்வு ஏற்படுவதை விரும்பாத வெளியுறவு அமைச்சு சீனப் பணியாளர்களையும், படகுகளையும் மீண்டும் ஒப்படைத்துவிட விரும்புகிறது. ஆனால் நவீன வசதிகளுடன் கூடிய இப் படகுகள் மூலம் சீனா, இந்திய கடற்பரப்பில் உளவு பார்ப்பதில் ஈடுபட்டு இருக்கிறது எனப் பாதுகாப்பு அமைச்சகம் கருதுகிறது.

இதனால் இந்திய கரைக்காவல் படை, அவர்களை விடுதலை செய்ய மறுக்கிறது. இத்தகைய உடுருவல்களை எவ்வாறு தொடர்ந்து அனுமதிப்பது என கேள்வி எழுப்புகிறது. ■

# சீனாவில் பத்து சதவீதத்திற்கும் குறைவான சிறுபான்மையினருக்கு சுயாட்சி அமைப்பு

**ஆகச்சிறிய இனமான செசான்(சுமார் 2000 பேர்) தேசிய மக்கள் காங்கிரசில் (சீன உயர் அதிகாரபீடம்) ஒரு பிரதிநிதியைக்கொண்டுள்ளது. இன்னமும் எழுத்துவடிவம் பெறாத மொழிகளைப் பேசுபவர்களுக்கும் சுயாட்சி அமைப்பு உள்ளது.**

சீன மக்கள் குடியரசு உருவாக்கப்பட்டு கடந்த மாதம் முதலாம் திகதியுடன் 45 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. சிறிய நாடான இலங்கையில் இனப்பிரச்சினை எரியும் பிரச்சினையாக உள்ளது. உலகில் சனத்தொகை கூடிய நாடான சீனாவின் 116 கோடி மக்களில், 100 கோடிக்கு மேற்பட்டவர்கள் 'கான்' இனத்தவர்களாகவும், 10 கோடிக்கும் குறைவான தொகையினர் 55 சிறுபான்மை இனத்தவர்களாகவும் உள்ளனர்.

இன்று அரசியலமைப்பு சட்டங்களின் விற்பன்னர்கள் எனப் புகழப்படும் அறிஞர்கள், பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகள் பற்றி விமர்சித்து, தமிழருக்கு எவ்வகை உரிமை வழங்கலாம் என்றெல்லாம் கட்டுரை கட்டுரையாக எழுதுகின்றனர். இவர்கள் சீனாவின் அரசியலமைப்புச் சட்டத்தை -சீனாவின் பிரதேச சுயாட்சி அமைப்பிற்கான சட்டத்தை விமர்சனம் செய்யத் தயங்குகின்றனர். சீனா எவ்வாறு, தேசிய சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உருவாக்கிய சட்டரீதியான ஏற்பாடுகள், நாம் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்களில் ஒன்று.

சீனாவின் சிறுபான்மை இனத்தவர்கள் முழுச் சனத்தொகையில் 8. 04 வீதமானவர்கள் மட்டுமே. இந்த 8. 04 வீதத்தினருள் 55 தேசிய இனங்கள் உள்ளன. சீனாவின் யதார்த்தத்திற்கு ஏற்றவகையில் -சிறுபான்மை இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையை உத்தரவாதப்படுத்தும் வகையில், சுயாட்சி அமைப்புகளை உருவாக்கியதன் மூலம் இனங்களிடையே ஐக்கியத்திற்கு வழி ஏற்படுத்தப்பட்டது. தத்தமது சுயாட்சி அமைப்பிற்குள் தத்தம் மொழி, கலை, பண்பாடு என்பவற்றைப் பேணி வளர்க்க உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசினால் ஏற்படுத்தப்படும் சட்டங்கள், குறிப்பிட்ட ஏதாவது ஒரு இனத்தவருக்குப் பாதகமானதெனக் கருதும் பட்சத்தில், அதைத் தமது பிரதேசத்தினுள் அமுல் நடத்தாது விடும் அதிகாரமும் சுயாட்சி அமைப்புக்களுக்கு உண்டு.

சீனாவின் சிறுபான்மை இனத்தவர்கள் சனத்தொகையில் 8. 04 வீதமேயானாலும், சுயாட்சி அமைப்புகள் வழங்கப்பட்ட பிரதேசங்களின் நிலப்பரப்பு 62 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவின் சிறுபான்மை இனங்களைக் கொச்சைப்படுத்தும் இடப்பெயர்கள், குறியீடுகள் சீனா முழுவதும் அகற்றப்பட 19-51 இல் மத்திய அரசு சட்டம் கொண்டு வந்தது. ஆகச் சிறிய இனமான செசான் (சுமார் 2000 பேர்) தேசிய மக்கள் காங்கிரசில் (சீன உயர் அதிகார பீடம்) ஒரு பிரதிநிதியைக் கொண்டுள்ளது. இன்னமும் எழுத்து வடிவம் பெறாத மொழிகளைப் பேசுபவர்களுக்கும் சுயாட்சி அமைப்பு உள்ளது.

சீனாவில் ஐந்து 'சுயாட்சிப் பிரதேசங்கள்' உள்ளன. அந்த சுயாட்சிப் பிரதேசங்களுக்கு வெளியேயும் குறிப்பிட்ட ஐந்து சிறுபான்மை இனங்களும் பரந்து வாழ்கின்றன. அங்கும் கூட அவர்களுக்கு சுயாட்சி அமைப்புக்கள் உள்ளன. இந்த ஐந்து சுயாட்சிப் பிரதேசங்களுக்குள்ளும், ஏனைய இனத்தவர்கள் செறிவாக வாழும் பகுதிகளில், 'உள்சுயாட்சி அமைப்புக்கள்' உள்ளன. குறிப்பிட்ட 5 சிறுபான்மை இனங்களை விட, மிகுதி 50 சிறுபான்மை இனங்களுக்கும் வெவ்வேறு மட்டத்திலான சுயாட்சி அமைப்புக்கள் உள்ளன. ஐந்து சுயாட்சிப் பிரதேசங்களுக்குள் செறிவாக சில பகுதிகளில் வாழும் பெரும்பான்மை இனத்தவரான சான் இனத்தவருக்கு உள்சுயாட்சி அமைப்புகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் இனரீதியாக எவரும் பாதிக்காத வகையிலேயே சீனாவின் சுயாட்சி அமைப்பு முறையுள்ளது.

1984 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வந்த, பிரதேச தேசிய சுயாட்சிச் சட்டத்தின் முக்கிய அம்சங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.


"சுயாட்சி அமைப்புகள் அவற்றின் எல்லைக்குள் உள்ள புற்றரைகள், காடுகள், மற்றும் தேசிய வளங்கள் என்பவற்றை தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும். தமது பகுதிக்குள் இருக்கும் கைத்தொழில் விவசாய நடவடிக்கைகளை நிர்வகிக்கலாம். மத்திய அரசின் சட்ட வரையறைக்குள் வெளிநாடுகளுடன் பொருண்மிய நடவடிக்கையில் ஈடுபடலாம். துறைமுகங்களை அந்நிய தொடர்புகளுக்குத் திறந்து விடலாம். வெளிநாடுகளுடன் எல்லைகளைக் கொண்டுள்ள சுயாட்சி அமைப்புகள், மத்திய அரசின் அனுமதியுடன் எல்லை வர்த்தகத்தில் ஈடுபடலாம்.

வெளிநாடுகளுடனான வர்த்தக வாணிபத் தொடர்பைக் கொள்ளும் போது பெறப்படும் வெளிநாட்டுச் செலாவணிகளில் சம்பந்தப்பட்ட சுயாட்சி அமைப்புகளுக்கு விசேட சலுகையுண்டு. ஆரம்ப, நடுத்தர பாடசாலைகளை அமைக்கலாம். சம்பந்தப்பட்ட மொழி போதனா மொழியாக இருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட இனத்தின் அபிலாசைகளை நிறைவேற்ற பத்திரிகைகள், வெளியீட்டகங்கள், வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் என்பவற்றை நிறுவலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ■

வெளிவந்துவிட்டது
மார்ச், ஏப்ரல் ஒளிவீச்சு


# பின்வரும் ஒலிப்பதிவு நாடாக்கள் வெளிவந்துள்ளன










**அத்துடன் தமிழீழத்தில் முதன்முதலாக "கணணி" தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒலிப்பதிவு செய்யப்பட்ட "கடலிலே காவியம் படைப்போம்" எனும் ஒலியிசைத்தட்டும் வெளிவந்துள்ளது.**

**அனைத்து விடுதலைப் புலிகளின் சர்வதேச கிளைகளிலும் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.**

# சந்திரிகாவின்...

மேலும் தென்தமிழீழத்தில் இன அழிப்புச் செய்து வரும் ஊர்காவல்படையினரின் நாளாந்தக் கொடுப்பனவாகிய 55 ரூபாவினை 85 ரூபாவாக புதிய அரசாங்கம் உயர்த்தியுள்ளது.

இவற்றுடன் நடப்பு ஆண்டில் படையினரின் சம்பளங்கள், நட்ட ஈடுகள் என்பவற்றுக்கென 330 கோடி 21 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா கொடுபடவுள்ளது.

இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய மொத்தத் தொகையாகிய 538 கோடி 49 இலட்சம் ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணை, மிகத்தந்திரமான முறையில் டி.பி. விஜேதுங்காவின் பேரில் இந்தமாதம் முதல்வாரத்தில் சிறீலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை, புதிய அரசின் சமாதான நோக்கில் ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விதம் தனது இராணுவ நிலையினைப் பலப்படுத்திக் கொள்ளும் சிறீலங்கா அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் நடைபெறும் சமாதான பேச்சு வார்த்தைகளை இழுத்தடிக்கக் கூடிய முறையில், சிறீலங்காவின் கடற்பிரதேசத்தில் நவீன ஆயுதங்களுடனான கப்பலொன்று நடமாடியதாகவும், அதனை சிறீலங்கா கடற்படையினர் கலைத்துத் திரிவதாகவும், இக் கப்பலில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் இறக்குமதியாகப் போகிறது எனவும் போலியான கதைகளைத் திரித்து உலாவவிட்டுள்ளது. இதன் மூலம் விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கென அளித்து வரும் சமிக்ஞைகளை முறியடித்து, தனது யுத்த நடவடிக்கைகளை வலுவூட்ட சிறீலங்கா முயன்று வருகிறதென அவதானிகள் கருதுகின்றனர்.

## சந்திரிகா பொறுப்பு

இது ஒருபுறமிருக்க சிறீலங்காவின் ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகா, அவர் பதவியேற்றதன் பின்னர் குடாநாட்டிலும், தென்தமிழீழத்திலும் சிறீலங்காவின் கடற்படையினரும், இராணுவத்தினரும் பொதுமக்கள், கடற்தொழிலாளர் மீது மேற்கொண்ட கொலைவெறித்தாக்குதல்களுக்கும் அதன் மூலம் ஏற்பட்ட உயிரிழப்புகள் உடமை இழப்புகளுக்கும் சட்டரீதியான பொறுப்பாளியாகின்றார். வெளிநாட்டு சர்வதேச வானொலிகள், விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமான ஒரு வார போர் நிறுத்தமொன்றை மேற்கொண்டுள்ளதாக ஊகங்களை வெளியிட்டு, தாக்குதல்களை சிறீலங்கா மேற்கொள்ளாவிட்டால் போர் நிறுத்தம் மேலும் தொடரக்கூடும் என நம்பிக்கை தெரிவித்து செய்தி வெளியிட்டு சில மணிநேரங்களின் பின்னர் சிறீலங்கா படைகளால் இக் கொலை வெறித்தனமான இன அழிப்புத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சினதும், சிறீலங்கா நாட்டினதும் தலைவியாக உள்ள சந்திரிகா இவற்றை கண்டிக்காது மௌனம் சாதித்துள்ளார். இந் நடவடிக்கை, சிறீலங்காவின் புதிய அரசு உண்மையான சமாதானத்தின் மேல் கொண்டுள்ள அக்கறையை பலத்த சந்தேகத்திற்கு உள்ளாக்கி இருக்கின்றது. ■

# பனைவளப் பொருட்கள் ஏற்றுமதியாகும் காலம்வரும்

### - பொருண்மிய மேம்பாட்டுப் பணிப்பாளர்

"எமது மூதாதையரால் பல பயன்கள் அறியப்பட்டதும், இன்னும் பல பயன்பாட்டை எமது தொழில்நுட்பம் மூலம் செயற்படுத்தக்கூடியதுமான பலவித பயன்பாடுகளைக்கொண்ட பனையை, மென்மேலும் பெருக்கவேண்டியது அவசியமாகும்"

இவ்வாறு, கடந்த மாதம் 7 ஆம் நாள் நடைபெற்ற கற்பகச்சோலைத் திட்டத்திலான ஐம்பது இலட்சம் பனைவிதை நடுகைத் திட்டத்தின் ஓர் அங்கமான, ஐம்பத்தையாயிரம் பனைவிதை நடுகையைத் தொடக்கிவைத்து உரையாற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால், 2000 ஆம் ஆண்டளவில் தற்போதுள்ள பனைவளத்தை இரட்டிப்பாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட கற்பகச்சோலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக நடைமுறைப்படுத்தப் படவுள்ள, 5 ஆண்டுகளில், 50 இலட்சம் பனைவிதைகளை நாட்டும் செயற்பாடு தொடர்பாக வலிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளால் தொடங்கப்பட்ட, 55 ஆயிரம் பனைநடுகைத்திட்ட தொடக்க விழா அராலி வீதி, கல்லுண்டாய் நரசிம்ம வைரவ கோவிலடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது.

வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு. சி. கந்தசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாவில் தொடர்ந்து உரையாற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர், எதிர்காலத்தில் பல கோடிக்கணக்கான பணத்தினைப் பெறக்கூடியதான பனைவள ஏற்றுமதிப் பொருட்களை உலக நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்றும், அதற்கான மனித சக்திக்கு விஞ்ஞான அறிவு புகட்டப்படவேண்டும் என்றும் கூறினார்.

வலிகாமம் பகுதியிலுள்ள பனை, தென்னைவள அபிவிருத்திச்சபைக் கொத்தணிகளின் இயக்குநர்கள், பொதுமுகாமையாளர்கள், உத்தியோகஸ்தர்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இவ்விழாவில், இப்பாரிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்த வலிகாமம் கோட்டத்தின் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்ககங்களின் கொத்தணிக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. ■

# தனிச் சிங்களத்தில் அனுமதி அட்டை

பயிலுநர் தாதியரை ஆட்சேர்ப்பதற்காக நடை பெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு, கொழும்பில் நடைபெற்ற நேர்முகத் தேர்வுக்கான அனுமதி அட்டைகள், தனிச்சிங்களத்திலேயே வந்துள்ளதாக அறியப்படுகின்றது.

இதனால், மேற்படி நேர்முகப் பரீட்சைக்குத் தமிழ் மொழிமூலம் விண்ணப்பித்தவர்கள் பலர், பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். குறிப்பாக வடக்கு -கிழக்கைச் சேர்ந்த தமிழ் விண்ணப்பதாரிகள், இதனை விளங்கிக் கொள்வதில் பெரும் சிரமத்தை அடைந்துள்ளதாக அறியப்படுகின்றது. ■

# இலங்கைத்...

விடுதலைபெறல் வேண்டும்; எமக்கென்று ஒரு நாட்டை உருவாக்கவேண்டும்.

விடுதலைப் போராட்டங்களை எடுத்துக்கொண்டால், பல நாடுகளிலே இன்று பல விடுதலைப் போராட்டங்கள் வெற்றிபெற்று, பல தேசிய இனங்கள் சுதந்திரமாகத் தமக்கென்று ஒரு நாட்டை நிறுவி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த வரலாற்றைப் பார்ப்போமானால், இசுரேலிலே அறுபது இலட்சம் மக்கள் அழிக்கப்பட்டபின், மிகுதி நாற்பது இலட்சம் மக்களும் காட்டிய எழுச்சியும் வீரமும் உறுதியும்தான் இன்று ஒரு நாட்டை உருவாக்கி, ஒரு தேசிய இனமாக வாழமுடிந்தது.

இலங்கைத்தீவிலே எமது இனம், அன்னிய ஆட்சிக்கு முற்பட்ட காலத்திலே வீரத்தோடும் உரிமையோடும் தமது ஆட்சியை நிறுவி, வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அன்னிய ஆட்சியாளரின் ஆக்கிரமிப்புக்குப் பிறகு எமது இனம் அடிமைகளாக ஒரு இனத்திற்கு கீழே உரிமைகளை இழந்தும் அழிந்தும் வாழ்ந்துகொண்டிருந்தது; ஆனால் இன்று எழுச்சிபெற்று நிற்கின்றோம்.

இன்று ஒரு அமைதி, ஓர் சமாதானம் ஏற்படப்போகின்றது என்ற ஒரு வெளிப்பாட்டைத் தோற்றுவிக்கின்ற காலமாகR உள்ளது. இத்தகைய காலகட்டத்திலேயே மக்களாகிய நாம் அனைவரும், எச்சரிக்கையோடும் விழிப்புணர்வோடும் இருக்கவேண்டும்.

இன்று நாம் அடைந்திருக்கும் வளர்ச்சியும் எழுச்சியும் பல அழிவுகளுக்கு மத்தியிலே எமது போராளிகளுடைய, எமது மக்களுடைய உறுதியான அர்ப்பணிப்புக்களாலேயே உருவாக்கப்பட்டதாகும்.

இந்த வளர்ச்சிக் காலகட்டத்திலே, நாம் எமது உரிமைகளைப் பெற்றெடுப்பதற்கு மிகவும் உறுதியாகவும் விழிப்போடும் இருக்கவேண்டும். எனவே எமது மக்களாகிய நீங்கள் இது வரை காலமும் எவ்வளவோ கஸ்டங்கள், துன்பங்கள் மத்தியிலும் காட்டிய உறுதியையும், எழுச்சியையும், வீரத்தையும் தொடர்ந்தும் காட்டி, எமது போராட்டத்தை முனைப்போடு எடுத்துச்சென்று உரிமைகளோடும், சுதந்திரத்தோடும் வாழக் கூடியநிலையை உருவாக்கவேண்டும். அன்னிய ஆட்சிக்காலத்தின்பின், நாம் பலகாலமாக எமது இனம் பல போராட்ட வடிவங்களிலும், அகிம்சைரீதியாகவும் எமது உரிமைகளைப் பெற்றெடுக்கப் போராடியது. அகிம்சைப் போராட்டம் மிருகத்தனமாக நசுக்கப்பட்ட நிலையில் தான், எதிரிக்கு நாம் பெரியதொரு போராட்டத்தை, அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய போராட்டத்தை நடத்தவேண்டும் என்ற சூழ்நிலையில்தான் எமது போராட்டம் ஆயுதப் பேராட்டமாக எழுச்சிபெற்றது. எமது தேசியத் தலைவர் இப் போராட்டத்தை தொடக்கிவைத்தார். இந்த ஆயுதப் போராட்டத்தின் உச்சவளர்ச்சிதான், எமது இனத்தை இன்று இங்கே காப்பாற்றி வைத்திருக்கிறது.

இன்று உலகமே இங்கு தமிழன் இருக்கின்றான்; அவனுக்கு என்றோர் நாடு இருக்கின்றது என்பதை சிந்திக்கவைக்கும் அளவிற்கு எமது போராட்டம் எழுச்சிபெற்று நிற்கின்றது" என்றார். ■

# சிறீலங்கா - இந்திய கூட்டுச்சதி நாடகம் அரங்கேறிய விதம்

இந்திய - சிறீலங்கா அரசுகளின் கூட்டுச்சதிக்குப் பலியாகிய லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 12 மாவீரர்களையும் கௌரவித்து வணக்கம் செலுத்தும் நிகழ்வு, தீருவில் மைதானத்தில் 05.10.1994 இல் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஈகச்சுடரை ஏற்றிவைக்க, வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் அருணா அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். தமிழீழக் கடற்புலிகளின் கொடியை, கடற்புலிகள் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் வைகரன் அவர்கள் ஏற்றிவைத்தார். நினைவுத்தூபிக்கு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்கள் மலர்வளையம் வைத்தார். தமிழீழ அரசியற்றுறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் அவர்கள் மையத்தூபிக்கு மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவுத்தூபிக்கு பெற்றோர், உறவினர்கள் மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர். இந்நிகழ்வின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை, கடற்புலிகளின் அரசியல் பயிற்சிப்பள்ளிப் பொறுப்பாளர் திரு. வாஞ்சிநாதன் ஆகியோர் ஆற்றிய நினைவுரைகளே இவை.

## கடற் புலிகளின் சிறப்புத் தளபதி சூசையின் உரையிலிருந்து

வடமராட்சிக் கடலில் நிகழ்ந்த சம்பவம் தமிழீழ மக்களை மிகவும் சோகத்திலாழ்த்தியது. ஏழு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இச்சம்பவத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

1987 அக்டோபர் மாதம், மூன்றாம் நாள் அதிகாலை 2.00 மணியளவில் 'கடற்புறா' தமிழகம் நோக்கிச் சென்றது. அப்படகில் எமது தளபதிகளுடன் போராளிகள் சிலரும் இருந்தனர்.

படகு நான்கு மைல் தூரம் சென்றிருக்கும். சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'டோரா' படகில் லெப்ரினன்ட் ஆரியதாசா வந்து எமது தளபதிகளின் படகை வழிமறிக்கின்றார்.

எமது போராளிகளால் அந்தச் சிங்கள கடற்படையினரின் படகை நிர்மூலமாக்கியிருக்கமுடியும். பின்னர் மீண்டு வந்திருக்கமுடியும். அந்தளவு வாய்ப்பிருந்தும் அப்போதைய போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறக்கூடாது என்பதற்காக, அவர்களின் அழைப்பின்பேரில் கடற்படை முகாமிற்குச் சென்றார்கள்.

அங்கு எமது போராளிகள் தங்க வைக்கப்பட்டனர்.

இச் சமயம், இந்திய அமைதிப் படைக்குத் தொடர்பாளராகவிருந்த பிரிகேடியர் பெர்னாண்டசுடன் நாம் தொடர்பு கொண்ட வேளை -

"இந்த உங்களுடைய தளபதிகளுக்கோ அல்லது உறுப்பினர்களுக்கோ எந்தவிதமான ஒரு பிரச்சினையும் வராது. உங்களிடம் அவர்கள் கையளிக்கப்படுவார்கள்" என்று எம்மிடம் சொன்னார்

மூன்றாம் நாள் மதியம் இத்தகவல் எமக்குக் கிடைத்தது. இந்த உறுதி மொழியைத் தந்த பெர்னாண்டசு அண்மையில் இந்தியாவின் புலனாய்வுத்துறைக்குப் பொறுப்பாகவிருந்து லெப்ரினன்ட் ஜெனரலாக பதவியுயர்த்தப்பட்டு வெடி விபத்திற்குள்ளாகி உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.
அவருடைய உறுதி மொழியை ஏற்று மூன்றாம் நாள் மாலை எமது போராளிகள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்த்திருந்த வேளையில் -

அமைதிப்டையின் தளபதி கர்சிரத்சிங்குடன் தொடர்பு கொண்டோம்.

"உங்களுடைய தளபதிகளும் மற்றும் உறுப்பினர்களும் பத்திரமாக உங்களிடமே சேர்க்கப்படுவார்கள். இதில் எதுவித பிரச்சினையுமே இல்லை" என்று அவர் தெரிவித்தார்.

நான்காம் நாள் காலையிலும் இதே மாதிரியே பதில் வந்தது.

நான்காம் நாள் மாலையில் பலாலி விமானத் தளத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள்

விமானத் தளத்திற்குப் பாதுகாப்பாக இந்திய இராணுவமும், அதன் கவசவாகனப் பிரிவும் புடைசூழ்ந்து நிற்க, சிறீலங்கா இராணுவமும் எமது போராளிகளை காவல் காத்துவந்தது.

4 ஆம் நாள் மதியமும் :பழைய உறுதி மொழியே வழங்கப்படுகிறது. மாலை எமது உறுப்பினர்கள் சந்தித்து பேசியபோதும் இதே உறுதி மொழிதான்.

அங்கு பதற்றநிலை காணப்பட்டது.

ஐந்தாம் நாள் காலை சந்திக்கச் சென்றபோது எவருக்குமே சந்திப்பிற்கான அனுமதி தரப்படவில்லை.

இந்தவேளை -
கொழும்பிலிருந்து வந்த சிறப்பு இராணுவ அணியொன்று இந்திய -இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்பையும் மீறி, எமது உறுப்பினர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள பகுதிக்குள் புகுந்து -சுய முயற்சியில் -தாமாகவே அவர்களை சுற்றி வியூகம் அமைத்து, கண்ணாடி அறையைச் சூழ நிலை எடுத்துக்கொள்கின்றது.

மாலை சரியாக 5.00 மணியை நெருங்கிக்கொண்டிருக்கையில், ஒரு சில அதிகாரிகள் உள்ளே சென்றசமயம் -

"எம்மை அணுகவேண்டாம். உள்ளே வரவேண்டாம். உள்ளே வந்து எம்மை அழைத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டால், 'சைனைற்' உட்கொள்வோம்" என எச்சரித்தனர்.
அதையும் பொருட்படுத்தாமல் கைது செய்வதற்கென அதிகாரிகள் முயற்சி செய்கையில் போராளிகள் 'சைனைற்' உட்கொள்கின்றனர்.

இலங்கை - இந்திய இராணுவங்கள் இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் -

சைனைற் உட்கொண்ட எமது உறுப்பினர்களை -

அந்த கொமாண்டோ அணி மூர்க்கத்தனமாகத் தாக்குகின்றது.
இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அன்று இருந்த ஜே. என். டிக்சிட், சமீபத்தில் செய்தித்தாளுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் -
"இலங்கை ஜனாதிபதியாகவிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா இவர்களை விடுவிக்க சம்மதம் தெரிவித்திருந்தார் எனவும், எனினும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியின் நடவடிக்கையால் தான் இந்த நிகழ்வு இடம்பெற்றது" என்றும் தெரிவித்திருந்தார் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.



## கடற் புலிகளின் அரசியல் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் வாஞ்சிநாதன் உரையிலிருந்து

"அவர்களுடைய பன்னிரு உடல்களும் பலாலியில் வைத்துள்ளோம். வந்து பெற்றுக்கொள்ளுங்கள்" என, எமது அமைப்பிற்கு இந்திய அமைதிப்படையால் தகவல் அனுப்பி வைக்கப்படுகின்றது.

முதல்நாள் வீரச்சாவை தழுவிக் கொண்டவர்களின் புகழுடல்களைக் கையளிப்பதற்கு மறுநாள் தகவல் அனுப்பி வைக்கப்பட்டது.

2.00 மணிக்கு உடல்களைத் தருவதாக தகவல் சொன்னது. நாம் 1.30 மணிக்கே அங்கு போய்ச் சேர்ந்துவிட்டோம்.

பலாலியில் அவர்களின் தளம் ஒன்றிலேயே முதல் வாசல் திறக்கப்பட்டது. இரண்டாவது வாசலிற்குப் போனோம்.

இரண்டு மணிக்கு நிச்சயமாக இந்த உடல்கள் வரும் என ஜவான்கள் சொன்னார்கள்.

காத்திருந்தோம். மூன்று மணியானது.
"உடல்கள் இன்னும் வரவில்லையா?" எனக்கேட்டோம்.

"உடல்களை நாம் தயார் செய்து கொண்டிருக்கின்றோம். இன்னும் 10 நிமிடத்தில் தருவோம்" என்று சொன்னார்கள்.

4.00 மணியானது.

"இன்னும் தயார் செய்யவில்லையா?" என்று கேட்டோம்.

"இதோ தயாரித்து விட்டோம். - வந்து கொண்டிருக்கிறது" என்றார்கள்.

5.00 மணியானது.
பொறுமையை இழந்து -
"உங்கள் அதிகாரியை வரச் சொல்லுங்கள்" என்று அந்தச் சிப்பாய்களைக் கேட்டோம்.

6.00 மணியளவில் ஒருவன் வந்தான். அவன் சொன்னான் -

"இன்னும் சில நிமிடங்களிலே உடல்கள் தரப்படும்" என,

7.00 மணியானது. காணவில்லை. நாம் அவர்களை துளைத்துத் துளைத்துக் கேட்டோம்.

ஏழரை மணி போல் இரண்டு பேர் வந்தார்கள். உங்களுடையவர்களின் உடல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஏழே முக்கால் மணியானது.

உடல்கள் எடுத்து வரப்படுகின்றன.
இரண்டு மணிக்கு தரப்படவேண்டிய உடல்களை நான்கு மணிக்காவது தருவார்கள் என எதிர்பார்த்தோம். அதனால் எம்மிடம் 'டோர்ச் லைற்' எதுவுமே இல்லை.

இருள் நேரம். எமது வாகனங்கள் வந்து அணிவகுத்து நிற்கின்றன. அவர்களின் திருவுடல்களை ஏற்றிச் செல்வதற்காக.

அந்த நேரத்தில் எமக்கு ஒரு சந்தேகம் முளைவிடுகிறது. இவர்களிடம் கூடவா ஒரு 'டோர்ச் லைற்' இல்லை?

நாம் அந்த உடல்களைப் பெற்றுக் கொண்டு எமது வாகனத்தில் வைப்பதற்காகத் தூக்குகின்றோம். சந்தேகம் வலுத்து நாம் ஒரு மெழுகுதிரியை பிடித்துப் பார்க்கின்றோம்.

புலேந்திரனின் உடல் தான் எமது கண்களில் முதல்பட்டது. எம்மிடையே அதிர்ச்சி.
சைனைற் உட்கொண்ட போராளிகளின் உடலில் காயங்கள் எப்படி வந்தன?

புலேந்திரனின் உடலைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தோம். கழுத்தின் முன்பக்கத்தில் ஒரு காயம், கழுத்திற்குப் பின்பக்கத்தில் இன்னொரு காயம்.

ஒவ்வொரு உடல்களையும் ஏற்றும் வேளையில் பார்த்தோம். குமரப்பாவின் உடலிலும் காயங்கள் இருந்தன.

இன்னொரு உடலிலும் காயங்கள் இருந்தன. இராணுவத்தின் துப்பாக்கியில் பொருத்தப்பட்டிருக்கும் கூரிய கத்தியால் (பயனைட்) ஏற்படுத்தப்பட்ட காயமே இவை.


எம்மிடம் உடல்களை ஒப்படைத்தவன் இந்திய அமைதிப்படையின் வைத்திய அதிகாரி என அறிந்தோம்.
அவனிடம் கேட்டோம். இந்த 12 முத்துக்களும் எமது சொத்துக்கள்... இவர்களை நீங்கள் என்ன செய்தீர்கள்?.

"நாம் ஒன்றும் செய்யவில்லை. உங்கள் உறுப்பினர்கள் தான் 'சைனைற்' உண்டார்கள்" என்றான் அவன்.
"சைனைற் உண்டது வாயால், கழுத்திலே கத்தியால் குத்தி எப்படி காயங்கள் வந்தன" என நாம் கேட்டோம்.
அவன் மௌனமாகவிருந்தான்.

"சைனைற் உட்கொண்டவுடன் கழுத்தில் கத்திக்காயம் வரும் என, உங்கள் மருந்துவப் புத்தகத்தில் உள்ளதா?" எனக் கேட்டோம்.
மீண்டும் சொன்னோம்.

"நீங்கள் உண்மையான ஒரு வைத்திய அதிகாரியாக இருந்தால், சொல்லுங்கள்... உண்மையில் சைனைற் உண்டு தான் இந்த மரணம் சம்பவித்தது என்று, உங்களால் சைனைற் உட்கொண்டு இறந்ததை உறுதிப்படுத்த முடியுமா? இவர்கள் சைனைற் உட்கொண்டவேளை கத்தியால் குத்தப்பட்டு மரணமடைந்தார்கள். அதற்கான அத்தாட்சிக் காயங்கள் இந்த உடல்களிலேயே இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துகிறேன்" என உங்களால் உறுதிவழங்க முடியுமா? எனக் கேட்டோம்.
அந்த அமைதிப்படையின் வைத்தியர் சொன்னான். "என்னால் முடியாது" என்று. ■

# தெளிவாகப் புலப்படும் அந்தப் பாதை வழியாக..




**U.T.O**
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

**L.T.T.E**
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

**W.T.C.C**
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

**T.C.G**
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

**T.C.C**
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

**T.C.C**
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

**T.C.C**
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

**T.C.C**
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

**T.C.C**
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

**T.C.C**
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943